ஆண்டு அறிக்கை

2017

இலங்கை போக்குவரத்துச் சபை

உள்ளடக்கம்

01 தொலைநோக்கு, பணி, குறிக்கோள்கள்

02 அறிமுகம்

03 செயற்திறனும் முன்னேற்ற மீளாய்வும்

04 நிதிக் கூற்று

05 கணக்காய்வாளர் அதிபதியின் அறிக்கை

தொலை நோக்கு

பிராந்தியத்தின் அதி சிறந்த போக்குவரத்தாளர்

பணி

பொது மக்களுக்கு பாதுகாப்பான நம்பத்தகுந்த வசதியுள்ள வீதிப் பயணிப் போக்குவரத்துச் சேவையை நியாயமான கட்டண முறையின் கீழ் சேவை அரப்பணிப்புடன் செயலாற்றும் உற்பத்தி வளமிக்க பணியாளரின் மூலம் சகல வளங்களையும் உச்ச நிலையில் பயன்படுத்தி பெற்றுக் கொடுத்து பொருளாதார ரீதியில் சமநிலையை பேணும் நிறுவனமாக இயங்கல்.

இலக்குகளும் குறிக்கோள்களும்

1 12 பிராந்திய அலுவலகங்கள் மூலம் சிறந்த தரமுடைய பயனுடைய பஸ் சேவைகளை ஊக்குவித்து அவற்றை கண்காணித்து இணைத்து ஆலோசனை வழங்குதல்.

2 பாடசாலை செல்லும் சிறார்களுக்கு திருப்திகரமான பஸ் சேவைகளை அளித்தல்.

3 பண நோக்கங்களுக்காக தனியார் துறையினரால் செயலாற்றப்படாமல் அசட்டை செய்யப்பட்டுள்ள வருவாய் அற்ற பாதைகளில் பஸ் சேவைகளை அளித்தல்.

4 புறக்கோட்டை மத்திய பஸ் நிலையத்தில் இருந்து தூர இடங்களுக்கு பஸ் சேவைகளை அளித்தல்.

5 பொது, தனியார் துறை போக்குவரத்து முகவர் நிலையங்களை இணைத்தல்.

6 விழாக்கள், விசேட வைபவங்கள், பாராளுமன்ற, மாகாண சபைத் தேர்தல்கள், முதலிய தேவைகளுக்கு பஸ் சேவைகளை இணைத்தல்.

7 தபால்களையும் பத்திரிகைகளையும் பஸ்களில் ஏற்றிச் செல்லல்.

8 பஸ் செயலாற்றலுக்காக பொது திறைசேரி, தேசிய போக்குவரத்து ஆணைக்குழு, மாகாண சபைகள், உரிய அமைச்சுகள் அத்துடன் இதர தொடர்புடைய முகவர் நிலையங்கள் ஆகியவற்றுக்கும் பிராந்திய அலுவலகங்களுக்கும் இடையே இணைப்பை ஏற்படுத்தல்.

9 இ.போ.ச சாரதிப் பயிற்சி பாடசாலைகளில் இருந்து நன்கு பயிற்றப்பட்ட ஒழுக்காறுடைய சாரதிகளை அளித்தல்.

10 சாரதிகளுக்கும் நடாத்துநர்களுக்கும் பொறிவலர்களுக்கும் மேற்பார்வை பணியாளர்களுக்கும் கருத்தரங்குகள், தொழிற் பாசறைகள் ஆகியவற்றை நடாத்துதல்.

11 பிராந்திய வேலைக்களங்களால் உற்பத்தி செய்யப்படும் அலகுகள் துணை அலகுகள் ஆகியவற்றை சாலைகளுக்கு அளித்தல்.

12 வயது வந்தோர்க்கும் பாடசாலை மாணவர்களுக்கும் கவர்ச்சிகரமான கழிவு விகிதங்களில் பருவகால சீட்டுக்களை அளித்தல்.

13 முக்கியமான மாற்று உறுப்புக்களை மாகாண வேலைக்களங்களுக்கு விநியோகிப்பதற்காக நாரேஹேன்பிட்டியில் உள்ள இ.போ.ச தலைமையகத்தில் இடப் பெயர்ச்சி களஞ்சியம் ஒன்றை பேணல்.

14 சாலைகளில் பாதுகாப்பு புலனாய்வுகளையும் திடீர் பரிசோதனைக் குழு செவ்வை பார்த்தல் முதலியவற்றையும் நடாத்துதல்.

அறிமுகம்

நாட்டின் பொருளாதார வளரச்சிக்கு போக்குவரத்தின் எல்லா அம்சங்களும் அவசியமானது என்பதில் ஐயத்திற்கு இடமில்லை. இக்கூற்று வீதிப் பயணப் போக்குவரத்துக்கும் விதிவிலக்கல்ல. இலங்கை போன்ற அபிவிருத்தி அடைந்து வரும் ஒரு நாட்டில் கிராமங்களையும் நகரங்களையும் அதன் மூலம் முழு நாட்டையுமே இணைக்கும் முக்கிய பாத்திரத்தை பஸ் வண்டி வகிக்கிறது.

1957.10.31 ஆம் திகதி 1957 ஆம் ஆண்டின் 48 ஆம் இலக்க மோட்டார் போக்குவரத்து அதிகார சட்டத்தின் பிரகாரம் நாடு முழுவதும் 80 பஸ் செயலாற்றுனர்களால் மொத்தமாக 1200 பாதைகளில் செயலாற்றப்பட்ட 3532 பதிவு செய்த பஸ்கள் தேசியமயமாக்கப்பட்டன. இதன் விளைவாக 1958.01.01 முதல் இலங்கை போக்குவரத்து சபை உருவாகியது.

அன்று முதல் 1977 ஆம் ஆண்டு வரை இ.போ.ச வீதிப் பயணப் போக்குவரத்தில் ஏக போக உரிமையை கொண்டிருந்தது. 1978 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க போக்குவரத்து சட்டத்தின் மூலம் இ.போ.சபையுடன் இணைக்கப்பட்ட 10 பிராந்திய போக்குவரத்துச் சபைகள் 1978 ஆம் ஆண்டு இ.போ.ச வை பன்முகப்படுத்தியன் மூலம் உருவானது. சிறிய அளவிலான அலகுகள் உள்ளூர் பிராந்திய தேவைகளுக்கும் உள்ளூர் போக்குவரத்துப் பிரச்சினைகளுக்கும் விரைவான தீர்வு கண்டு பயணம் செய்யும் பொது மக்களுக்கு வினைத்திறனுடைய பயனுள்ள விளைவுகளை இ.போ.ச பன்முகப்படுத்துவதன் மூலம் அடையலாம் என அரசு கருதியது.

ஆயினும் இ.போ.ச தொடர்ந்து பெருவாரியான நட்டத்தில் இயங்கியமையினாலும் பொருளாதாரம் சுதந்திரமயமாக்கப்படல் வேண்டும் என்ற நவீன எண்ணக்கருவினால் உருவாகிய பயணத் தேவையை பூர்த்தி செய்ய முடியாமையாலும் வீதிப் பயணிப் போக்குவரத்துக்கு தனியார் துறையை அனுமதிப்பது என முடிவு செய்யப்பட்டது.

பொதுத் துறையை மீள அமைக்கும் பணியில் ஒரு பகுதியாக இ.போ.ச மக்கள் மயமாக்கப்படுவதற்கென அடையாளம் காணப்பட்டது. அரசு தனியார்மயப்படுத்தலில் உறுதியான நம்பிக்கை வைத்திருந்தமையினால் இம்மாற்றம் அரச கூட்டுத்தாபனங்களை அதாவது அரச உடைமையாக்கப்பட்ட வியாபார முயற்சிகளை பொது கம்பனிகளாக மாற்றும் 1987 ஆம் ஆண்டின் 23 ஆம் இலக்க அதிகார சட்டத்தின் கீழ் இடம் பெற்றது.

மக்கள் மயப்படுத்தலின் போது இயங்கிய 93 போக்குவரத்து சாலைகள் ஒவ்வொன்றும் வெவ்வேறான வரையறுக்கப்பட்ட கம்பனிகளாயின. ஊழியர் மத்தியில் கம்பனியின் மொத்தப் பங்குத் தொகையின் அரைவாசி விநியோகிக்கப்பட்டு மீதிப் பகுதியை பொதுத் திறைசேரி வைத்திருந்தது. பெரும்பாலும் ஊழியர் மத்தியில் இருந்து தெரிவு செய்யப்பட்ட பணிப்பாளர் சபை இக்கம்பனிகளின் நிருவாகத்தை நடாத்தியது. மக்கள் மயமாக்கல் ஏனோ தானோ என்ற முறையில் செயற்படுத்தப் பட்டமையினால் விரும்பிய விளைவுகளை அடைய முடியவில்லை.

எனவே 1977 ஆம் ஆண்டு 1991 ஆம் ஆண்டின் 37 ஆம் இலக்க தேசிய போக்குவரத்து ஆணைக்குழு சட்டத்தின் திருத்தம் மூலம் பஸ்கம்பனிகள் 11 கொத்தணி பஸ் கம்பனிகளாக மாற்றப்பட்டன. கொத்தணி பஸ்கம்பனிகளாலும் எதிர்பார்த்த பலன் கிட்டவில்லை. மேலதிகமான பணியாளர், ஒழுக்காற்றில் பெருவீழ்ச்சி, நியாயமற்ற போட்டி, சமூகக் கடப்பாடுகள், தொழில் முறைமையின்மை, வினைத்திறன் இன்மை, செயலாற்று செலவுகளில் உயர்ச்சி, அரசியல் தொழிற்சங்க முறையற்ற தலையீடு, கட்டுமீறிய ஊழல் ஆகியன கொத்தணி பஸ்கம்பனிகளில் நிலவிய சில பிரச்சினைகள் ஆகும்.

மேற்குறித்த பிரச்சினைகளுக்கு தீர்வு காணும் பொருட்டு 2005 ஆம் ஆண்டு 27 ஆம் இலக்க சட்டத்தின் மூலம் 2005.10.19 ஆம் திகதி முதல் இலங்கை போக்குவரத்து சபை தாபிக்கப்பட்டது.

தலைவரின் செய்தி

2017.01.01 முதல் 2017.12.31 ஆம் திகதிவரையான காலவெல்லைக்குரிய இலங்கை போக்குவரத்துச் சபையின் (இ.போ.ச) ஆண்டு அறிக்கையை சமர்ப்பிப்பதில் பெரிதும் மகிழ்ச்சியடைகிறேன். 2019.12.27 ஆந் திகதி நான் இலங்கை போக்குவரத்துச் சபைத் தலைவராக பதவியேற்றேன். பரிசீலனையிலுள்ள காலத்தில் தலைவராக இலங்கைப் போக்குவரத்துச் சபையின் தலைவராக நான் பதவிவகிக்கவில்லையாயினும், 2017 ஆம் ஆண்டுக்குரிய ஆண்டறிக்கைக்கு செய்தியை விடுப்பதற்கு நான் கடமைப்பட்டுள்ளேன்.

இலங்கையிலுள்ள பாரிய அரச நிறுவகங்களில் இ.போ.ச வும் ஒன்றாகும். தேசியமயத்திற்கு முன்னர் போக்குவரத்து முறையை விரல்விட்டு எண்ணக்கூடிய ஒரு சில தனிப்பட்ட பஸ் உரிமையாளர்களே ஒழுங்கு செய்தனர். தேசிய செல்வம் ஒரு சிலரின் கரங்களில் மாத்திரம் திரண்டு கிடப்பது நியாயமற்றதென்பதாலும், தேசிய செல்வம் எல்லோர் மத்தியிலும் சமனாக பகிரப்பட வேண்டுமென்பதாலும் பஸ் சேவைகள் தேசிய மயமாக்கப்பட்டன. எனவே இ.போ.சவின் முன்னேற்றம் இந் நிறுவனத்தின் ஊழியர்களிலும் முகாமைத்துவத்திலுமே தங்கியுள்ளதென்பதை அறிந்து கொள்வது உசிதமாகும்.

பரிசீலனையிலுள்ள ஆண்டில் இ.போ.ச நாளொன்றுக்கு சராசரி 5266 பஸ்களை செயலாற்றியது. அக்காலப் பகுதியில் மொத்தமாக செயலாற்றிய கிலோமீற்றர் தொகை 0.8% ஆல் சிறிது குறைந்து 448 மில்லியன் கிலோமீற்றராகியது. பயணி கிலோமீற்றரும் 1.8% ஆல் குறைவடைந்து 15.8 பில்லியன் கிலோமீற்றராகியது. 2017 யூலை மாதம் முதலாம் திகதி பஸ் கட்டணங்கள் 6.3% ஆல் உயர்த்தப்பட்டதாயினும் இ.போ.ச முழு வருமானம் 3% ஆல் மட்டுமே உயர்ந்து 42.2 பில்லியன் ருபாவாகியது. 2017 ஆம் ஆண்டில் செயலாற்றல் செலவு 4.6% ஆல் குறைந்து 40.1 பில்லியன் ரூபாவாகியது. 2017 ஆம் ஆண்டின் நிதி வினைத்திறனின் விளைவாக செயலாற்றல் இலாபம் 20 பில்லியன் ரூபா கிட்டியது. ஆனால் 2016 ஆம் ஆண்டில் செயலாற்றல் நட்டம் 1 பில்லியன் ரூபா ஏற்பட்டது. பஸ் செயலாற்றல் குறைந்ததற்கு முக்கிய காரணம் 2017 மே மாதத்தில் நாட்டின் பல பகுதிகளில் ஏற்பட்ட வெள்ளப் பெருக்காகும்.

போக்குவரத்து, சிவில் விமானப் போக்குவரத்து அமைச்சிடமிருந்து பெற்றுக் கொண்ட நிதி மூலம் 283 பஸ்கள் புனருத்தாரணம் செய்யப்பட்டன. பஸ் செயலாற்றல் எண்ணிக்கை அதிகரிப்பு மூலம் பஸ்களில் மிகையாகப் பயணிகளை ஏற்றுதலை குறைத்தல், காலை மாலை பஸ் சேவைகளை அதிகரித்தல், பாடசாலை பஸ் சேவைகளையும் பஸ்களையும் அதிகரித்தல், சாரதிப் பயிற்சியில் திறன்களை வளர்த்தல், கணினி அறிவிலும் வியாபார முகாமைத்துவத்திலும் அலுவலர்கட்கு பயிற்சியளித்தல், ஒருங்கிணைக்கப்பட்ட பஸ் அட்டவணைகளை ஏற்படுத்தி சகல பிரதேசங்கட்கும் பல மாதிரியான (Multi Modal) கொடுப்பனவு முறையை அறிமுகப்படுத்தல், பஸ் புகையிரத போக்குவரத்து முறையை 55 பஸ்கள் மூலமாக பலப்படுத்தல் ஆகிய விடயங்கள் பஸ் போக்குவரத்து சேவையை மேம்படுத்துவதற்கு மேற்கொள்ளப்பட்ட சில நடவடிக்கைகளாகும்.

தேசிய போக்குவரத்து ஆணைக்குழுவின் உதவியுடன் 2017 ஆம் ஆண்டில் அரச துறை வீதிப் பயணிப் போக்குவரத்தின் வினைத்திறனையும் செயலாற்றல் எல்லையையும் மேம்படுத்துவதற்குத் தேவைமிகுந்த பாதிக்கப்பட்ட பகுதியைச் சார்ந்த பயணிகளின் போக்குவரத்துத் தேவைகளை நிறைவேற்றுவதற்கு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு ஒருங்கிணைந்த நேர அட்டவணைகளின்படி நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன. ஒருங்கிணைந்த நேர அட்டவணைகளின் படி கடவத்தையையும் மாத்தறையையும்

தொடர்புபடுத்தி தென்பகுதி அதிவேக நெடுஞ்சாலையிலும் வெளிச் சுற்றுவட்ட அதிவேக நெடுஞ்சாலைகளிலும் ஏறத்தாழ 50 பஸ்கள் செயலாற்றப்பட்டன. சிசுசரிய திட்டத்தின் கீழ் 90 புதிய பஸ்கள் உட்பட 1389 பஸ்கள் செயலாற்றப்பட்டன. இரவு நேரத்தில் பணிகளுக்கு பாதுகாப்பான அரச போக்குவரத்துச் சேவையை அளிப்பதற்காக நிசி சரிய பஸ் சேவை தொடர்ச்சியாக செயலாற்றப்பட்டது. கமி சரிய திட்டம் கிராமிய பிரதேசங்களிலுள்ள மக்களுக்குத் தேவையான பயண வசதிகளை வழங்குகிறது. 2017 ஆம் ஆண்டில் அரசு கொழும்பு நகரில் தெரிவு செய்யப்பட்ட வீதிகளில் முன்னுரிமை பஸ் வீதிகளைச் செயற்படுத்தியது.

முக்கியமாக பாஸ்கு ஞாயிறு பயங்கரவாதத் தாக்குதலாலும் கொவிட் 19 நோய் பரவலாலும் இ.போ.சபையின் நிதி வினைத்திறன் 2019 ஆம் ஆண்டில் மந்தகதியை அடைந்ததுடன் தற்போதும் அந் நிலை தொடர்கிறது. தற்போது நாளொன்றுக்குச் சராசரி 5790 பஸ்கள் சேவைக்கு அளிக்கப்படினும் அதில் 5200 பஸ்கள் மட்டுமே சராசரியாக நாளொன்றுக்குச் செயலாற்றப்படுகிறது. இ.போ.சபையின் சராசரி நாளாந்த வழிப்பட்டியல் வருவாய் ஏறத்தாழ 68 மில்லியன் ரூபாவாகும்.

சபையின் நோக்கங்களையும் குறிக்கோள்களையும் நிறைவேற்றுவதற்காக இ.போ.சபையின் சகல பணியாளர்களும் பணிப்பாளர் சபையும் அளிக்கும் பங்களிப்பு மகிழ்ச்சியூட்டுவதாயுள்ளது. அரச கொள்களை நிறைவேற்றுவதற்கு எனக்கு ஒத்துழைப்பு வழங்கிய மாண்புமிகு போக்குவரத்து அமைச்சருக்கும், மாண்புமிகு பஸ் போக்குவரத்துச் சேவை, புகையிரத சேவை மற்றும் மோட்டார் வண்டி, கைத்தொழில் இராசாங்க அமைச்சருக்கும், இவ்விரண்டு அமைச்சுக்களின் செயலாளர்கட்கும், திறைசேரி அலுவலர்கட்கும் மற்றும் விசேட அக்கறையுடைய யாவருக்கும் எனது நன்றியை நவில்கிறேன்.

தற்போது கோவிட் 19 நோயும் இன்னமும் பல பின்னடைவுகளும் எமக்கு ஏற்பட்டாலும் இந்நிலைக்கு ஈடு கொடுக்கக் கூடிய வகையில் எதிர்காலத்தில் உறுதியுடனும் வளர்ச்சியுடனும் நிறை வளத்துடனும் பயணிப்பதற்கு நாம் எல்லோரும் திடசங்கற்பம் பூண வேண்டியது முக்கியமாகும்.



கிங்ஸ்லி றணவக்க
தலைவர்
இலங்கை போக்குவரத்துச் சபை

செயலாற்றுப் பகுதி

01. 2017 ஆம் ஆண்டில் செயலாற்றலுக்கு நாளொன்றுக்கு அளிக்கப்பட்ட சராசரி பஸ் தொகை 6010 ஆகும். செயலாற்றிய பஸ்களின் தொகை நாளொன்றுக்கு சராசரி 5266 ஆகும். நாளொன்றுக்கு செயலாற்றிய சராசரி கிலோ மீற்றர் தொகை ஏறத்தாழ 1.23 மில்லியனாகும். நாளொன்றுக்கு ஈட்டிய சராசரி வழிப்பட்டியல் வருவாய் கிலோ மீற்றரொன்றுக்கு ரூ 60.63 ஆகும்.
02. இ.போ.சபையால் அளிக்கப்படும் விடியற்காலை, பிந்திய இரவு நேர பஸ் பயணங்கள் பயணிகளின் தேவைக்கேற்ப அதிகரிக்கும் வண்ணம் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.
03. இ.போ.சபையால் புகையிரத இணைப்புச் சேவையை மேம்படுத்தும் முகமாக பயணிகளின் தேவைக்கேற்ப புகையிரத நிலையங்களிலிருந்து புறப்படும் சேவைகளை மேலும் விரிவுபடுத்துவதற்காக புதிய சேவைகளை ஆரம்பிப்பதற்கும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.
04. "சிசு சறிய" திட்டத்தின் கீழ் சிசுசறிய பஸ்கள் 740 வரை செயலாற்றக்கூடியவாறு உள்ளதுடன், எதிர்காலத்தில் பாடசாலைகளினதும் மாணவர்களினதும் தேவையையும் வேண்டுகோள்களையும் கருத்திற் கொண்டு இச் சேவைகளைப் பலப்படுத்தி விரிவுபடுத்துவதற்கான ஒழுங்குகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.
05. சகல பஸ்களிலும் இலத்திரனியல் பயணச் சீட்டு இயந்திரங்களை உபயோகிப்பதன் மூலம் பயணிகட்கு அளிக்கப்படும் சேவையின் வினைத்திறனையும் உற்பத்தி வளத்தையும் உயர்த்த முடிந்துள்ளது.

இ.போ.ச வினால் சமூக நலனுக்குப் பங்களிப்பு

விடியற்காலையிலும் பிந்திய இரவு நேரங்களிலும் இறுதிப் பயணங்கள் செயலாற்றல்

விடியற்காலையிலும், பிந்திய இரவு நேரங்களிலும் இறுதிப் பயணங்களை ஏற்பாடு செய்வதன் மூலம் நாட்டின் பொருளாதாரத்திற்கு கிராமிய பணியாளர்களின் போக்குவரத்திற்கு நேரடியாகப் பங்களிப்பினும் நெடுங்காலமாக இதனால் கிட்டுவது நல்லெண்ணம் மாத்திரமேயாகும். ஆயினும் இ.போ.ச ஆற்றுகின்ற மற்றுமோர் சமூக கடமையெனக் கருதி இச் சேவைகள் பயணஞ் செய்யும் பொதுமக்களுக்காக தொடர்ந்தும் செயலாற்றப்படுகின்றன.

கிராமியப் பிரதேசங்களில் பஸ் செயலாற்றல்

கிராமிய பொருளாதாரத்தை வலுப்படுத்தும் முகமாக கிராமங்களையும் நகரங்களையும் இணைக்கும் முக்கிய போக்குவரத்து ஊடகமாக நேரடிப் பங்களிப்பை வழங்கி வருவது இ.போ.சபையேயாகும். பயணிகளின் தேவைகளைக் கருத்திற்கொண்டு இச் சேவைகளைத் தொடர்ச்சியாக அளிப்பதற்கு எப்போதும் நடவடிக்கை எடுப்பதுடன் எதிர்காலத்தில் புதிய பஸ்களை கொள்வனவு செய்து இச் சேவைகளைத் தொடர்ச்சியாக செயலாற்றுவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்படுகிறது. அத்துடன் இச்சேவைகளை மேம்படுத்தும் திட்டங்கள் தயாரிக்கப்பட்டு கிராமிய பொருளாதாரத்தை வளர்த்து கிராமப் போக்குவரத்தை ஒழுங்குபடுத்துவதற்கும் இது ஊன்று கோலாக உள்ளது.

பாடசாலை பஸ் சேவைகள் செயலாற்றல்

இ.போ.ச சபையால் எதிர்கால சந்ததியைக் கருத்திற் கொண்டு பாடசாலை மாணவர்களின் போக்குவரத்திற்கும் பிரமாண்டமான சேவையாற்றப்பட்டு வருகிறது. பயணிகள் தேவைகளிற்கேற்ப நீண்ட காலத்திற்கு உயர்ந்த இலாபமீட்டக்கூடிய சந்தரப்பங்களைப் பயன்படுத்தாது, எதிர்கால சந்ததியினரின் நன்மையைக் கருத்திற் கொண்டு வரையறுக்கப்பட்ட வளத்தின் மத்தியிலும் உரிய நேரத்திற்கு பிள்ளைகள் பாடசாலைகட்குக் கொண்டு செல்லப்பட்டு பாதுகாப்பாக மீண்டும் வீட்டுக்குக் கொண்டு செல்லப்படுகின்றனர்.

செயலகப் பகுதி

பணிப்பாளர் சபை உள்ளடக்கம்

இலங்கைப் போக்குவரத்துச் சபை பணிப்பாளர் சபை உறுப்பினர்கள் எண்ணிக்கை 07. அப்பிரதிநிதிகள் நியமனம் பின்வருமாறு:

மாண்புமிகு போக்குவரத்து அமைச்சரால் நியமிக்கப்பட்ட பணிப்பாளர் சபை உறுப்பினர்களின் எண்ணிக்கை - 04

உள்ளூராட்சி மாகாண சபைகள் அமைச்சு நியமிக்கும் பணிப்பாளர் சபை உறுப்பினர்களின் எண்ணிக்கை - 01

திறைசேரி நியமிக்கும் பணிப்பாளர் சபை உறுப்பினர்களின் எண்ணிக்கை - 01

போக்குவரத்து அமைச்சு நியமிக்கும் பணிப்பாளர் சபை உறுப்பினர் எண்ணிக்கை - 01

முழு பணிப்பாளர் சபை உறுப்பினர்களின் எண்ணிக்கை - 07

2017 ஆம் ஆண்டின் பணிப்பாளர் சபைக் கூட்டங்களில் பங்குபற்றிய உறுப்பினர்கள் விபரம்

திரு . றமால் சிறிவர்த்தன	பணிப்பாளர் சபை உறுப்பினர்- இ.போ.ச	தலைவர்	இ.போ.ச
திருமதி டீ.சீ.டபில்யூ கப்புகொடை	பணிப்பாளர் சபை உறுப்பினர்-இ.போ.ச	மேலதிக பணிப்பாளர் அதிபதி	பொது வியாபார முயற்சிகள் திணைக்களம், நிதி அமைச்சு
திருமதி என். நாதாவித்தாரண	பணிப்பாளர் சபை உறுப்பினர்- இ.போ.ச	மேலதிக செயலாளர் (நிர்/நிதி)	உள்ளூராட்சி, மாகாண சபைகள், ஜனநாயக ஆட்சி அமைச்சு
திரு ஏ.டீ ஜயவர்தன	பணிப்பாளர் சபை உறுப்பினர்- இ.போ.ச		
திரு. ஏ.டீ.எல்.பீ. சமரசிங்க	பணிப்பாளர் சபை உறுப்பினர்-இ.போ.ச	மேலதிச செயலாளர் (தொழிநுட்பம்)	போக்குவரத்து, சிவில் விமான சேவைகள் அமைச்சு

2017 ஆம் ஆண்டில் நடாத்தப்பட்ட பணிப்பாளர் சபைக் கூட்டங்கள்

01 ஆம் கூட்டம் - 2017.01.04
02 ஆம் கூட்டம் - 2017.02.07
03 ஆம் கூட்டம் - 2017.03.09
04 ஆம் கூட்டம் - 2017.04.06
05 ஆம் கூட்டம் - 2017.05.04
06 ஆம் கூட்டம் - 2017.07.18
07 ஆம் கூட்டம் - 2017.08.15
08 ஆம் கூட்டம் - 2017.09.19
09 ஆம் கூட்டம் - 2017.10.10
10 ஆம் கூட்டம் - 2017.11.16
11 ஆம் கூட்டம் - 2017.12.19

2017 ஆம் ஆண்டில் நடாத்தப்பட்ட பணிப்பாளர் சபைக் கூட்டங்கள் 11 ஆகும்.

2017ஆம் ஆண்டில் செயலகப் பகுதியின் பங்குகோரல்

01. இலங்கை போக்குவரத்துச் சபைத் தலைவர் கூட்டுகின்ற பணிப்பாளர் சபைக் கூட்டங்களின் அழைப்புக் கேற்ப பணிப்பாளர் சபைக் கூட்டங்களை நடாத்தலும், பணிப்பாளர் சபைக் கூட்டத் தீர்மானங்களை செயற்படுத்துவதற்காக பிரதம நிறைவேற்று அலுவலருக்கு முன்னடைவு அளித்து பிரதிப் பொது முகாமையாளர்கட்கும் பகுதி, பிரிவுத் தலைவர்கட்கும் அறிவித்தல்.

02. 2005 ஆம் ஆண்டின் 27 ஆம் இலக்க இலங்கைப் போக்குவரத்துச் சபைச் சட்டத்தின் II (அ) பிரிவின் பிரகாரம் பணிப்பளர் சபைக்கு அளிக்கப்பட்டுள்ள தத்துவங்கட்கேற்ப இ.போ.ச காணிகள், சொத்துக்களை முகாமைத்துவம் செய்தலும் நாளது வரையாக்கலும், புதிய உரித்தளிப்புகளை அல்லது தற்போதுள்ள காணிகளை கையுதிர்ப்பது தொடர்பாக நடவடிக்கை மேற்கொள்ளலும்.

03. தலைவரினதும் பணிப்பாளர் சபையினதும் அறிவுறுத்துரைகட்குமேற்ப இலங்கை போக்குவரத்துச் சபையின் குறிக்கோள்களை நிறைவேற்றுவதற்குத் தேவையான கூட்டங்களைக் கூட்டல், அத்தகைய கூட்டங்களில் மேற் கொள்ளப்படும் தீர்மானங்களைத் தலைவருக்கும் முக்கிய உறுப்பினர்கட்கும் சமர்ப்பித்தல்.

இலங்கை போக்குவரத்துச் சபையின் காணிகள், சொத்துக்கள் சார்ந்த நடவடிக்கைகளை மேற்கொள்ளல்.

01 சிறி ஜயவர்தனபுர கோட்டை மாநகர சபை எல்லை அபிவிருத்தி நடவடிக்கைகட்காக இ.போ.சபைக்கும் சிறி ஜயவர்தனபுர கோட்டை மாநகர சபைக்கும் இடையே நிபந்தனைகளுடனான ஒப்பந்த மொன்று பணிப்பாளர் சபைத் தீர்மானத்தின் பிரகாரம் அரச மதிப்பீட்டறிக்கை பெறப்பட்டு 25.01.2017 முதல் 24.01.2018 வரையான காலத்திற்கு செய்யப்பட்டது. 25.01.2017 முதல் 24.01.2018 வரையான காலத்திற்கு 2,260,000 ரூபா இலங்கை வங்கியின் இல. 070132 காசோலை மூலம் அறவிடப்பட்டது.

02 தேசிய, பிராந்திய மட்டத்தில் அபிவிருத்தி நடவடிக்கைகட்கு முன்னுரிமை அளித்து இ.போ.சபைக்கும் 'கே.ஈ ' ஈ பேட் அன்ட் சன்ஸ் ஹோல்டிங்ஸ் (தனியார்) கம்பனிக்கும் இடையே செய்து கொண்ட ஒப்பந்தத்திற்கேற்ப மாத்தளை மாகாண வேலைக்களம் அமைந்துள்ள காணியிலிருந்து பிரித்தொதுக்கப்பட்ட காணித்துண்டில் வாகனப் பழுதுபார்த்தலுக்கும் பொருட்கள் களஞ்சியத்திலிடுவதற்குமான நிருமாணம் தொடர்பாக 14.03.2016 - 13.03.2018 - 960,000/- ரூபாவிற்கு உட்பட்டு விடுவிக்கப்பட்டது.

03 இ.போ.ச புறக்கோட்டை மத்திய பஸ் நிலையக் கட்டடத் தொகுதியில் அமைந்துள்ள பயணிகள் உறையகம் இ.போ.ச பணிப்பாளர் சபைத் தீர்மானத்தின் படி மாதாந்த குத்தகை வாடகை செலுத்தும் அடிப்படையில் விடுவிக்கப்பட்டது. அதற்கேற்ப குறித்த காலவெல்லை 31.12.2015 முதல் 21.12.2020 வரையாகும். 21.12.2015 முதல் 20.12.2017 வரை மாதமொன்றுக்கு 120,000/- ரூபாவிற்கு அந் நிறுவகம் ஹேஷான் கேட்டர்ஸ் (தனி) கம்பனி மூலம் இ.போ.சபைக்கு பணம் செலுத்தப்பட்டு ஒவ்வொரு மாதமும் அது தொடர்பான கொடுப்பனவிற்கு பற்றுச் சீட்டு நிதிப் பிரிவால் வழங்கப்படுகிறது.

04 கழுத்துறை சாலையை விசாலமாக்குவதற்காக கொள்ளப்பட்ட 4 ஏக்கர் காணித்துண்டிற்கு 44 ஆம் பிரிவின் கீழ் உடைமையாக்கற் சான்றிதழ் பெறுவதற்காக 03.08.2009 லிருந்து கோரிக்கை விடப்படுகிறதாயினம், இன்னமும் அச் சான்றிதழ் கிடைக்கவில்லை. இது தொடர்பாக நினைவூட்டல் மடல் ஒன்றும் அனுப்பப்பட்டுள்ளது.

05 கஸ்பாவை சாலைக் காணி வீதி அபிவிருத்திக்காக 0.1490 ஹெக்டேயர் காணித்துண்டும் அதில் அமைந்துள்ள ஆதனமும் உடைமை கொள்ளப்பட்டது. இவ்வுடைமை கொள்ளல் தொடர்பான நட்டஈட்டு சோதனைக்கு அவர்கள் உட்படுத்தப்பட்டு பின்னர் 46,390,375/- ரூபா நட்டஈடாக இ.போ.சபைக்கு வழங்கப்பட்டது. இந் நட்ட ஈட்டில் முதல் கொடுப்பனவாக 16,018,500/- ரூபா இலங்கை வங்கியின் பத்தரமுல்லை கிளைக் காசோலை இல. 307341 மூலம் 22.12.2016 அன்று இ.போ.ச தலைவருக்கு கிடைத்தது. அக் காசோலை தலைவரின் சம இலக்கம் கொண்ட கடிதத்துடன் 17.01.2017 அன்று நிதிப் பகுதிக்கு அனுப்பப்பட்டது. இக் கொடுப்பனவு பெற்றுக் கொண்டமை தொடர்பாக 092386 என்ற இல பற்றுச் சீட்டு இ.போ.ச நிதிப் பகுதியிடமிருந்து பெற்றுக் கொள்ளப்பட்டது

.

06 கொத்மலை சாலைக் காணி அத்துமீறி குடியிருப்போர் பிடியிலிருந்து விடுவிக்கப்பட்டு அக் காணி சம்பந்தமாக நட்டஈடு அளிக்கப்பட்டதென்பதை ஆவணங்கள் மூலம் உறுதிப்படுத்தி 44 ஆம் பிரிவின் கீழ் 19.12.2016 முதல் உரித்தளித்தல் சான்றிதழுக்கான கோரிக்கை விடுக்கப்பட்டிருப்பினும், உரித்தளித்தல் சான்றிதழ் இதுவரை கிடைக்கவில்லை. காப்புறுதி எல்லைத் தொகையை அகற்றி மீதித் தொகைக்கு உரித்தளித்தல் சான்றிதழ் விடுவிப்பதற்கான பிரேரணை சமர்ப்பிக்கப்பட்டதாயினும் அது சபைக்கு பாதகமானதால் இ.போ.ச அதற்கு இணங்கவில்லை.

07 இ.போ.ச வென்னப்புவ சாலைக் காணி தொடர்பில் 44 ஆம் பிரிவின் கீழ் உரித்தளிக்கும் சான்றிதழ் 20.10.2016 ஆம் திகதியிலிருந்து கோரப்படுகிறதெனினும், தற்போது வரை அது கிடைக்கவில்லை.

08 கம்பஹா பந்தியமுல்லை காணியில் 27 பேர்ச்சசை தேசிய போக்குவரத்து வைத்திய நிறுவனத்திற்கு உடைமை உரித்தளிப்பதற்காக பணிப்பாளர் சபைத் தீர்மானத்தினை பெற்று அதன் பிரகாரம் காணி அளவீடு செய்யப்பட்டு வரைபடம் தயாரிக்கப்பட்டு நகர அபிவிருத்தி அதிகார சபையின் அனுமதி பெற்று அரச விலை மதிப்பீட்டுப் பெறுமதியான 20,250,000/- ரூபா செலுத்தப்பட்டது. இதற்கான 06.07.2017 ஆம் திகதியிட்ட 088475 இலக்க பற்றுச் சீட்டு நிதிப் பகுதியிலிருந்து எமக்கு கிடைத்தது.

09 இ.போ.ச கம்பஹா சாலைக் காணியில் 38.4 பேச்சர்ஸ் மோட்டார் வாகனப் போக்குவரத்து திணைக்களத்திற்கு உரித்தளிப்பதற்காக அளவீடு செய்யப்பட்டு, வரைபடம் தயாரிக்கப்பட்டு இ.போ.ச பணிப்பாளர்சபைத் தீர்மானத்தின் பிரகாரம் அரச விலை மதிப்பாளரின் பெறுமதி பெறப்பட்டது. அதற்கேற்ப அரச விலைமதிப்பு 432,000,000/- ரூபா ஆகும். இக் காணியை விடுவிப்பது தொடர்பாக போக்குவரத்து முகாமை அமைச்சுடன் தொடர்பு கொள்ளப்பட்டது.

10 தொழிற் திணைக்களத்தின் வேண்டு கோட்படி கட்டடம் நிருமாணிப்பதற்கு இ.போ.ச மூலம் அனுமதி பெறப்பட்டுள்ளதுடன் காணி, பாராளுமன்ற சீரமைப்பு அமைச்சின் உதவிப் பணிப்பாளரின் (காணி கொள்ளல்) கடிதத்திற்கேற்ப இக் காணிக்கு 44 ஆம் பிரிவின் கீழான உரித்தளிக்கும் சான்றிதழை மாத்திரம் இ.போ.ச பெற்றுள்ளதனால் உரித்தளிக்கும் போது ஏற்பட்ட செலவும் அதன் பின்னர் அபிவிருத்தி செய்யப்பட்டிருப்பின் அச் செலவையும் மாத்திரமே செலுத்துவதற்குத் தீர்மானிக்கப்பட்டதால் 12.09.2017 ஆம் திகதிய 17/1932/712/013-1 அமைச்சரவை தீர்மானம் தொடர்பாக போக்குவரத்து முகாமைத்துவ அமைச்சற்கு தொழில், தொழிற் சங்க உறவுகள் அமைச்சினால் அறிவிக்கப்பட்டுள்ளது.

11 பதுளை காணி மறு சீரமைப்பு சபையிடமிருந்து கொள்வனவு செய்யப்பட்ட 05 ஏக்கர் காணித்துண்டுக்கு உறுதி பெற்றுத் தருமாறு பல ஆண்டுகளாக கோரிக்கை விடப்பட்டிருப்பினும், இதுவரை உறுதி கிடைக்கவில்லை. இது தொடர்பாக மீண்டும் கலந்துரையாடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. இக்காணியில் நிதியமைச்சின் வேண்டுகோளின் பெயரில் 02 ஏக்கர் காணியை உரித்தளிப்பது தொடர்பாக இலங்கை போக்குவரத்துச் சபை வசமுள்ள காணியென உறுதிப் படுத்தத்தக்க ஆவணங்களைப் பெற்றுத் தருமாறு நிதி அமைச்சின் மூலம் காணி மறு சீரமைப்பு ஆணைக் குழுவிற்கு கோரிக்கை விடுக்கப்பட்ட போதும், அது தொடர்பான மறுமொழி கிடைக்கவில்லை.

12 பாணந்துறை பஸ் நிறுத்துமிடமுள்ள நிலம் தொடர்பாக பாணந்துறை நீதிமன்றில் தொடுக்கப்பட்ட வழக்கு தொடர்பாக இ.போ.ச சட்டப்பட்ட

பகுதியிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது. இவ்வழக்கு இன்னமும் நீதி மன்றில் நடைபெறுகிறது.

13 2017 "செமா" (SEMA) நிறுவகம் இ.போ.ச தொடர்பில் மேற்கொண்ட ஆய்வறிக்கையில் 07 எரிபொருள் நிரப்பும் நிலையங்கள் நிறுவப்படுவது உசிதமெனப் பிரேரிக்கப்பட்டிருந்தது. இதற்கான வலுவுள்ள சாலைகளைத் தெரிவு செய்யும் நடைமுறை ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

பாதுகாப்புப் பிரிவு

01 நாடு பூராவுமுள்ள இ.போ.ச விற்குச் சொந்தமான சகல நிறுவகங்கட்கும் பாதுகாப்பு ஏற்பாடு செய்தல்.

02 இ.போ.ச பிராந்திய அலுவலகங்கள், சாலைகள், உபசாலைகள், மாகாண வேலைக்களங்கள், சாரதிப் பயிற்சிப் பாடசாலகைள் ஆகியவற்றிலிருந்தும், பயணஞ் செய்யும் பொது மக்களிடமிருந்தும் கிடைக்கும் சகல எழுத்து மூல முறையீடுகளையும் விசாரித்தல்.

03 நாடு பூராவும் அமைந்துள்ள இ.போ.ச விற்குச் சொந்தமான நிறுவகங்கட்கு தீயணைப்பு உபகரணங்கள் வழங்கல்/ பழுதுபார்த்தல் / கண்காணித்தல்.

04 இ.போ.ச வழக்குகளில் பிணைப்பணம் காசாகச் செலுத்தப்படுமிடத்தும் தலைமையக நிதிக் கொடுக்கல் வாங்கல்களின் போதும் நாளாந்த அடிப்படையில் பாதுகாப்பு ஏற்பாடு செய்தல்.

05 இ.போ.ச தலைமையகம் உட்பட சகல இ.போ.ச வேலையிடங்களிலுமுள்ள சகல உழியர்கட்கும் பயணச் செல்கைச் சீட்டு வழங்கல்.

06 இ.போ.சபைக்கு சொந்தமான நிறுவனங்களிலுள்ள முக்கிய இ.போ.ச இடங்கட்கும், முக்கியமான ஆட்களுக்கும், வாகன நிறுத்துமிடங்கட்கும் பாதுகாப்பு ஏற்பாடு செய்வதுடன் உரிய முகவர் நிலையங்கட்கான சகல வினியோகங்களையும் வழங்கல்களையும் நிருவகித்து கண்காணித்தல்.

07 மோட்டார் போக்குவரத்து திணைக்களம், போக்குவரத்து அமைச்சு, தேசிய போக்குவரத்து ஆணைக்குழு, தேசிய போக்குவரத்து வைத்திய நிறுவகம் போன்ற போக்குவரத்து அமைச்சிற்கு சொந்தமான நிறுவகங்கட்கு பாதுகாப்பு ஏற்பாடு செய்து அதன் மூலம் வருவாய் ஈட்டல்.

விசேட புலனாய்வுப் பிரிவு

ஆண்டு	பூர்த்தியாக்கப்பட்ட புலனாய்வுகள் எண்ணிக்கை
2017	30

2017 ஆம் ஆண்டில் 10 சாலைத் திடீர்ப் பரிசோதனைகளும், 2017 ஆம் ஆண்டில் பாதி முற்றுப் பெற்ற 08 பரிசோதனைகளும் மேற்கொள்ளப்பட்டன.

பொறியியல் பகுதி

2017 ஆம் ஆண்டில் சாலைகட்கு வினியோகிக்கப்பட்ட 44 ஆசனங்களுடைய புதிய பஸ்கள்

தொடர் இல	**பிரதேசம்**	**சாலை**	**பஸ் இல**	**பஸ்கள் எண்ணிக்கை**	**அளித்த திகதி**	**அடிச்சட்ட இல**	**எஞ்சின் இல**
1	கொழும்பு	மகரகம	WP-NC-9541	4	2017/06/12	MB1PBEFA5HAGG0702	GHEZ428036
2			WP-NC-9543		2017/06/12	MB1PBEFA8HAGG0628	GTEZ439736
3			WP-NC-9544		2017/06/12	MB1PBEFA5HAGG0232	GTEZ439732
4			WP-NC-9548		2017/06/12	MB1PBEFA6HAGF6660	FDHZ433234
				4			
5	நுவரெலிய	ஹற்றன்	WP-NC-9513	10	2017/05/29	MB1PBEFA0HAGF7335	GYHZ420225
6			WP-NC-9514		2017/05/29	MB1PBEFA3HAGG0231	GTHZ439733
7			WP-NC-9516		2017/05/29	MB1PBEFA4HAGF9816	GTHZ436339
8			WP-NC-9517		2017/06/01	MB1PBEFA2HAGF2461	FGHZ432895
9			WP-NC-9518		2017/06/01	MB1PBEFAXHAGG0713	GYHZ420229
10			WP-NC-9522		2017/05/29	MB1PBEFA0HAGF7304	GYHZ420223
11			WP-NC-9524		2017/06/01	MB1PBEFA7HAGG0233	GTHZ439730
12			WP-NC-9527		2017/05/29	MB1PBEFA6HAGF9817	GTHZ436340

13			WP-NC-9528		2017/05/29	MB1PBEFA6HAGF9820	GTHZ436342
14			WP-NC-9529		2017/06/01	MB1PBEFA6HAGF6593	GAHZ416383
15		நுவரேலிய	WP-NC-9549	4	2017/06/13	MB1PBEFA1GEAV5443	GAEZ413894
16			WP-NC-9545		2017/06/13	MB1PBEFAXHAGF9822	GTHZ436335
17			WP-NC-9550		2017/06/13	MB1PBEFA3HAGG0715	GHEZ428485
18			WP-NC-9553		2017/06/13	MB1PBEFA2HAGG0611	GTHZ439737
	மொத்தம்			**14**			
	கூட்டு மொத்தம்			**18**			

எஞ்சின் கூறுகள் பொருத்தல் - 2017 ஆம் ஆண்டு

பிரதேசம்	**கட்டம் 1**	**கட்டம் 2**	**புதிய எஞ்சின் கூறுகள் எண்ணிக்கை**
கொழும்பு பிரதேசம்	36	29	65
கம்பஹா பிரதேசம்	27	17	44
கழுத்துறை பிரதேசம்	15	11	26
கண்டி பிரதேசம்	17	5	22
நுவுரெலியா பிரதேசம்	11	1	12
சப்ரகமுவ பிரதேசம்	23	10	33
றஜரட்ட பிரதேசம்	21	16	37
ஊவா பிரதேசம்	30	11	41
றுகுண பிரதேசம்	33	24	57
வயம்ப பிரதேசம்	36	16	52
கிழக்கு பிரதேசம்	36	13	49
வடக்கு பிரதேசம்	18	10	28
மத்திய பஸ் நிலையம்	3	0	3
அதி சொகுசு பஸ் உல்லாசப் போக்குவரத்து அலகு (SLTTS)	20	0	20
மொத்தம்	**326**	**163**	**489**

<u>பழுதுபார்க்கப்பட்ட எஞ்சின், கியர்ப்பெட்டி, பஸ் உடற்கோப்புகள் எண்ணிக்கை</u>

பழுதுபார்க்கப்பட்ட எஞ்சின்கள் எண்ணிக்கை - 665

பழுதுபார்க்கப்பட்ட கியர்ப் பெட்டிகள் எண்ணிக்கை - 827

பழுதுபார்க்கப்பட்ட உடற் கோப்புகள் எண்ணிக்கை - 272

கொள்வனவு செய்யப்பட்ட எஞ்சின் கூறுகள் - 489

உள்ளகக் கணக்காய்வு பகுதி

2017 ஆம் ஆண்டில் நிறைவேற்றிய நடவடிக்கைகளின் பொழிப்பு

<u>நிதிப் பகுதி</u>

01. 2017 ஆம் ஆண்டின் கணக்காய்வுத் திட்டமும் கணக்காய்வு நிகழ்ச்சித் திட்டமும் தயாரித்தல்
02. காசு சரி பார்த்தல்
03. காசேடு செவ்வை பார்த்தல்
04. சம்பளம் மேலதிக நேர வேலை செவ்வை பார்த்தல்
05. சம்பளம், விழா முற்பணம் செவ்வை பார்த்தல்
06. நடாத்துநரின் சோர்வுப் பணம் செவ்வை பார்த்தல்
07. பணிக்கொடை கொடுப்பனவு செவ்வை பார்த்தல்
08. நாளாந்த மொத்த பதிவேடு செவ்வை பார்த்தல்
09. உள்ளூர் கொள்வனவை செவ்வை பார்த்தல்
10. இறுதிக் கணக்குகள் கணக்காய்வு
11. கணக்குப் பகுதியின் இதர பதிவேடுகளை செவ்வை பார்த்தல்

தொகைக் களஞ்சியம்

01. பருவகாலச் சீட்டு பதிவேடு செவ்வை பார்த்தல்
02. களஞ்சியப் பொருள் செவ்வை பார்த்தல்
03. எரிபொருள் நுகர்வு செவ்வை பார்த்தல்
04. மாற்றுறுப்புகள் நுகர்வு செவ்வை பார்த்தல்
05. டயர் நுகர்வை செவ்வை பார்த்தல்
06. வில்லுத் தகடுகள் நுகர்வை செவ்வை பார்த்தல்
07. கைதவிர்ப்பு செயற்பாடுகள்

செயலாற்றுப் பகுதி

01. வழிப்பட்டியல் செவ்வை பார்த்தல்
02. விபத்துப் பதிவேட்டை செவ்வை பார்த்தல்
03. சுழற்சி கடமைப் பட்டோலை செவ்வைபார்த்தல்
04. O-51, O-50, O-40, O-41,பதிவேடுகளை செவ்வை பார்த்தல்

பொறியியல் பகுதி

01. பழுதடைவு பழுதுபார்த்தல்
02. மிதமிஞ்சிய மாற்றுறுப்புகள் நுகர்வு
03. அகால பழுதுற்ற மாற்றுப்புகளை செவ்வை பார்த்தல்
04. பொறியியல் பிரிவின் ஏனைய பதிவேடுகளை செவ்வை பார்த்தல்

ஏனையவை

01. ஒழுக்காற்று பதிவேடுகளை செவ்வைபார்த்தல்
02. விடுதலை பதிவேடுகளை செவ்வை பார்த்தல்
03. சபைச் சொத்துக்களை செவ்வை பார்த்தல்
04. சாரதிப் பயிற்சிப் பாடசாலைகளின் வருவாய், செலவு, பேணல், நிருவாகம், ஆகிய பகுதிகளை கணக்காய்விற்கு உட்படுத்தல்
05. சுற்றுலா வங்களாக்களை செவ்வை பார்த்தல்
06. ஷாலிகா மண்டபம், விளையாட்டரங்கு செவ்வை பார்த்தல்
07. தலைமையலுவலகத்தின் பொதுச் செலவுகள் பகுப்பாய்வு (நீர்,தொலைபேசி, மின்சாரம், எழுதுகருவிவகை)
08. அரச கொள்கை பணிப்பாளர் சபைத் தீர்மானங்கட்கிணங்க செயற்படுத்தப்பட்ட விசேட செய்திட்டங்கள்
09. பிரந்திய உள்ளகக் கணக்காய்வாளர்களின் மாதாந்த மாநாடு நடாத்தல்
10. காலாண்டு கணக்காய்வு, முகாமைத்துவ குழுக் கூட்டங்களை நடாத்துதல்
11. தலைவர் கட்டளையிடும் விசேட செவ்வை பார்த்தல்கள்
12. பிராந்திய ரீதியாக ஆண்டு தோறும் கணக்காய்வு மாநாடுகளை நடாத்துதல்

மனித வள முகாமைத்துவப் பகுதி

30000/- ரூபா படியில் முற்றும் ஒப்பந்த அடிப்படையில் 06 மாத காலத்திற்கு செய்யப்பட்ட சாரதி/நடாத்துநர் நியமனங்கள்

நியமனத் தன்மை	தொகை
ஒப்பந்த சாரதிகள்	346
ஒப்பந்த நடாத்துநர்கள்	442
மொத்தம்	788

நிறைவேற்று நியமனங்கள் பற்றிய விவரம்

நியமனத் தன்மை	எண்ணிக்கை
நிரந்தர நியமனங்கள்	35
தழுவல் நியமனங்கள்/ஒப்படை	49
பதவி உயர்வுகள்	50
தழுவல் நியமன நிரந்தரப்படுத்தல்கள்	-
இடமாற்றங்கள்	47
ஒப்பந்த நியமனங்கள்	-
புதிய ஆட்சேர்ப்புகள்	01
மொத்தம்	182

மீள வேலையளித்தல்

நியமனத்தின் தன்மை	எண்ணிக்கை
மீள வேலை	37
மொத்தம்	37

செய்முறைப் பயிற்சியளித்தல்

நியமனத்தின் தன்மை	எண்ணிக்கை
கணனிப் பிரிவு பயிற்சி	26
கணக்குப் பிரிவு பயிற்சி	05
தொழிநுட்ப பிரிவு பயிற்சி	18
மொத்தம்	49

நிறைவேற்றுத் தரம் அல்லாத இடமாற்றங்கள்

நியமனத்தின் தன்மை	எண்ணிக்கை
இடமாற்றம்	314
மொத்தம்	314

ஒழுக்காற்றுப் பிரிவு
ஒழுக்காற்று கோவை விவரம்

நியமனத்தின் தன்மை	எண்ணிக்கை
முடித்த ஒழுக்காற்றுக் கோவைகள்	2694
முடித்த மேன்முறையீட்டுக் கோவைகள்	332
மொத்தம்	3026

திடீர்ப் பரிசோதனைக் குழுப் பிரிவு

2017 ஆம் ஆண்டில திடீர்ப் பரிசோதனைகளின் முன்னேற்ற அறிக்கை (நாடு பூராவும்)

மாதம்	குழுக்கள் எண்ணிக்கை	செவ்வை பார்த்தல் எண்ணிக்கை	செவ்வை பார்த்த பஸ்கள் எண்ணிக்கை	பாரதூரமான குற்றங்கள் (IV)	சிறு குற்றங்கள் (V)	தண்டம் விதித்த பயணிகள் எண்ணிக்கை	விதித்த தண்டப் பணம்
ஜனவரி	51	725	9,154	68	195	306	113,162.00
பெப்ரவரி	47	612	8,889	59	198	311	115,583.00
மார்ச்	45	658	8,318	58	182	260	91,662.00
ஏப்ரல்	51	711	9,579	61	260	461	153,672.00
மே	44	868	8,783	58	187	287	102,095.00
யூன்	46	600	8,602	86	233	302	112,629.00
யூலை	42	645	8,548	92	169	315	117,064.00
ஆகஸ்ட்	42	629	9,122	77	175	348	125,330.00
செப்தம்பர்	44	603	7,729	76	151	291	102,245.00
ஒக்டோபர்	46	620	8,523	90	180	277	100,826.00
நவம்பர்	39	469	6,392	62	146	220	78,832.00
டிசெம்பர்	34	430	5,135	64	117	158	60,466.00
மொத்தம்	**531**	**7,570**	**98,774**	**852**	**2,193**	**3,536**	**1,273,566.00**

திடீர்ப் பரிசோதனைக் குழுப் பிரிவு

2017 ஆம் ஆண்டில் திடீர் பரிசோதனைகளின் முன்னேற்ற அறிக்கை (தலைமையலுவலகம்)

மாதம்	குழுக்கள் எண்ணிக்கை	செவ்வை பார்த்தல் எண்ணிக்கை	செவ்வை பார்த்த பஸ்கள் எண்ணிக்கை	பாரதூரமான குற்றங்கள் (IV)	சிறு குற்றங்கள் (V)	தண்டம் விதித்த பயணிகள் எண்ணிக்கை	விதித்த தண்டப் பணம்
ஜனவரி	06	89	1,305	24	34	50	17,454.00
பெப்ரவரி	05	68	1,021	20	23	37	14,196.00
மார்ச்	05	52	814	14	15	40	14,900.00
ஏப்ரல்	04	67	1,150	16	13	41	14,043.00
மே	04	60	783	15	10	27	10,412.00
யூன்	04	70	979	23	18	39	18,822.00
யூலை	04	61	936	38	16	40	13,782.00
ஆகஸ்ட்	04	65	960	33	15	48	18,548.00
செப்தம்பர்	04	59	838	26	10	38	14,772.00
ஒக்டோபர்	04	67	878	31	07	18	6,624.00
நவம்பர்	04	50	715	19	08	24	9,402.00
டிசெம்பர்	04	51	690	17	03	16	6,660.00
மொத்தம்	**52**	**759**	**11,069**	**276**	**172**	**418**	**159,615.00**

திட்டமிடல் அபிவிருத்திப் பிரிவு

திட்டமிடல் பிரிவின் செயற்திட்டம்				
உத்தேச நடவடிக்கைகள்	**பௌதீக இலக்கு**			
	காலாண்டு			
	1	**2**	**3**	**4**
2018 ஆம் ஆண்டுக்கான அபிவிருத்தி செயற் திட்டம் தயாரித்தல்	தயாரிக்கப்பட்டு சமர்ப்பிக்கப்பட்டது			
2017 ஆம் ஆண்டு ஜனவரி மாதத்திற்கான முன்னேற்ற அறிக்கை தயாரித்தல்	தயாரிக்கப்பட்டு சமர்ப்பிக்கப்பட்டது			
2017 ஆம் ஆண்டு பெப்ரவரி மாதத்திற்கான முன்னேற்ற அறிக்கை தயாரித்தல்	தயாரிக்கப்பட்டு சமர்ப்பிக்கப்பட்டது			
2017 ஆம் ஆண்டு மார்ச் மாதத்திற்கான முன்னேற்ற அறிக்கை தயாரித்தல்	தயாரிக்கப்பட்டு சமர்ப்பிக்கப்பட்டது			
2017 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதத்திற்கான முன்னேற்ற அறிக்கை தயாரித்தல்	தயாரிக்கப்பட்டு சமர்ப்பிக்கப்பட்டது			
2017 ஆம் ஆண்டு மே மாதத்திற்கான முன்னேற்ற அறிக்கை தயாரித்தல்	தயாரிக்கப்பட்டு சமர்ப்பிக்கப்பட்டது			
2017 ஆம் ஆண்டு யூன் மாதத்திற்கான முன்னேற்ற அறிக்கை தயாரித்தல்	தயாரிக்கப்பட்டு சமர்ப்பிக்கப்பட்டது			
2017 ஆம் ஆண்டு யூலை மாதத்திற்கான முன்னேற்ற அறிக்கை தயாரித்தல்	தயாரிக்கப்பட்டு சமர்ப்பிக்கப்பட்டது			
2017 ஆம் ஆண்டு ஆகஸ்டு மாதத்திற்கான முன்னேற்ற அறிக்கை தயாரித்தல்	தயாரிக்கப்பட்டு சமர்ப்பிக்கப்பட்டது			
2017 ஆம் ஆண்டு செப்டம்பர் மாதத்திற்கான முன்னேற்ற அறிக்கை தயாரித்தல்	தயாரிக்கப்பட்டு சமர்ப்பிக்கப்பட்டது			
2017 ஆம் ஆண்டு ஒக்டோபர் மாதத்திற்கான முன்னேற்ற அறிக்கை தயாரித்தல்	தயாரிக்கப்பட்டு சமர்ப்பிக்கப்பட்டது			
2017 ஆம் ஆண்டு நவம்பர் மாதத்திற்கான முன்னேற்ற அறிக்கை தயாரித்தல்	தயாரிக்கப்பட்டு சமர்ப்பிக்கப்பட்டது			
2017 ஆம் ஆண்டு டிசம்பர் மாதத்திற்கான முன்னேற்ற அறிக்கை தயாரித்தல்	தயாரிக்கப்பட்டு சமர்ப்பிக்கப்பட்டது			
2018-2021 ஆண்டுகட்கான கூட்டிணைந்த திட்டம் தயாரித்தல்	தயாரிக்கப்பட்டு சமர்ப்பிக்கப்பட்டது			

சபை தொடர்பான சகல பொருத்தமான புள்ளிவிவர தகவல்களைச் சேர்த்து நாளது வரையாக்கல்	ஆண்டு பூராவும் சேகரித்து சமர்ப்பிக்கப்பட்டது
(சாரதிப் பயிற்சிப் பாடசாலைகள், மாகாண வேலைக் களங்கள் , சுற்றுலா வங்களாக்கள் உள்ளடங்கலாக) மாதாந்த இலாப நட்டக் கணக்கும் காசுப் பாய்ச்சல் கூற்றும் தயாரித்தல்	ஆண்டு பூராவும் சேகரித்து சமர்ப்பிக்கப்பட்டது
மாகாண வேலைக்களங்கள், சாரதிப் பயிற்சிப் பாடசாலைகள், சுற்றுலா வங்களாக்கள் தொடர்பான முன்னேற்ற அறிக்கைகள் தயாரித்தல்	ஆண்டு பூராவும் சேகரித்து சமர்ப்பிக்கப்பட்டது
கணக்காய்வு முகாமைத்துவ செயற்குழு அறிக்கை தயாரித்து சமர்ப்பித்தல்	ஆண்டு பூராவும் சேகரித்து சமர்ப்பிக்கப்பட்டது
போக்குவரத்து அமைச்சாலும் இதர அரச நிறுவகங்களாலும் வேண்டப்படும் விசேட அறிக்கை தயாரித்து சமர்ப்பித்தல்	ஆண்டு பூராவும் சேகரித்து சமர்ப்பிக்கப்பட்டது

கேள்விப் பத்திர சபை

2017.07.07 ஆம் திகதியிலிருந்து கேள்விப்பத்திர சபை மூலம் கீழ்க்காணும் செயற்பாடுகட்கு கோரப்பட்ட கூறுவிலைகளின் பொழிப்பு

தொடர் இல	திகதி	நிறைவேற்றிய விடயங்கள்	கேள்விப் பத்திரம் திறக்கப்பட்ட திகதி	தொடர் இல
01	2017-01-19	இ.போ.ச தலைமையலுவலகத்தில் உபயோகத்திலிருந்து அகற்றப்பட்ட "டோனர்" விற்பனை	SLTB/TS /னெர்/Scrap/(2017)	2017-01-27
02	2017-01-19	இ.போ.ச சட்டப் பகுதியைச் சேர்ந்த கணனி அலுவலகத்திற்கு அலுமினியக் கூரை பொருத்தல்	SLTB/TS/Civil/2017/02	2017-02-06
03	2017-01-19	இ.போ.ச பிரதம நிறைவேற்று அலுவலர் அலுவலகத்தைச் சேர்ந்த பணியாளர் அலுவலகத்தில் அலுமினியப் பிரிவினைக் கதவுகள் பொருத்தல்	SLTB/TS/Civil/2017/03	2017-02-06
04	2017-01-19	தலங்கமை சாலை பொறியியல் வாகனக் கொட்டகை கூரை பழுது பார்த்தல்	SLTB/TS/Civil/2017/04	2017-02-06
05	2017-01-19	மாவனல்லை சாலையின் உத்தேச மலசலகூடம் நிருமாணித்தல்	SLTB/TS/Civil/2017/05	2017-02-07
06	2017-01-19	New Insurance coverage for year - 2017 (01)	SLTB/TS/GEN/25/2017	2017-01-24
07	2017-01-24	இ.போச விற்கு இலகு கொடுப்பனவு அடிப்படையில் (50-54) ஆசனங்களுள்ள 08 அதி உல்லாச பஸ்கள் கொள்வனவு செய்தல்	SLTB/TS/GEN/2017/65	2017-02-14

08	2017-01-24	இ.போ.ச தூர சேவைக்கு (42-45) ஆசனங்களுள்ள 20 பஸ்கள் இலகு கொடுப்பனவு அடிப்படையில் கொள்வனவு செய்தல்.	SLTB/TS/GEN/2017/65-I	2017-02-15
09	2017-01-31	Bid for the 125 Nos. of computers, UPS Machines & 60 Nos. Printers to SLTB.	SLTB/TS/GEN/2017/74-I	2017-02-14
10	2017-01-31	இ.போ.ச விற்கு மாத வாடகைக்கு கொடுப்பனவு அடிப்படையில் வாகனங்கள் கொள்வனவு செய்வதற்கான கூறுவிலைகள்	SLTB/TS/GEN/2017/96-II	2017-02-22
11	2017-02-03	New Insurance Coverage for year 2017 (02)	SLTB/TS/GEN/25 II/2017	2017-02-13
12	2017-02-03	Additional details for the supply, Delivery & Installation of 110 Nos. Finger print Machines for SLTB depots.	SLTB/TS/GEN/52/2016	2017-02-13
13	2017-02-09	Quotation for the supply of HP Scan Jet Scanner for Secretariat Division.	SLTB/TS/GEN/99/2017	2017-02-23
14	2017-02-13	இ.போ.ச விற்கு 32-35 ஆசனங்களுள்ள புதிய சிறிய பஸ்கள் 250 கொள்வனவு செய்தல்	MT/04/09/CT/430	2017-03-23
15	2017-02-13	Bid for the obtaining of new insurance coverage for Orugodawatte fuel filling station	SLTB/TS/GEN/25/Orugodawatta/FS/2017	2017-02-21
16	2017-02-21	Quotation for supply of ID card printing materials for SLTB	SLTB/TS/GEN05/2017	2017-03-06
17	2017-02-21	இ.போ.ச அசோக் லேலன்ட், டாட்டா பஸ் மாதிரிகட்கு உருளைக் கட்டையும் உருளைத்தலையும் கொள்வனவு செய்தல்	SLTB/TS/GEN/2017/02-01	2017-03-10
18	2017-02-21	இ.போ.ச விற்கு ஒளிப்படப் பிரதி செய்யும் இயந்திரமும் வருடும் இயந்திரமும் கொள்வனவு செய்வதற்கும் வினியோகிப்பதற்கும்	SLTB/TS/GEN/Photocopy & Fax Machine/107/2017	2017-03-07

19	2017-02-21	இ.போ.ச தலைமை அலுவலகத்திலுள்ள ஒளிப்படப் பிரதி செய்யும் இயந்திரங்களைப் பழுது பார்ப்பதற்கான கூறு விலை கோரல்	SLTB/TS/Photocopy Machine Repairs/2017	2017-02-27
20	2017-03-03	Bid for the supply & Installation of Local Area Network	SLTB/TS/GEN/74-III/2017	2017-03-22
21	2017-03-06	இ.போ.ச அம்பாறை தயர் தொழிற் சாலையில் பவின் தூள் விற்பனைக்கான கூறு விலை கோரல்	SLTB/TS/GEN/93	2017-03-20
22	2017-03-06	Quotation for the supply & Delivery of Stationery Items for SLTB	SLTB/TS/GEN/2017/19	2017-03-27
23	2017-03-17	இ.போ.ச தூர சேவை பஸ்கட்கு இருக்கைகள்/கணினி மூலம் ஒதுக்கீடு செய்வதற்கான கூறு விலை கோரல் (Online Seat Reservation)	SLTB/TS/GEN/2017/100	2017-04-20
24	2017-04-11	இ.போ.ச பஸ்கட்கு புதிய பற்றறிகள் கொள்வனவு செய்தல்	SLTB/TS/GEN/28/2017	2017-05-03
25	2017-04-20	அசோக் லேலன்ட் ஹீனோ எஞ்சினுக்கு முழுப் பழுது பார்த்தல் சேவை அளிப்பதற்காக	SLTB/TS/GEN/2017/55	2017-05-03
26	2017-04-20	வயம்ப,ஊவா,றஜறட்ட, கிழக்கு, கண்டி, நுவரெலிய ஆகிய பிரதேசங்கட்கு பாதுகாப்புச் சேவை பெற்றுக் கொள்ளல்	SLTB/TS/GEN/PS/2017/01	2017-05-15
27	2017-04-24	யூடோன் பஸ்கட்குத் தேவையான புதிய டயர்கள் 600 வினியோகித்தலும் போக்குவரத்தும்	SLTB/TS/GEN/2017/65	2017-05-16
28	2017-05-05	தலைமை அலுவலக சிற்றுண்டிச் சாலை நடாத்துவதற்கான கேள்விப் பத்திரம் கோரல்	SLTB/TS/Canteen/2017	2017-05-29

29	2017-05-23	இ.போ.ச பஸ்கட்கு புதிய டயர் கூறுகள் 33672 வினியோகித்தலும் போக்குவரத்தும்	MT/04/09/CT/434	2017-06-20
30	2017-05-23	இ.போ.ச பஸ்கட்கு மசகெண்ணெய் கொள்வனவு செய்தல்	MT/04/09/CT/435	2017-06-21
31	2017-05-23	2017 ஆம் ஆண்டிற்கு டயர்கள் மீளநிரப்பலும் பதனிடலும்	MT/04/09/CT/436	2017-06-22
32	2017-05-30	Repairing of Engineering office building for pool vehicle unit at Meethotamulla Depot	SLTB/TS/Civil/2017/16-VI	2017-06-09
33	2017-06-02	Repairs & Maintenance of main building and yard at Aralaganwila bus stand	SLTB/TS/GEN/2017/16-VII	2017-06-16
34	2017-06-02	Supply and Delivery of tools & machinery	SLTB/TS/GEN/2017/55-I	2017-06-23
35	2017-06-02	Supply and Delivery of 90,000 meters of rexine	SLTB/TS/GEN/2017/28	2017-06-27
36	2017-06-12	இ.போ.ச சாரதிப் பயிற்சிப் பாடசாலைகட்கு 24 உந்துருளிகள் கொள்வனவு செய்தல்	SLTB/TS/GEN/39/2017	2017-06-21
37	2017-07-07	Quotation for the supply & Delivery of Identity card printing Raw Materials for SLTB	SLTB/TS/GEN/26/2017	2017-07-24
38	2017-07-07	Quotation for the supply of Server Machine for Finger print Machines to SLTB	SLTB/TS/GEN/2017/74	2017-07-05
39	2017-07-07	இ.போ.ச சாலையில் உபயோகிக்கப் படும் GPRS சீட்டு இயந்திரங் கட்கு தேவையான வெப்பத்தாள்கள் (THERMAL) சீட்டுச் சுருள்கள் வழங்கலும் போக்குவரத்தும்	SLTB/TS/GEN/2017/36-2	2017-07-24
40	2017-07-07	தலைமை அலுவலக சிற்றுண்டிச் சாலை நடாத்துவத்றகான கேள்விப் பத்திரம் கோரல்	SLTB/TS/CANTEEN/2017	2017-07-25
41	2017-07-07	Paint requirements for the year 2017	SLTB/TS/GEN/2017/04	2017-07-26

42	2017-07-17	Quotation for the procuring of Spare Parts for Engine Overhauling	SLTB/TS/GEN/2017/02	2017-07-20
43	2017-07-17	Quotation for the Repairing damaged Boundary wall and Anderson Flats side at Shilika Ground	SLTB/TS/CIVI/2017/16-VIII	2017
44	2017-07-17	253/3596 கப் வண்டியின் காற்றுச் சீராக்கல் முறையைப் பழுதுபார்த்தல் (றஜறட்ட பிரதேசம்)	SLTB/TS/GEN/2017/95	2017-08-08
45	2017-07-18	இ.போ.ச விற்கு மாதாந்த வாடகை செலுத்தும் அடிப்படையில் வாகனங்கள் பெறுவதற்கான கூறு விலைகள் கோரல்	SLTB/TS/GEN/2017/96-III	2017-08-09
46	2017-08-01	Quotation for the main gate (With Coloumns) paving interlock stones at entrance way Katharagama Circuit Bunglow - Katharagama2017-08-15	SLTB/TS/CIVIL/2017/16/IV	2017-08-15
47	2017-08-01	Quotation for the construction of Entrance Road way at Elpitiya Depot	SLTB/TS/CIVIL/2017/16/X	2017-08-15
48	2017-08-16	Quotation for the supply & Delivery of printers for Supplies Division & Udahamulla Depot	SLTB/TS/GEN/2017/74-III	2017-09-04
49	2017-08-21	Construction of Septic Tank for Aluthgama Depot	SLTB/TS/GEN/16/XI	2017-09-17
50	2017-08-21	Proposed new toilet unit for North Western province in Wennappuwa Depot	SLTB/TS/GEN/16/XII	2017-09-07
51	2017-09-04	இ.போ.ச அதிவேக நெடுஞ்சாலைக்குத் தேவையான புதிய டயர்களும் டயர் கூறுகளும் கொள்வனவு செய்தல்	SLTB/TS/GEN/65-I/2017	2017-09-19
52	2017-09-04	கிரிந்திவெல பஸ் நிலையம் திறந்து வைத்தல்	SLTB/TS/GEN/2017/DIGITAL NAVE BOARD/101	2017-09-20
53	2017-09-27	Alteration and Renovation to lavatory blocks & septic tank in Kirindiwela Depot/Alteration and renovation to lavatory blocks & septic tank of	SLTB/TS/GEN/2017/16/XI	2017-10-11

		Engineering Section in Kirindiwela Depot		
54	2017-09-27	Repairing of Workshop roof (without Valance & gutter) at Udugama Depot	SLTB/TS/CIVIL/2017/16/X-II	2017-10-11
55	2017-09-28	கொழும்பு நகரப் பிரதேசத்தில் கீழ்த்தள மிதிபலகையுடைய பஸ்களை ஈடுபடுத்துவதற்கான கேள்விப் பத்திரங்கள் கோரல்	SLTB/TS/GEN/2017/102	2017-10-12
56	2017-10-10	Bid for the obtaining of new Insurance Coverage for Rathmalana Fuel filling Station	SLTB/TS/GEN/25/Rathmalana /FS/ 2017	2017-10-24
57	2017-10-12	சபரகமுவ பிரதேச அலவலகத்தில் வறக்காப் பொலை உப சாலை தாபித்தல்	SLTB/TS/Civil/16/17	2017-11-06
58	2017-10-12	தலங்கமை சாலை பொறியியயல் கொட்டகை கூரை பழுது பார்த்தல்	SLTB/TS/Civil/16/15	2017-11-06
59	2017-10-12	இ.போ.ச பிரதேச அலுவலக வளவிலுள்ள கட்டடங்களின் வெளிச் சுவர்கட்கு வர்ணம் தீட்டுதல்	SLTB/TS/Civil/16/16	2017-11-06
60	2017-10-16	ஹொறணை சாலை மலசல கூட முறையை மீளவமைத்தல்	SLTB/TS/Civil/2017/16-XIII	2017-11-06
61	2017-10-16	தெல்தெனிய சாலை பொறியியல் அலுவலகத்தைப் பழுதுபார்த்தல்	SLTB/TS/Civil/2017/16-XIV	2017-11-06
62	2017-10-24	Supply & Delivery of Break Spray, Battery spray & Oil Seals to SLTB	MT/04/09/MT/485	
63	2017-10-24	Supply & Delivery of fuel Injection Pump Spares	MT/04/09/MT/484	
64	2017-11-02	2017/2018 ஆம் ஆண்டுகட்கு இ.போ.ச பஸ்கட்குத் தேவையான ரியூப்களும் மடிப்புகளும்	SLTB/TS/GEN/79/2017	2017-11-22
65	2017-11-02	Quotation for the supply & Delivery of ID Card printing Machines for SLTB	SLTB/TS/GEN/05/2017	2017-11-06
66	2017-11-02	Dot Matrix Printers 50	SLTB/TS/GEN/2017/74-IV	2017-11-20

		கொள்வனவு செய்வதற்கான கூறுவிலை கோரல்		
67	2017-11-02	உருளிப் போதிகைகள், குண்டுப் போதிகைகள், ஊசிப் போதிகைகள் ஆகியன கொள்வனவு செய்தல்	SLTB/TS/GEN/2017/02/II	2017-11-23
68	2017-11-09	Quotation for the supply and delivery of ID card printing Raw materials for SLTB	SLTB/TS/GEN/26/2017/II	2017-11-21
69	2017-11-09	பொருட்கள் விநியோகிக்கும் உறுதிப் பத்திரம் (S-06) பொறுப் பேற்கும் உறுதிச் சீட்டு (S -05) ஆகியவற்றிற்கான கூறு விலைகள் கோரல்	SLTB/TS/GEN/05 (I),(II)/2017	2017-11-30
70	2017-11-15	Quotation for the supply & delivery of color printers for Chairman's office	SLTB/TS/GEN/2017/74-V	2017-11-29
71	2017-11-15	Quotation for the supply & delivery Multimedia Projector for D.T.S. Pothuhara	SLTB/TS/GEN/2017/10	2017-12-04
72	2017-11-15	அலுவலக வாகன சாரதிகட்கு 2018 ஆம் ஆண்டிற்கான அலுவலக சீருடை அளித்தல்	SLTB/TS/Gen/Drivers Uniform/2017	2017-12-05
73	2017-12-11	Repairing of Damaged Roof & Rainwater Gutters of the Engineering Section at Ja-Ela Depot	SLTB/TS/Civil/2017/16-XVII	2017-12-18
74	2017-12-11	Demolishing works at Orugodawatta Fuel Station	SLTB/TS/Civil/2017/16-XVIII	2017-12-18
75	2017-12-18	Quotation for the supply & Delivery of MS office 2016 software package for SLTB	SLTB/TS/GEN/103/2017	2017-12-22

தகவல், தொடர்பாடல், தொழிநுட்ப பகுதி

2017 ஆம் ஆண்டில் செயற்பாடுகள்

1. 150 கணனிகள் சாலைகட்கு அளித்தமை
2. 150 அச்சிடும் இயந்திரங்கள் சாலைகட்கு அளித்தமை
3. 150 யூ.பீ.எஸ் இயந்திரங்கள் சாலைகட்கு அளித்தமை
4. LAN செய்திட்டம் செயற்படுத்தியமை
5. கைவிரல் அடையாள இயந்திரங்கள் சாலைகட்கு அளித்தமை

வினியோகப் பிரிவு

2017.01.01 முதல் 2017.12.31 வரை வினியோகப் பிரிவு முன்னேற்றம்						
தொடர் இல	**விடயம்**	**செயற் திட்டத்தின் பெயர்**	**2017 ஆம் ஆண்டிற்கு ஒதுக்கிய தொகை (ரூபா. மி)**	**நிதி முன்னேற்றம்**	**எய்திய இலக்கு**	**2017.03.31 ஆந் திகதியன்றுள்ளவாராக பௌதீக முன்னேற்றம்**
01	சகல கொள்வனவுகளும் விற்பனைகளும் நடைபெறல்	செயலாற்றல் நடவடிக்கைக் குத் தேவையான பொருட்கள் கொள்வனவு	1000	-	250 சிறிய பஸ்கள் கொள்வனவு	பூர்வாங்க தொழிநுட்ப மதிப்பீட்டுக் குழு சமர்ப்பிக்கப்பட்டு அமைச்சரவையினால் நியமிக்கப்பட்ட கொள்வனவு செயற்குழுவின்(CAPC) அங்கீகாரம் பெறப்பட்டது. இவ்வாண்டுக் குரிய ஏற்பாடு இன்மையால், இந் நடவடிக்கை நிறுத்தப்பட்டுள்ளது. 2018 ஆம் ஆண்டின் வரவு செலவுத் திட்டத்தில் இப்பிரேரணையை மீண்டும் சமர்ப்பிப்பதற்கு திறைசேரி விதப்புரை பெறப்பட்டது

02			4500	-	40-46 ஆசனங்களுள்ள 900 பஸ்கள் கொள்வனவு செய்தல்	இப் பஸ்கள் கொள்வனவு செய்வதற்கு அமைச்சரவை அனுமதி கிடைத்துள்ளது. தொழினுட்ப மதிப்பீட்டு குழு மூலம் கூறுவிலை ஆவணங்கள் தயாரிக்கப்பட்டு கொள்வனவு செயற்குழுவிற்கு சமர்ப்பிக்கப்பட்டது. ஆயினும் இந்திய கடன் உதவித் திட்டத்தின் கீழ் இத் தொகையைப் பெறமுடியாதென அறிவிக்கப்பட்டது. 2018 ஆம் ஆண்டு வரவு செலவுத் திட்டத்தில் மீண்டும் பிரேரணை சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.
03			100	99.54	40-45 ஆசன 20 பஸ்கள் கொள்வனவு செய்தல்	2017 ஆம் ஆண்டில் 18 பஸ்கள் கொள்வனவு செய்யப்பட்டன
04			100		அதி உல்லாச பஸ்கள் 8 கொள்வனவு செய்தல்	தேர்ந்தெடுக்கப்பட்ட வினியோகத்தர்களினால் விதிக்கப்பட்ட தர நிர்ணயத்திற்கேற்ப அலுவல்கள் நடைபெறாமையால் இத்திட்ட ஆரம்பம் நிறுத்தப்பட்டுள்ளது.

05			2400		கீழ்தள பஸ்கள் 100 கொள்வனவு செய்தல்	2017 ஆம் ஆண்டு வரவு செலவுத் திட்டத்தில் பணம் ஒதுக்கப்படவில்லை
06			216	25.02	சாரதிகள் பயிற்சிப் பாடசாலைகட்கு 24 வான் வண்டிகள் கொள்வனவு செய்தல்	2017 ஆம் ஆண்டில் 7 வாகனங்கள் கொள்வனவு செய்யப்பட்டன
07			20.40		24 பயிற்சி மாதிரி (simulators)இயந்திரங்கள் கொள்வனவு செய்தல்	திறைசேரி அனுமதிக்காக சமர்ப்பிக்கப்பட்டுள்ளது
08			157.78		பஸ் அணி பேணலுக்குத் தேவையான எண்ணெய், மசகெண்ணெய் கொள்வனவு செய்வதற்கு வேண்டிய நடவடிக்கை மேற்கொள்ளல்	2017 ஆம் ஆண்டில் நிதியேற்பாடு செய்யப்படவில்லை. அனுமதிக்கப்பட்ட விநியோகத்தர்கள் மூலம் சாலை மட்டத்தில் பணம் செலவிட்டு கொள்வனவு செய்யப்படுகிறது
09			14355.45		டீசல் 151,110,000 லீட்டர் கொள்வனவு செய்தல்	சந்தை கூறு விலைகட்கேற்ப சாலை மட்டத்தில் தமது தேவைக் கேற்ப கொள்வனவு செய்யப்படுகிறது.
10	சகல கொள்வனவுகளும் விற்பனைக	செயலாற்றல் நடவடிக்கைக் குத் தேவையான பொருட்க	1032	-	பஸ் பேணல், பழுதுபார்த்தல், கூறு உற்பத்திற்குத் தேவையான மாற்றுறுப்புகள் கொள்வனவு	w-8,w-23,w-21,w-22,w-36,w-10 ஆகியவற்றின் கூறுவிலைகள் அனுமதிக்கப்பட்டு பிரதேசங்கட்கு அனுப்பப்பட்டுள்ளன. w-05 கீழ்

	ளும் நடை பெறல்	ள் கொள்வன வு			செய்வதற்கு நடவடிக்கை எடுத்தல்	மாற்றுறுப்புக்கள் கொள்வனவு செய்வதற்கு அமைச்சரவை கொள்வனவு செயற்குழுவிற்கு அனுப்பப்பட்டு அவ்வாறான அனுமதியின் பேரில் தற்போது மாற்றுறுப்புகள் கொள்வனவு செய்யப்படுகின்றன.
11			161.03	-	பஸ்களின் பேணலுக்காகவு ம் பழுது பார்த்தலுக்கும் தேவையான வில்லுத் தகடுகள் கொள்வனவு செய்வதற்கு வேண்டிய நடவடிக்கை எடுத்தல்	தேவைக்கேற்ப அனுமதிக்கப்பட்ட நிறுவகங்களிலிருந்து சாலை மட்டத்தில் கொள்வனவு செய்வதற்கு அறிவுறுத்துரைகள் வழங்கப்பட்டுள்ளன.
12			1063.41	-	பஸ்களின் பேணலுக்குத் தேவையான மீள நிரப்பலுக்கும் பதனிடலுக்கும் வேண்டிய நடவடிக்கை எடுத்தல்	தேவைக்குற்ப அனுமதிக்கப்பட்ட நிறுவகங்களிலிருந்து சாலை மட்டத்தில் கொள்வனவு செய்வதற்கு அறிவுறுத்துரைகள் வழங்கப்பட்டுள்ளன.
13			44.43		தேவைக் கேற்றவாறு சீட்டுச் சுருள்ளும் சீட்டுப் புத்தகங்களும் கொள்வனவு	தேவைக்கேற்ப அனுமதிக்கப்பட்ட நிறுவகங்களிலிருந்து சாலை மட்டத்தில் கொள்வனவு செய்வதற்கு அறிவுறுத்துரைகள்

					செய்தல்	வழங்கப்பட்டுள்ளன.
14			0.81		தேவைக் கேற்றவாறு பருவகாலச் சீட்டுக்கள் அச்சிட்டு வழங்கல்	தேவையின் படி பருவ காலச் சீட்டுக்களைப் பெற்று சாலைகட்கு வினியோகித்தல்
15			0.81		இ.போ.ச செயலாற்றல் நிருவாக நடவடிக்கைகட் காக தேவையான அலுவலக உபகரணங்களை யும் எழுதுகருவி வகைகளையும் கொள்வனவு செய்தல்	தேவையின்படி அளிப்பதற்கு வேண்டிய நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள் ளது
16			61.73	2.24	இ.போ.ச கட்டடங்களிலும் பணிக் கட்டடங்களிலும், புதிய செய்திட்டங்கட் கும் மின்சாரம் பேணலுக்குத் தேவையான பொருட்களை கொள்வனவு செய்தலும் வழங்கலும்	தேவைக்கேற்றவாறு பணிக் கட்டடங்களிற்கும் புதிய செய்திட்டங்கட்கும் 0.48 மில்லியன் ரூபா நிதி தலைமை அலுவலகத்தினால் செலவிடப்பட்டு மின்சாரம் பேணப்படுகிறது.
17			12	9.63	தேவைக் கேற்ப கணினிகளும் 100 UPS இயந்திரங்களும் கொள்வனவு	100 UPS இயந்திரங்களும் 100 கணினிகளும் கொள்வனவு செய்யப்பட்டு

					செய்தல்	அளிக்கப்பட்டது.
18			10	0.59	தேவைக்கேற்ற வாறு கைவிரல் அடையாளமிடும் இயந்திரம் 100 கொள்வனவு செய்தல்	இரண்டாம் கட்டத்தில் கைவிரல் அடையாளமிடும் இயந்திரங்கள் 16 கிடைத்தன.
19			சபையால் நிதி ஒதுக்கப்படவில்லை	339.66	கழிக்கப்பட்ட பஸ்களும் உபயோகத்திலிருந்து நீக்கப்பட்ட கழிக்கப்பட்ட உபயோகிக்க முடியாத மாற்றுறுப்புகளும் உள்ளடங்கலாக கேள்விப் பத்திர மூலமும் பகிரங்க ஏலம் மூலமும் விற்றல்	2017.12.31 ஆந் திகதியன்றுள்ளவாறாக கழிக்கப்பட்ட பொருட்கள் விற்பனை மூலம் கிடைத்த வருவாய். ரூபா 339,663,925/-

பயிற்சி, ஆராய்ச்சி, அபிவிருத்திப் பகுதி

2017 ஜனவரி முதல் டிசெம்பர் வரை நிறைவேற்றிய பயிற்சி அலுவல்கள் தொடர்பான விவரங்கள்.

2017 சனவரி முதல் டிசெம்பர் வரை இ.போ.ச பயிற்சி, ஆராய்ச்சி, அபிவிருத்தி பகுதி மூலம் நிறைவேற்றப்பட் பயிற்சி வேலைக்களங்களின் விவரம் கீழே தரப்பட்டுள்ளது.

தொடர் இல	நடவடிக்கை பற்றிய நிகழ்ச்சித் திட்டம்	நிறைவேற்றிய தொகை	செலவு
01	பயணிப் போக்குவரத்து சாரதி உத்தரவுப் பத்திரம் பயிற்சி நிகழ்ச்சித் திட்டம்	3331	ரூ 2,671,504.03
02	உயர் முகாமைத்துவத்துக்கான ஆங்கில பாடநெறி	20	ரூ 1,125,00.00
03	தொழில் சட்டமும் கைத்தொழில் பிணக்கும் தொடர்பான பயிற்சி நிகழ்ச்சி நிரல் திட்டம்	334	ரூ 2,217,62.00
04	Microsoft Excel - Advanced Analysis Tools Adams Skills Development center	07	ரூ 112,000.00
05	போக்குவரத்து உயர் முகாமைத்துவ பாடநெறி	04	ரூ 180,000.00
06	கணனி அறிவும், வர்த்தக முகாமைப் பாடநெறியும்	1502	ரூ 11,265,000.00
07	வெளியார் பயிற்சி நிகழ்ச்சித் நிரல் (02 நிகழ்ச்சித் திட்டங்கள்	165	ரூ 1,633,500.00
08	வீதி விபத்தை முடிந்த அளவு குறைப்பது தொடர்பான நிகழ்ச்சித் திட்டம் (கட்டம் 01)	105	ரூ 22,992.00

சட்டப் பகுதி

01) இலங்கைப் போக்குவரத்துச் சபைக்கு (இ.போ.ச) சொந்தமான பிராந்திய அலுவலகங்களிற்கும் எல்லாச் சாலைகட்கும் எதிராக வெளியாரால் தொடுக்கப்படும், இ.போ.சபையினால் இதர தரத்தினருக்கெதிராகத் தொடுக்கப்படும் சகல வழக்குகளிற்கும் நாடு பூராவுமுள்ள சகல நீதிமன்றங்களிலுமுள்ள வழக்குகள் தொடர்பில் நடவடிக்கை எடுத்தல்.

இதன் கீழ்

(அ) இ.போ.ச வழக்குகளில் இயன்றளவு சந்தர்ப்பங்களில் எல்லாம் சட்ட அலுவலர்கள் அந்தவந்த நீதிமன்றங்களில் தோற்றுதல் (விசேடமாக இ.போ.ச தலைவருக்கும் பணிப்பாளர் சபைக்கும் எதிராகத் தொடுக்கப்படும் வழக்குகளில் தோற்றல்).

(ஆ) வழக்குகள் தொடர்பான நீதிமன்ற ஆவணங்களைத் தயாரித்தல்.

(இ) சாலைகளிலும் பிரந்திய அலுவலகங்களிலுமுள்ள நீதிமன்ற அலுவலர்க்குத் தேவையான அறிவுறுத்துரைகளை வழங்கல்.

(ஈ) சட்ட அலுவலர்களுடன் வெளிச் சட்டத்தரணிகளையும் சட்ட மா அதிபர் திணைக்களத்தைச் சேரந்த அரச சட்டத் தரணிகளையும் தொடர்புபடுத்தல்.

(உ) சட்ட மா அதிபர் திணைக்களத்தின் அரச சட்டத்தரணிகளுடன் தொடர்பு கொண்டு சட்ட கலந்துரையாடல்களில் பங்குபற்றி வழக்கு அலுவல்களை மேற்கொள்ளல்.

02) இ.போ.சபைக்கு சொந்தமான பிராந்திய அலுவலகங்களிலும், சாலைகளிலும், தலைமையலுவலகத்திலும், ஏனைய பிரிவுகளிலும் நிலவும் சட்டப் பிணக்குகளிற்கும் நிருவாகப் பிணக்குகளிற்கும் தேவையான சட்ட மதியுரை அளித்தல்.

03) இ.போ.ச சபைக்கும் வெளியாருக்கும் இடையே செய்து கொள்ளப்படும் குத்தகை ஒப்பந்தங்கள், வினியோக ஒப்பந்தங்கள், பாதுகாப்பு ஒப்பந்தங்கள், பொது ஒப்பந்தங்கள் ஆகியவற்றைத் தயாரித்தல்.

04) இ.போ.ச வசமுள்ள காணிகள் தொடர்பாக எழும் பிணக்குகளிற்கு செயலகப் பகுதிக்கு வேண்டிய மதியுரை அளித்தல், வெளி நிறுவகங்களுடன் நடைபெறும் கலந்துரையாடலகளில் பங்கேற்று அறிக்கை தயாரித்தல்.

05) தலைவரால் தொடர்புபடுத்தப்படும் பிணக்குகளிற்கு தேவையான சந்தரப்பங்களில் அமைச்சரவை விஞ்ஞாபனம் தயாரித்தல்

சட்டப் பகுதியின் சட்ட நடவடிக்கைகள் மேற் குறித்தவாறு நிறைவேற்றப்பட்டன. மேலே குறிப்பிட்ட விடயங்கள் தொடர்பில், 2017 ஆம் ஆண்டில் இவ்வலுவலர்கள்

நிறைவேற்றிய கடமைகள் யாவற்றையும் நிரலிட்டு அறிக்கையை ஒன்றிணைத்து தயாரித்தல் சிக்கல் வாய்ந்ததாகையால் 2017 ஆம் ஆண்டில் சட்டப் பகுதி விசேடமாக நிறைவேற்றிய கடமைகளின் நிரல் கீழே தரப்பட்டுள்ளது.

01) 2017 ஆம் ஆண்டில் நீதிவான் நீதிமன்றுகளிருந்து 35 அழைப்பாணைகளும், மாவட்ட நீதிமன்றங்களிலிருந்து 33 அழைப்பாணைகளும் கிடைக்கப் பெற்று அவ் வழக்குகள் தொடர்பில் மீதி அலுவல்கள் நிறைவேற்றப்பட்டன.

02) 2017 ஆம் ஆண்டில் சட்டப் பகுதியினால் 32 ஒப்பந்தங்கள் தயாரிக்கப்பட்டன.

03) இ.போ.ச பஸ்களுக்குத் தேவையான மாற்றுறுப்புகளைக் கொள்வனவு செய்தமைக்காக வ/ப நிம்பஸ் ஓட்டோ மோட்டீவ் (தனி) கம்பனிக்கு செலுத்த வேணடிய நிலுவைப் பணத்தைச் செலுத்தாமை தொடர்பான விடயம் நடுவர் தீர்ப்பிற்கு விடப்பட்டு நடுவர் மன்றம் அதன் தீர்ப்பை 29.05.2017 ஆம் திகதி அளித்தது. இத் தீர்ப்பின் படி கம்பனிக்குச் சலுத்த வேண்டிய 1,365,375.77 அமெரிக்க டொலர்களும் அத்துடன் அத்தொகை மீதான வட்டியும் சேர்த்து கம்பனிக்கு செலுத்தப்பட்டு தற்போது இவ்விடயம் தீர்க்கப்பட்டாயிற்று.

04) அதேபோன்று வ/ப வெரகெர எஞ்சினியரிங் சேவிஸ் கம்பனி இ.போ.ச சபைக்கு எதிராக தொடுத்த வழக்கிற்கு நடுவர் மன்றம் அளித்த தீர்ப்பில் கம்பனிக்கு ரூபா 235,850,767.20 வும் அத்துடன் முழுத் தொகையும் செலுத்தி முடியும் வரை இத் தொகையின் மீது 6.3% ஆண்டு வட்டியும் இ.போ.ச செலுத்த வேண்டுமெனக் குறிப்பிடப்பட்டிருந்தது. இத் தீர்ப்பினை செயற்படுத்துமாறு இ.போ.ச விற்கு எதிராக கம்பனி கொழும்பு வர்த்தக உயர் நீதிமன்றில் HC/ARB/484/05 இலக்கங் கொண்ட வழக்கைத் தொடர்ந்தது. நடுவர் மன்றத் தீர்ப்பினை நீக்குமாறு கொழும்பு வர்த்தக உயர் நீதி மன்றில் இ.போ.ச HC/ARB/124/04 இலக்கங் கொண்ட வழக்கைத் தாக்கல் செய்தது. இரு வழக்குகளையும் இணைத்து நீதி மன்றம் கூப்பிட்ட போது கம்பனி நீதி மன்றில் பிரசன்னமாய் இருக்காமையினால் HC/ARB/484/05 இலக்க வழக்கு 2007 ஆம் ஆண்டில் தள்ளுபடி செய்யப்பட்டது. பின்னர் 2016 ஆம் ஆண்டில் இரு வழக்குகளையும் மீளக் கூப்பிடும் படி நீதிமன்றிற்கு கம்பனி வேண்டுகோள் விடுத்தது. இதனையடுத்து இவ் வழக்குகள் இரண்டையும் 07.11.2017 ஆம் திகதி பகிரங்க நீதிமன்றில் நீதி மன்றம் கூப்பிட்ட வேளை கம்பனி வேண்டுகோளை மீளப் பெற்றமையால் இவ்வழக்கு நடவடிக்கைகள் முற்றுப் பெற்றன.

05) சட்டமா அதிபரினால் 2016, 2017 ஆம் ஆண்டுகளில் இ.போ.ச வழக்குகள் சார்பில் தோற்றியமைக்காகவும் இதர நடவடிக்கைகட்காகவும் 2017.10.19 ஆந் திகதியிடப்பட்ட 112 வழக்குகட்கான பில்பட்டியலுக்கு ரூபா 5,725,162.08 உம் 2017.12.15 ஆம் திகதியிடப்பட்ட 57 வழக்குகட்கான பில் பட்டியல்கள் 3,195,950 ரூபாவும் இ.போ.சபையால் சட்டமா அதிபர் திணைக்களத்திற்குச் செலுத்தப்பட்டது.

கவனத்தில் கொள்ள வேண்டிய கணக்கீட்டுக் கொள்கைகள்

1 நிறுவக தகவல்

1.1 அறிக்கையிடும் நிறுவகம்

இலங்கை போக்குவரத்துச் சபை 2005 ஆம் ஆண்டின் 27 ஆம் இலக்க இலங்கை போக்குவரத்துச் சபைச் சட்டத்தின் கீழ் பாராளுமன்றத்தால் சட்டமாக்கப்பட்டது. சபையின் பதிவு பெற்ற அலுவலகம் கொழும்பு-05, கிருல வீதி, 200 ஆம் இலக்கத்தில் அமைந்துள்ளது. அதன் பிரதான வியாபார இடமும் அதே இடத்தில் உள்ளது.

இலங்கை போக்குவரத்துச் சபை (இ.போ.ச) போக்குவரத்து அமைச்சின் கீழ் இயங்கும் ஒரு நிறுவகமாகும்.

1.2 பிரதான செயற்பாடுகள்

இவ்வாண்டில் சபையின் பிரதான செயற்பாடு சமுதாயத்திற்கு வீதிப் பயணிப் போக்குவரத்தினை ஏற்பாடு செய்வதாகும். இலங்கைப் போக்குவரத்துச் சபையின் குறிக்கோள் நியாயமான கட்டண முறையில் பாதுகாப்பான நம்பிக்கையுள்ள வசதியான வீதிப் பயணிப் போக்குவரத்தை அளிப்பதாகும்.

2. ஆயத்த அடிப்படைகள்

இலங்கை பட்டயக் கணக்கறிஞர் நிறுவகத்தினால் பிரசுரிக்கப்பட்ட இலங்கை கணக்கீட்டு நியமங்கட்கு (SLFRS/LKAS) அமைவாக நிதிக் கூற்றுக்கள் தயாரிக்கப்பட்டன. 2011 டிசெம்பர் 31 ஆம் திகதி முடிவடைந்த ஆண்டுவரை உள்ளடங்கலாக அது வரையான காலங்கள் யாவற்றுக்கும் இ.போ.ச அதன் நிதிக் கூற்றுக்களை இலங்கை கணக்கீட்டு நியமங்கட் கேற்ப (இகநி) தயாரித்தது. 2013 டிசெம்பர் 31 ஆந் திகதி முடிவடைந்த ஆண்டுக்கான நிதிக் கூற்றுக்கள் இலங்கை கணக்கீட்டு நியமங்கட்கேற்ப (SLFRS/LKAS) தயாரிக்கப்பட்டன.

இ.போ.ச எவ்வாறு (SLFRS/LKAS) பின்பற்றியது என்பது பற்றிய தகவலுக்கு 15 ஆம் குறிப்பை பார்க்குக.

நிதிக் கூற்றுகளில் நிதி நிலைக் கூற்று, முழுமையான வருவாய் கூற்று, உரிமையாண்மை மாற்றக் கூற்று, காசுப் பாய்ச்சல் கூற்று, நிதிக் கூற்றுக்கான குறிப்புகள் ஆகியவை அடங்கும்.

2.2 அளவிடும் அடிப்படைகள்

நிதிக் கூற்றுகள் வரலாற்று கிரய அடிப்படையில் தயாரிக்கப்பட்டன.

2.3 ஒப்பியல் தகவல்

நடப்புக் காலத்தின் நிதிக் கூற்றுக்களின் புரிந்து கொள்ளும் ஆற்றலை உயர்த்துவதற்காகவும், காலங்கட்கிடையே ஒப்பியல் தன்மையை மேம்படுத்து வதற்காகவும், நிதிக் கூற்றுக்களில் முந்திய காலத்திற்கு அறிக்கையிட்ட சகல தொகைகட்கும் தரமான விவரமான, விளக்கமான தகவல் உட்பட ஒப்பியல் தகவல் வெளிப்படுத்தப்பட்டுள்ளது.

வேறுவிதமாக காட்டப்பட்டிருந்தாலன்றி மற்றப்படி இந் நிதிக் கூற்றுகளில் சமர்ப்பிக்கப்பட்ட சகல காலங்கட்கும் ஒரே சீராக இக் கணக்கீட்டுக் கொள்கைகள் கீழே விளக்கப்பட்டவாறு பிரயோகிக்கப்பட்டுள்ளன.

நிதிக் கூற்றுகளில் உள்ள சமர்ப்பணம் அல்லது வகைப் படுத்தல்கள் திருத்தப்பட்ட விடத்து, சிறந்த சமர்ப்பித்தலுக்காக ஒப்பியல் தொகைகள் நடப்பு ஆண்டுடன் இணங்கக் கூடியவாறு மீள வகைப்படுத்தப்பட்டுள்ளன.

2.4 மதிப்பீடுகள், தீர்ப்புகளின் பயன்பாடு

இலங்கை கணக்கீட்டு நியமங்களுடன் (SLFRS) இணங்கும் வகையில் நிதிக் கூற்றுக்கள் தயாரிப்பதற்கு முகாமை கணக்கீட்டுக் கொள்கைப் பிரயோகத்தைப் பாதிக்கும் ஊகங்களையும், மதிப்பீடுகளையும், தீர்ப்புகளையும் செய்ய வேண்டியதுடன், அறிக்கையிடப்பட்ட சொத்துக்கள் பொறுப்புக்கள், வருவாய், செலவு ஆகியவற்றின் தொகையையும் அறிந்து கொள்ள வேண்டும்.

தீர்ப்புகளும், மதிப்பீடுகளும் வரலாற்று அனுபவத்தையும், சூழ் நிலைக் கேற்றவாறு நியாயமானதென நம்பக்கூடிய எதிர்பார்த்தல்கள் அடங்கிய இதர காரணிகளையும் அடிப்படையாகக் கொண்டவையாகும். எனவே உண்மையான அனுபவத்திலிருந்தும் முடிவுகளிலிருந்தும் இத் தீர்வுகளும் மதிப்பீடுகளும் வேறுபடலாம்.

மதிப்பீடுகளும் அடிப்படை ஊகங்களும் தொடர்ந்து இயங்கும் அடிப்படையிலேயே மீளவாயப்படுகின்றன. மீளவாய்தல் அக் காலத்தை மட்டுமே பாதிப்பதாயின் மதிப்பீடு மீளவாயப்படும் காலவெல்லையில் அல்லது தற்போதைய, எதிர்காலத்திற்கான இரண்டு காலவெல்லைகளையும் பாதிப்பதாயின், மீளவாயப்படும்

காலவெல்லைகட்கான கணக்கீட்டு மதிப்பீடுகட்கான மீளவாய்வுகள் ஏற்பிசைவு செய்யப்படுகின்றன.

2.5 **சொத்துக்களும் அவற்றின் பெறுமதி அடிப்படைகளும்**

சொத்துக்களும் அவற்றின் அடிப்படைகளும்

காசும், வங்கி மீதிகளும், அறிக்கையிடும் திகதியிலிருந்து ஓராண்டுக்குள் அல்லது சபையின் இயல்பான வியாபார தொழிற்பாட்டு வட்டத்துள் இதில் எது குறுகியதோ அதில் காசாகத் தேறுமென எதிர்பார்க்கப்படுபவையும் நிதி நிலைக் கூற்றில் நடப்புச் சொத்துகளாக வகைப்படுத்தப்பட்டனவுமாகும். நடப்புச் சொத்துக்கள் என்பது அறிக்கையிடும் திகதியிலிருந்து ஓராண்டுக்கு அப்பால் சபை வைத்திருக்க எதிர்பார்க்கும் சொத்துக்கள் தவிரந்த சொத்துக்களாகும்.

3. **கவனத்திற் கொள்ள வேண்டிய கணக்கீட்டுக் கொள்கைகள்**

இந் நிதிக் கூற்றுக்கள் தயாரிப்பதில் பின்பற்றப்பட்ட பிரதான கணக்கீட்டு கொள்கைகள் கீழே விளக்கப்பட்டுள்ளன.

3.1 **ஆதனம், பொறித் தொகுதி, உபகரணங்கள்**

ஆதனம், பொறித் தொகுதி, உபகரணங்கள் கிரயத்திலும், திரண்ட தேய்மானத்தின் நிகர் தொகையிலும், திரண்ட சேதமிழப்பு ஏதானும் உளதாயின் அதிலும் கிரயத்தில் குறிப்பிடப்படுகிறது.

(அ) **உரித்தான சொத்துக்கள்**

ஆதனம், பொறித் தொகுதி, உபகரணங்கள் ஆகியவற்றின் கிரயத்தில் அதன் கொள்விலையும், சொத்தை எண்ணியவாறு உபயோகத்திற்கேற்ற வகையில் தொழிற்படும் நிலைக்கு கொண்டு வருவதற்கு நேரடியாக ஏற்படக்கூடிய செலவும் அடங்கும். சுய நிருமாண சொத்துக்களில் பொருள்களின் கிரயம், நேரடிக் கூலி, மற்றும் எண்ணியவாறு சொத்தின் பாவனையை தொழிற்படும் நிலைக்கு கொண்டுவருவதற்கு ஏற்படக் கூடிய இதர வேறெந்த கிரயங்களும் அடங்கும். அத்துடன் உருப்படிகளை கழற்றி நிருணயிக்கப்பட்ட நிலையத்தில் மீள அமைப்பதற்கான செலவும், தகைமை பெற்ற சொத்துக்கள் மீதான கடன்படு கிரயங்களும் இதில் அடங்கும்.

ஒரு சொத்தின் முக்கிய உள்ளுறுப்புக்கள் அடையாளங் காணப்பட்டு வேறாக மதிப்பிறக்கஞ் செய்யப்படும்.

(ஆ) **அடுத்துவரும் கிரயங்கள்.**

ஆதனம், பொறித் தொகுதி, உபகரணம் ஆகியவற்றின் உருப்படியின் பகுதியை பதிலிடும் செலவு, அப்பகுதிக்குள் இணைந்துள்ள எதிர்கால பொருளியல் பயன்கள் சபைக்குக் கிட்டுவது சாத்தியமெனவும் அதன் கிரயம் நம்பகத்தகு தன்மையில் அளவிட முடியுமாயிருப்பினும் உருப்படியின் பதிலிடும் பகுதியின் முன் கொண்டு செல்லப்படும் தொகை ஏற்பிசைவு செய்யப்படும்.

ஆதனம், பொறித்தொகுதி, உபகரணம் ஆகியவற்றின் நாளாந்த உபயோக செலவுகள் இலாபத்தில் அல்லது நட்டத்தில் விடயத்திற்கேற்றவாறு ஏற்பிசைவு செய்யப்படுகின்றன.

(இ) **தேய்மானம்**

சொத்தொன்றின் கிரயத்திற்கு அல்லது கிரயத்திற்கு பதிலிட்ட மற்றுமோர் தொகைக்கு அதன் ஈற்றுப் பெறுமதியைக் கழித்து தேய்மானமிடற் தகு தொகையில் தேய்மானம் கணக்கிடப்படுகிறது. ஆதனம், பொறித் தொகுதி, உபகரணம் ஆகியவற்றின் உருப்படியின் ஒவ்வொரு பகுதியினதும் மதிப்பிடப்பட்ட பயன்தரு ஆயுட் காலத்திற்கு நேர்கோட்டு அடிப்படையில் இலாபத்தில் அல்லது நட்டத்தில் தேய்மானம் ஏற்பிசைவு செய்யப்படுகிறது. ஏனெனில் இது அனேகமாக சொத்துடன் இணைந்துள்ள எதிர்கால பொருளாதார பயன்களின் எதிர்பார்க்கப்படும் நுகர்வு பகுதியைப் பிரதிபலிக்கிறது. குத்தகைக் கால முடிவில் கம்பனிக்கு உரித்துப் பெற முடியுமென்பது நியாயமான அளவு நிட்சயமாக விருந்தாலன்றி மற்றப்படி குத்தகைக்கு விடப்பட்ட சொத்துக்கள் அவற்றின் குறைவான குத்தகை காலத்திலும் அவற்றின் பயன்தரு ஆயுட்காலத்திலும் இதில் குறைந்ததெதுவோ அதற்கே தேய்மானம் தீர்மானிக்கப்படுகிறது.

மதிப்பிடப்பட்ட பயன்தரு ஆயுட்காலம் வருமாறு

சொத்து வகுதி	**பயன்தரு ஆயுட்காலம் (ஆண்டுகள்)**	**தேய்மானம் (%)**
கட்டடங்கள்	40	2.5%
பஸ்களும் ஏனைய வாகனங்களும்	08	12.5%
பொறித்தொகுதியும் உபகரணங்களும்	10	10%
தளவாடமும் பொருத்திகளும்	10	10%
கணினிகள்	04	25%
பஸ் எஞ்சின்கள்	05	20%

சொத்தொன்றின் தேய்மானம் அது பாவனைக்குக் கிடைக்கும் போது தொடங்குகிறது. சொத்தொன்று விற்பனைக்காக வைக்கப்பட்டதென

வகைப்படுத்திய திகதியிலிருந்தும் சொத்து விலக்கப்பட்ட திகதியிலிருந்தும் இதில் எது முந்திய திகதியோ அத் திகதியிலிருந்து சொத்துக்களின் தேய்மானம் முடிவுறுகிறது.

ஏற்புடைத்தாயின் ஒவ்வோர் நிதியாண்டின் இறுதியிலும் தேய்மான முறை, பயன்தரு ஆயுட்காலம், ஈற்றுப் பெறுமதி ஆகியன மீளவாயப்படுகின்றன.

(ஈ) **விலக்கல்**

ஆதனம், பொறித் தொகுதி, உபகரணங்கள் ஆகியவற்றின் உருப்படியொன்றின் முற்கொண்டு செல்லப்படும் தொகை அவை விற்பனை செய்யப்படும் போது அல்லது அதன் பாவனையில் அல்லது விற்பனையிலிருந்து எதிர்கால பொருளாதார நன்மைகள் எதுவும் எதிர்பார்க்கப்படாத விடத்து விலக்கப்படுகிறது. இதர வருவாய்க்குள் இலாபம் அல்லது நட்டம் ஏற்பிசைவு செய்யப்பட்டு விலக்கப்படும் போது ஆதாயங்கள் அல்லது நட்டங்கள் ஏற்பிசைவு செய்யப்படுகின்றன.

3.2 **குத்தகைக்கு விடப்பட்ட சொத்துக்கள்**

சபை பெருமளவில் சொத்துவத்தின் சகல இடர்களையுடம் பயன்களையும் மேற்கொள்ளும் குத்தகைகள் நிதிக் குத்தகைகள் என வகைப்படுத்தப்படும். ஆரம்ப ஏற்பிசைவின் பின்னர் குத்தகைக்கு விடப்பட்ட சொத்து அளவிடப்பட்டு, தற்போதைய ஆகக் குறைந்த குத்தகைக் கொடுப்பனவு பெறுமதியிலும் சீர்மதிப்புப் பெறுமதியிலும் இதில் எது குறைந்ததோ அத் தொகைக்கு சமனான தொகைக்கு முதலீட்டாக்கம் செய்யப்படுகிறது. ஆரம்ப ஏற்பிசைவின் பின்னர், சொத்துக்குப் பொருத்தமான கணக்கீட்டுக் கொள்கைக்கேற்ப சொத்து கணக்கிடப்படும்.

இதர குத்தகைகள் தொழிபடு குத்தகைகள் ஆகும். முதலீட்டு ஆதனத்திற்குத் தவிர மற்றப்படி சபையின் நிதி நிலைக் கூற்றில் குத்தகைச் சொத்துக்கள் ஏற்பிசைவு செய்யப்படுவதில்லை.

3.3 **முதலீட்டு ஆதனம்**

முதலீட்டு ஆதனம் வாடகை ஈட்டுவதற்காக அல்லது மூலதன வளர்ச்சிக்காக அல்லது இவை இரண்டையும் ஈட்டுவதற்காக அன்றி

மற்றப்படி பொருட்கள் அல்லது சேவைகள் அல்லது நிருவாக நோக்கங்களுக்காக உற்பத்தியைப் பயன்படுத்தி வியாபாரத்தின் வழமையான செயற்பாடாக விற்பனை செய்வதற்கு வைத்திருக்கப்படுவதில்லை. முதலீட்டு ஆதனம் கிரயத்தில் அளவிடப்படுகிறது.

ஆதனப் பாவனை முதலீட்டு ஆதனத்திலிருந்து உரிமையாளர் குடியிருக்கும் ஆதனமாக மாறும் போது ஆதனம் பொறித்தொகுதி, உபகரணங்களாக மீளவகைப்படுத்தப்படுகிறது.

3.4 நடைபெறும் மூலதன வேலையின் முதலீடு

ஐந்தொகைத் திகதியன்று முதலீட்டாக்கம் செய்யப்படாது நடைபெறும் மூலதன வேலையில் ஆண்டில் செய்யப்பட்ட முதலீட்டு செலவுகள் முதலீடு எனக் காட்டப்படுகிறது. ஆண்டில் பயன்படுத்தப்பட்டு முதலீட்டாக்கம் செய்யப்பட்ட மூலதன சொத்துக்கள் ஆதனம், பொறித் தொகுதி, உபகரணத்திற்கு மாற்றப்பட்டுள்ளன.

3.5 அருவச் சொத்துக்கள்

சொத்துக்களின் பொருளாதார பயன்கள் நிறுவகத்திற்குத் கிடைக்கக்கூடிய சாத்தியமுள்ளதெனவும் இலங்கைக் கணக்கீட்டு நியமம் LKAS3 சேத இழப்பு நட்ட சொத்துக் கேற்ப சொத்துக்களின் கிரயம் அளவிடப்பட்டு திரள் மதிப்பிறக்கத்திலும் திரள் சேத இழப்பு நட்டத்திலும் இருந்து கழித்து கிரயத்தில் கொண்டு செல்லப்படுமாயின் அருவச் சொத்து ஏற்பிசைவு செய்யப்படலாம்.

அருவச் சொத்துக்கு சேதமிழப்பு நட்டம் ஏற்படக்கூடிய அறிகுறி இருப்பின் அளவுள்ள பயன்களுள்ள அருவச் சொத்துக்கள் பயன்தரு பொருளாதார ஆயுட்காலத்திற்கு சேதமிழப்பிற்கு கணிக்கப்பட்டு மதிப்பிறக்கஞ் செய்யப்படுகிறது. அளவுள்ள பயன்தரு ஆயுட்காலத்துடன்கூடிய அருவச் சொத்தொன்றுக்கான மதிப்பிறக்க காலமும் மதிப்பிறக்க முறையும் ஆகக் குறைந்தது ஆண்டுக்கு ஒரு முறையாவது ஒவ்வோர் நிதியாண்டின் முடிவிலும் மீளவாயப்படுகிறது.

நிச்சமற்ற பயன்தரு ஆயுட்காலத்துடன்கூடிய அருவச் சொத்துக்கள் ஆண்டு தோறும் சேத இழப்பிற்காக தனித்தனியாக அன்றேல் காசு பிறப்பாக்கும் அலகு மட்டத்தில் பரிசோதிக்கப்பட வேண்டும்.

3.6 நிதி அல்லாத சொத்துக்களின் சேத இழப்பீடு

சேத இழப்பிற்கான அடையாளம் ஏதும் உளதா எனத் தீர்மானிப்பதற்காக ஒவ்வோர் அறிக்கையிடும் திகதியிலும் சொத்துக்களின் முன்கொண்டு செல்லப்படும் தொகை மீளவாயப்படுகிறது. அத்தகைய அறவீடு ஏதுமிருப்பின், சொத்துக்களின் அறவிடக்கூடிய தொகை மதிப்பிடப் படவேண்டும். சொத்தொன்றின் முன் கொண்டு செல்லப்படும் தொகை அல்லது காசு பிறப்பாக்கி அலகு அதன் அறவிடக் கூடிய தொகையைக் காட்டிலும் அதிகமாக இருக்கும் சந்தர்ப்பங்களில் சேதமிழப்பு நட்டம் ஏற்பிசைவு செய்யப்படுகிறது. அறவிடப் படக்கூடிய தொகையைத் தீர்மானிப்பதற்கு உபயோகிக்கப்படும் மதிப்பீடுகளில் மாற்றம் ஏற்படுமிடத்து சேதமிழப்பு நட்டம் மீளவாயப்படும்.

3.7 சரக்கு தொக்குகள்

கிரயத்திலும், தேறக்கூடிய நிகர் பெறுமதியிலும் எது குறைந்ததோ அத் தொகையில் சரக்குத் தொக்குகள் அளவிடப்படுகின்றன.

சரக்குத் தொக்குகள் கிரயத்தில், கொள்விலையின் செலவுகள் யாவும்,மற்றும் மாற்ற செலவுகள், சரக்குத் தொக்குகளைத் தற்போதுள்ள இடத்திற்கும் நிலைமைக்கும் கொண்டுவருவதற்கு ஏற்பட்ட இதர செலவுகள் ஆகியன அடங்கும்.

தேறிய நிகர் பெறுமதியானது சாதாரண வியாபாரத்தில் கொள்விலையிலிருந்து பூர்த்தியாக்கிய செலவையும், விற்பதற்கு தேவையான மதிப்பீட்டுச் செலவையும் கழித்து வரும் தொகையாகும். ஒவ்வொரு தனிநபரின் செலவினதும், முதல் உள்வந்தது முதலில் வெளிச் செல்லும் என்ற சூத்திரத்தின் படியும் குறித்த அடையாளங் காணலை உபயோகித்தும் சரக்குத் தொக்குகளின் கிரயம் குறித்தொதுக்கப்படுகிறது.

3.8 நிதிச் சொத்து

3.8.1 ஆரம்ப ஏற்பிசைவும் அளவீடும்

LKAS 39 நோக்கெல்லைக்குள் வரும் நிதிச் சொத்துக்கள் சீர்மதிப்பு பெறுமதியில் இலாப நட்டம், கடன்களும் வருமதிகளும், பருவ முதிர்வுவரை வைத்திருக்கப்படும் முதலீடுகள், விற்பனைக்கான நிதிச் சொத்துக்கள் ஆகியன ஏற்றவாறு நிதிச் சொத்துக்களாக வகைப்படுத்தப்பட்டு ஆரம்ப ஏற்பிசைவின் போது அதன் நிதிச் சொத்துக்களாக நிர்ணயிக்கப்படுகிறது.

சகல நிதிச் சொத்துக்களும் ஆரம்பத்தில் சீர்மதிப்பு பெறுமதியில் ஏற்பிசைவு செய்யப்படுவதுடன் இலாப நட்டம், ஊடு செயற் கிரயங்கள், பருவ முதிர்வு வரை வைத்திருக்கப்படும் முதலீடுகள் ஆகியவற்றுக்கு நேரடியாக சாட்டப்படக்கூடிய சொத்துக்கள் சீர்மதிப்பு பெறுமதியில் காட்டப்படுவதில்லை.

இ.போ.சபையின் நிதிச் சொத்துக்கள் காசு, குறுங்கால முதலீடுகள், வணிகமும் இதர வருமதிகள், பணியாளர் கடன்கள், இதர வருமதிகள் ஆகியன அடங்கும்.

3.8.2 அடுத்துவரும் அளவீடு

நிதிச் சொத்துக்களின் அடுத்துவரும் அளவீடு அவற்றின் வகைப்படுத்தலில் தங்கியுள்ளது.

(அ) இலாபம் அல்லது நட்டம் ஊடாக நிதிச் சொத்துக்கள் சீர்மதிப்பு பெறுமதியில்

இலாபம் அல்லது நட்டம் ஊடாக சீர்மதிப்பு பெறுமதியிலான நிதிச் சொத்துக்களில் வணிகத்திற்காக வைக்கப்பட்ட நிதிச் சொத்துக்களும் இலாபம் அல்லது நட்டம் ஊடாக சீர்மதிப்பு பெறுமதியில் ஆரம்ப ஏற்பிசைவின் பின்னர் குறிக்கப்பட்ட நிதிச் சொத்துக்களும் அடங்கும். கிட்டிய தவணையில் விற்கும் அல்லது மீளக் கொள்வனவு செய்யும் நோக்குடன் சுவீகரிக்கப்பட்டால் நிதிச் சொத்துக்கள் வணிகத்திற்காக வைக்கப்பட்டன என வகைப்படுத்தலாம்.

(ஆ) கடன்களும் வருமதிகளும்

கடன்களும் வருமதிகளும் நிறை சந்தையில் விலை கோரப்படாத நிலையான அல்லது தீர்மானிக்கத்தக்க கொடுப்பனவுகள் உய்த்தறியப்படாத நிதிச் சொத்துக்களாகும். ஆரம்ப அளவீட்டின் பின் அளவிடப்பட்டு சேத இழப்பு கழிக்கப்பட்ட பின்னர் விளைவு வட்டி முறையை உபயோகித்து பின்னர் அத்தகைய நிதிச் சொத்துக்கள் கிரயத்தில் காலத் தேய்மானப்படுத்தப்படுகிறது. சுவீகரிக்கும் போது விளைவு வட்டி முறையின் அவசியமான பகுதியான கட்டணங்களும் செலவுகளின் மீதான ஏதாவது கழிவும் அல்லது கட்டுப்பணமும் கணக்கில் எடுக்கப்பட்டே காலத் தேய்மானப்படுத்தப்பட்ட கிரயம் கணக்கிடப்படுகிறது. விளைவு வட்டி காலத் தேய்மானப்படுத்தல் வருவாய்க் கூற்றின் நிதி வருவாயில் உள்ளடக்கப்படுகிறது.

வருவாய்க் கூற்றில் நிதிக் கிரயத்தில் சேதமிழப்பிலிருந்து எழும் நட்டங்கள் ஏற்பிசைவு செய்யப்படுகின்றன.

(இ) **பருவ முதிர்வு வரை வைத்திருக்கப்படும் முதலீடுகள்**

இ.போ.ச தன்னால் முதிர்வு வரையில் வைத்திருக்கக்கூடுமென தன்னுறுதியான கருத்தும் ஆற்றலும் கொண்டுள்ள நிலையான அல்லது தீர்க்கமான கொடுப்பனவுகளும் நிலையான முதிர்வுகளும், உள்ள உய்த்தறியப்படாத நிதிச் சொத்தாக பருவ முதிர்வு வரை வைத்திருக்கப்படும் முதலீடாக வகைப்படுத்தப்படும். ஆரம்ப அளவீட்டின் பின்னர் சேத இழப்பைக் கழித்து விளைவு வட்டி முறையை உபயோகித்து பருவ முதிர்வுவரை வைத்திருக்கும் முதலீடுகள் காலத் தேய்மானப் படுத்தப்பட்ட கிரயத்தில் அளவிடப் படுகிறது. தேய்மானப் படுத்தப்பட்ட கிரயம் கணக்கிடப்படுவது சுவீகரிப்பின் போது எந்த கழிவும் அல்லது காப்பீட்டுக் கட்டணமும் விளைவு வட்டி முறையின் அவசிய பகுதியான செலவுகளையும் கணக்கிலெடுத்தேயாகும். வருவாய்க் கூற்றிலுள்ள நிதி வருவாயில் விளைவு வட்டி முறை தேய்மானப்படுத்திய காலம் உள்ளடக்கப் பட்டுள்ளது. சேத இழப்பிலிருந்து எழும் நட்டங்கள் வருவாய்க் கூற்றில் நிதிச் செலவாக ஏற்பிசைவு செய்யப்பட்டுள்ளன.

(ஈ) **விற்பனைக்குக் கிடைக்கக்கூடிய நிதி முதலீடுகள்.**

விற்பனைக்குக் கிடைக்கக்கூடிய நிதி முதலீடுகளில் உரிமையாண்மையும் கடன் பிணைகளும் அடங்கும். விற்பனைக்குக் கிடைக்கக் கூடியதென வகைப்படுத்தப்பட்ட உரிமையாண்மை முதலீடுகள் வணிகத்திற்காக வைக்கப்பட்ட அல்லது இலாபம் அல்லது நட்டம் ஊடாக சீர்மதிப்புப் பெறுமதியில் வகைப்படுத்தப்படுவதில்லை. அங்ஙனமே இவ் வகுதியின் கடன் பிணைகள் நிட்சயமற்ற காலத்திற்கு வைக்கப்பட்டு போதிய நிதி கிடைக்கப் பெற வேண்டிய தேவைகளுக்காக அல்லது சந்தை நிலைவரங்களில் மாற்றம் காரணமாக விற்பனை செய்யக் கூடியவையாகும்.

ஆரம்ப அளவீட்டின் பின்னர் விற்பனைக்குக் கிடைக்கக்கூடிய நிதி முதலீடுகள் பின்னர் சீர்மதிப்பு பெறுமதியில் அளவிடப்பட்டு முதலீடு ஐந்தொகையிலிருந்து விலக்கப்படும் வரை விற்பனைக்குக் கிடைக்கக்கூடிய ஒதுக்கத்தில் ஏனைய

முழுமையான வருவாயாக தேறாத ஆதாயங்கள் அல்லது நட்டங்களுடன் ஏற்பிசைவு செய்யப்படுகிறது.

3.8.3 விலக்கல்

நிதிச் சொத்தொன்று ஏற்புடையவிடத்து நிதிச் சொத்தின் பகுதி அல்லது அதையொத்த சொத்துக்கள் பின்வரும் காரணங்கட்காக விலக்கப்படும்.

(i) சொத்துக்களிலிருந்து காசுப் பாய்ச்சல் பெற்றுக் கொள்ளும் உரிமை முடிவடைந்திருப்பின்;

(ii) நிதிச் சொத்தில் இருந்தும் காசுப் பாய்ச்சலில் இருந்தும் உரிமையை இ.போ.ச மாற்றியிருப்பின் அல்லது "ஊடாகச் செலுத்தும்" முறை மூலம் மூன்றாம் கட்சியினருக்கு பொருண்மை தாமதமின்றி பெற்றுக் கொண்ட காசுப் பாய்ச்சல்களை முழுமையாக கொடுக்கும் கடன்பாட்டை மேற் கொண்டிருப்பின் அல்லது.

(அ) இ.போ.ச சொத்துக்களின் பயன்கள் இடர்கள் யாவற்றையும் பெருமளவில் மாற்றி அல்லது

(ஆ) சொத்துக்களின் பயன்கள் இடர்கள் யாவற்றையும் பெருமளவில் மாற்றாமல் அல்லது வைத்திருக்காமல் ஆனால் சொத்துக்களின் கட்டுப்பாட்டை மாற்றியிருப்பின்

3.8.4 நிதிச் சொத்துக்களின் சேத இழப்பு

ஒவ்வோர் அறிக்கையிலும் திகதியிலும் நிதிச் சொத்து அல்லது நிதிச் சொத்துக்களின் குழுமம் சேதமிழக்கப்பட்டதற்கான உண்மையான சாட்சியம் எதுவும் உளதா என இ.போ.ச மதிப்பிடுகிறது. சொத்தின் ஆரம்ப ஏற்பிசைவின் பின்னர் ஏற்படும் ஒன்று அல்லது அதற்கு மேற்பட்ட சம்பவங்களால் உண்மையான சேத இழப்பு ஏற்பட்டால் மாத்திரமே அதுவும் நிதிச் சொத்துகளிலோ அல்லது நிதிச் சொத்து குழுமத்திலோ நம்பத்தகுந்த விதத்தில் மதிப்பிடக் கூடிய சொத்து அல்லது நிதிச் சொத்துக்களின் தொகுதியில் எதிர்கால காசுப் பாய்ச்சல்களில் தாக்கம் ஏற்பட்டால் மட்டுமே நிதிச் சொத்து அல்லது நிதிச் சொத்துக்களின் குழுமம் சேதமிழந்ததாக கருதப்படலாம்.

கடனாளிகள் அல்லது கடனாளிகள் குழுமமொன்று கடனிற் சிக்கியுள்ளதற்கான அறிகுறிகள், கடமைதிறம்புகை அல்லது சட்டத்திற்கு முரணாக ஒழுகல், அவர்கள் வங்குரோத்து நிலையை அடையக் கூடிய சாத்தியம் அல்லது வேறு நிதி அமைப்புகளுடன் சேரல், நிலுவைகளில்

மாற்றம் அல்லது கடமை திறம்புகையுடன் தொடர்புடைய பொருளாதார நிலைமைகள் மதிப்பிடப்பட்ட எதிர்காலக் காசுப் பாய்வில் அளவிடக் கூடிய குறைவை அவதானிக்கக்கூடிய தரவுகளிலிருந்து அறிகுறி தென்படல் ஆகியன சேதமிழப்பதற்கான சான்றுகளில் அடங்கும்.

(அ) சொத்துவத்தின் குறிப்பிடத்தக்க இடர்களும் பயன்களும் பெரும்பாலான வேளைகளில் பொருள்கள் ஒப்படைக்கப்பட்ட பின்னர் வாங்குநருக்கு கிட்டியதன் பின்னர் பொருள்களின் விற்பனையிலிருந்து கிடைக்கும் வருவாய் ஏற்பிசைவு செய்யப்படுகிறது.

3.9 காசும் காசுக்கு சமனானவையும்

காசும் காசுக்குச் சமமானவற்றில் காசு மீதிகள், அழைப்பு வைப்புகள், கேள்வி மீதான வைப்புகள், காசுப்பாய்வு கூற்று நோக்கங்கட்காக கோரப்படும் போது மீளச் செலுத்தக்கூடிய நிகர் வங்கி மேலதிகப் பற்றுகள், பெறுமதியில் அற்பமாக வரும் இட மாற்றங்களின் பெறுமதி, குறுகிய காலத்தில் மிகவும் எளிதில் பணமாக மாற்றக்கூடிய அறியக் கூடிய காசுத் தொகை முதலீடுகள் ஆகியன அடங்கும்.

3.10 நிதிக் கடன்பாடுகள்

LKAS 39 ன் நோக்கெல்லைக்குள்ளான ஆரம்ப ஏற்பிசைவு அளவீட்டு நிதி இடர்ப்பாடுகளும் காலத் தேய்மானப்படுத்தப்பட்ட கிரயத்தில் இலாபம் அல்லது நட்டம் ஊடாக சீர்மதிப்புப் பெறுமதியில் நிதிக் கடன்பாடுகளாக வகைப்படுத்தப்படுகிறது அல்லது விளைவுத்திறனுடைய தளம்பற்காப்பில் தளம்பற் காப்பு சாதனமாக ஏற்புடையவாறு உய்த்தறிய முடியாதவைகளாக நியமிக்கப்படுகிறது. இ.போ.ச ஆரம்ப ஏற்பிசைவில் அதன் நிதிக் கடன்பாடுகளின் வகைப்படுத்தலைத் தீர்மானிக்கிறது.

எல்லா நிதிக் கடன்பாடுகளும் முதலில் சீர்மதிப்புப் பெறுமதியில் ஏற்பிசைவு செய்யப்பட்டு, கடன்கள், கடன்பாடுகளைப் பெறுத்த மட்டில் காலத் தேய்மானப் படுத்தப்பட்ட கிரயத்தில் முன் கொண்டு செல்லப்படுகிறது. இது ஊடு செயற் கிரயங்கட்கு நேரடியாக உட்பட்டதாகும். இ.போ.சபையின் நிதிக் கடன்பாடுகள் வணிகத்தையும் இதர செலுத்தப் படவேண்டியவைகளையும் உள்ளடக்கியுள்ளது.

3.10.1 அடுத்து வரும் அளவீடு

அடுத்து வரும் நிதிக் கடன்பாடுகளின் அளவீடுகள் காலத் தேய்மானப்படுத்தப்பட்ட கிரயத்திலானது.

3.10.2 ஏற்பிசைவிலிருந்து விலக்குதல்

நிதிக் கடன்பாட்டின் கீழான கடப்பாடு நிறை வேற்றப்படும் போது அல்லது இரத்துச் செய்யப்படும்போது அல்லது முடிவடையும் போது ஏற்பிசைவிலிருந்து விலக்கப்படுகிறது.

3.11 நிதிக் கருவிகளை எதிரீடு செய்தல்

ஏற்பிசைவு செய்யப்பட்ட தொகைகளை எதிரீடு செய்வதற்கு தற்போது வினைப்படுத்தக்கூடிய சட்ட உரிமை நடப்பிலிருப்பதுடன் அதனை நிகர அடிப்படையில் தீர்க்கும் எண்ணமுமிருப்பின் அல்லது சொத்துக்களை விற்று அதே வேளையிலேயே கடன்பாடுகளைத் தீர்க்கும் எண்ணமிருப்பின் மாத்திரமே நிதிச் சொத்துக்களும் நிதிக் கடன்பாடுகளும் எதிரீடு செய்யப்பட்டு நிகர தொகை நிதி நிலைக் கூற்றில் அறிக்கையிடப்படும்.

3.12 இளைப்பாறிய ஊழியர் பயன்கள்

3.12.1 வரையறுக்கப்பட்ட பயன்திட்டங்கள் கம்பனி

தகவுள்ள சகல ஊழியர்கட்கும் 1983 ஆம் ஆண்டின் 12 ஆம் இலக்க பணிக்கொடைச் சட்டக் கொடுப்பனவில் தேவைப்படுத்தப்பட்டவாறு சபை பயன் திட்டங்களை மேற்கொண்டது. பயன் திட்டத்திற்கு வெளியிலிருந்து நிதி கிடைப்பதில்லை. ஊழியர்கட்கு ஒவ்வோராண்டு சேவைக்கும் ஒரு மாத கால சம்பளம் இளைப்பாற்றியின் போது ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

வரையறுக்கப்பட்ட பயன்கள் கடப்பாட்டின் தற்போதைய பெறுமதி எதிர்வு கூறப்பட்ட அலகுவரை முறையை உபயோகித்து அறிக்கையிடும் திகதியில் நிதி நிலைக் கூற்றில் கடன்பாடு ஏற்பாடு செய்யப்படுகிறது. இந்த உருப்படி நடப்பு கடன்பாட்டில் அல்லாத நிதி நிலைக் கூற்றில் குறிப்பிடப்பட்டுள்ளது. ஆயுட்கால இலாபங்கள் அல்லது நட்டங்கள் அவை எழும் நிதியாண்டில் இதர முழுமையான வருமானத்தில் வருவாயாக அல்லது செலவாக ஏற்பிசைவு செய்யப்பட்டுள்ளது.

3.12.2 வரையறை செய்யப்பட்ட பயன்சார் பங்களிப்புகள்

ஊழியர் சேமலாப நிதிக்கும் ஊழியர் நம்பிக்கைப் பொறுப்பு நிதியத்திற்கும் தகவுடைய சகல ஊழியர்களும் பொருத்தமான பங்களிப்பு

நிதிகளில் பொருத்தமான நியதிச் சட்டங்கட்கேற்ப உட்பட்டவராவர். வரையறுக்கப்பட்ட பங்களிப்பு செய்யப்படும் போது இலாப நட்டத்தில் செலவாக ஏற்பிசைவு செய்யப்படுகிறது.

3.13 **வணிகமும் இதர செலுத்த வேண்டியவைகளும்**

வணிகமும் இதர செலுத்த வேண்டியவைகளும் கிரயத்தில் குறிப்பிடப்பட்டுள்ளன.

3.14 **ஏற்பாடுகள்**

பழைய நிகழ்வொன்றின் விளைவாக நம்பத்தகு விதத்தில் மதிப்பிடக் கூடிய தற்போதைய சட்டம் அல்லது ஆக்கபூர்வ கடப்பாடு சபைக்கிருப்பின், அதனால் கடப்பாட்டைத் தீர்ப்பதற்கு பொருளாதாரவியல் பயன்கள் வெளியேற்றம் சாத்தியமாகவிருக்குமிடத்து ஏற்பாடு ஒன்று ஏற்பிசைவு செய்யப்படுகிறது.

3.15 **குறைவாகப் பயன்படுத்தப்படும் இருப்புகட்கான ஏற்பாடு**

சபை அதன் கிரமமான மதிப்பீடுகளின் மூலம் சரக்குத் தொக்குகளில் சேதமிழப்பை அடையாளங் காணின் குறைவாகப் பயன்படுத்தப்படும் இருப்புகட்கான ஏற்பாடுகளைச் செய்யும்.

3.16 **முதலீட்டு ஈடுபாட்டுப் பொறுப்புகளும் நிகழ்தரி பரிப்பும்.**

பொருளியல் பயன்களின் மாற்றம் சாத்தியமாகாத விடத்து அல்லது நம்பத்தக்க விதத்தில் அளவீடு செய்ய முடியாதவிடத்து நிகழ்தகு பரிப்புகள் அவற்றின் மெய்மைநிலை சில எதிர்கால நிகழ்வுகளால் அல்லது நடப்பு கடப்பாடுகளால் மட்டுமே உறுதிப்படுத்தக்கூடிய கடப்பாடுகளாகும்.

முழுமையான வருவாய்க் கூற்று

3.17 **வருவாய்**

பயணிப் போக்குவரத்திலிருந்து வரும் வருவாய் சபை வருவாயை பிரதிநிதித்துவப்படுத்துகிறது.

3.17.1 **வருவாய் ஏற்பிசைவு**

பொருளியல் பயன்கள் சபைக்கு கிட்டுவது சாத்தியம் எனவும் வருவாயும் அதனோடு இணைந்த ஏற்பட்ட அல்லது ஏற்படக்கூடிய செலவுகளும் நம்பத்தகு வகையில் அளவிடக்கூடிய அளவிற்கு வருவாய் ஏற்பிசைவு செய்யப்படுகிறது. பெறப்பட்ட அல்லது வருமதியான பயனின் நிதி மதிப்புப் பெறுமதியில் வணிகக் கழிவுகளின் நிகரிலும், விற்பனை வரிகளிலும் சபையினுள் விற்பனையை நீக்கிய பின்னர் வருவாய் ஏற்பிசைவு செய்யப்படுகிறது.

(அ) **பொருள்களின் விற்பனை**

சொத்துவத்தின் குறிப்பிடத்தக்க இடர்களும் பயன்களும் பெரும்பாலான வேளைகளில் பொருள்கள் ஒப்படைக்கப்பட்ட பின்னர் வாங்குநருக்கு கிட்டியதன் பின்னர் பொருள்களின் விற்பனையிலிருந்து கிடைக்கும் வருவாய் ஏற்பிசைவு செய்யப்படுகிறது. மாறாத வட்டி விகிதத்தை உருவாக்கக் கூடியவாறு குத்தகைக் காலத்தில் ஒவ்வோர் காலவெல்லைக்கும் நிதிச் செலவுகள் பங்கிடப்படுகின்றன.

(ஆ) **சேவைகள் வழங்கல்**

சேவைகள் வழங்கப்படும் அல்லது செயலாற்றப்படும் காலத்திற்குரிய கணக்கீட்டுக் காலவெல்லையில் சேவைகள் வழங்கும் வருவாய் ஏற்பிசைவு செய்யப்படும்.

(இ) **இதர வருவாய்**

கொடுப்பனவைப் பெற்றுக் கொள்வதற்கான சபையின் உரிமை தாபிக்கப்பட்டதும் பங்கிலாபங்களிலிருந்து கிடைக்கும் வருவாய் ஏற்பிசைவு செய்யப்படும்.

ஆதனம், பொறித் தொகுதி, உபகரணங்கள் ஆகியவற்றின் விற்பனையில் இருந்து கிடைக்கும் இலாபங்கள் அல்லது நட்டங்கள், விற்பனை வருமதிகள் சொத்துக்களின் முன் கொணரப்படும் பெறுமதி சார்புடைய செலவுகள் ஆகியவற்றைக் கழித்த பின்னர் ஏற்பிசைவு செய்யப்படுகிறது.

வெளிநாட்டு நாணய ஆதாயங்களும் நட்டங்களும் நிகர் அடிப்படையில் அறிக்கையிடப்படுகின்றன.

கழிவுத் துண்டுகள் விற்பனையிலிருந்து கிடைக்கும் வருவாய் அனேகமாக பொருட்கள் ஒப்படைக்கப்பட்டதும் வாங்குநருக்கு பொருட்களின் சொத்துவத்தின் குறிப்பிடத்தக்க இடர்களும் பயன்களும் அளிக்கப்படும் போது ஏற்பிசைவு செய்யப்படுகிறது.

முதலீட்டு ஆதனங்களின் தொழிற்பாட்டுக் குத்தகைகளிலிருந்து கிடைக்கும் வாடகை வருவாய் குத்தகை காலத்திற்கு நேர்கோட்டு முறையில் கணக்கிடப்படுகிறது.

3.18 அரசாங்க கொடைகள்

அரசாங்க கொடைகள் கிடைக்குமெனவும் அதற்கு இயைபுள்ள சகல நிபந்தனைகளும் நிறைவேற்றப்படும் எனவும் நியாயமான உறுதிப்படுத்தல் உள்ளவிடத்து அவை ஏற்பிசைவு செய்யப்படுகின்றன. கொடை செலவு உருப்படியுடன் தொடர்புடையதாயின் அக் கொடையை இழப்பீடு செய்யப்படும் செலவுகள் முறைவழியாக உரிய காலங்களுக்கு வருவாயாக ஏற்பிசைவு செய்யப்பட்டு செலவிடப்படுகிறது.

கொடை சொத்துடன் தொடர்புடையதாயின் தொடர்புடைய சொத்தின் எதிர்பார்க்கப்படும் பயன்தரு ஆயுட்காலத்தில் சம தொகைகளாக வருவாயாக ஏற்பிசைவு செய்யப்படுகின்றன.

இ.போ.ச பணம் சாரா கொடைகள் பெறுமிடத்து சொத்தும் கொடையும் பெயரளவேயான தொகையில் பதியப்பட்டு எதிர்பார்க்கப்படும் பயன்தரு ஆயுட்காலத்தில் மேலிடாகத் தோற்றும் சொத்தின் பயன்களை நுகரும் மாதிரியுருவில் சம ஆண்டுத் தவணைக் கட்டணங்களாக இலாபத்திற்கு அல்லது நட்டத்திற்கு விடுவிக்கப்படுகிறது. கடன்கள் அல்லது அதையொத்த உதவி தொடர்புடைய அரசாங்கங்களால் அல்லது நிறுவகங்களால் பிரயோகமாகக் கூடிய நடப்பு சந்தை விகிதத்துடன் ஏற்பாடு செய்யப்படும் போது உசித வட்டியின் விளைபயன் அரசாங்க கொடையாக கருதப்படுகிறது.

3.19 செலவு ஏற்பிசைவு

3.19.1 தொழிற்பாட்டு செலவுகள்

ஓராண்டின் இலாபத்தை கணக்கிடும் போது வியாபாரத்தின் நாளாந்த செயற்பாட்டிற்கும், ஆதனம், பொறித்தொகுதி, உபகரணங்கள் ஆகியவற்றை வினைத்திறமை நிலையில் வைத்திருப்பதற்கான பேணலுக்குமான செலவுகள் முழுமையான வருவாய்க் கூற்றுக்குச் சாட்டப்படுகிறது. நிதிச் சொத்துக்களின் சேதமிழப்பு, குறைவாகப் பயன்படுத்தும் இருப்புகள், நன்கு அறிந்த கடன்பாடுகள், ஆதனம்,

பொறித் தொகுதி, உபகரணங்கட்கான தேய்மானம் ஆகியவற்றுக்கும் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

3.19.2 **குத்தகைக் கொடுப்பனவுகள்**

தொழிற்பாட்டு குத்தகைகளின் கீழான கொடுப்பனவுகள் குத்தகைக் காலத்தில் நேர்கோட்டு அப்படையில் இலாபமாக அல்லது நட்டமாக ஏற்பிசைவு செய்யப்படுகிறது. நிதிச் செலவுகட்கும் நிலுவையிலுள்ள கடன்பாடுகள் குறைப்பிற்கும் இடையே ஆகக் குறைந்த குத்தகைக் கொடுப்பனவுகள் நிதிக் குத்தகைகளின் கீழ் பங்கிடப்படுகின்றன.

3.19.3 **குத்தகைக் கொடுப்பனவுகள்**

உத்தேசிக்கப்படும் பாவனைக்கு அல்லது விற்பனைக்கு கணிசமான அளவு காலம் எடுக்குமெனக் கருதக் கூடிய சொத்துக்களின் சுவீகரிப்பு நிருமாணம் அல்லது உற்பத்தி ஆகியவற்றுடன் நேரடியாகத் தொடர்புடைய கடன் படுகிரயங்கள் அந்தவந்த சொத்துக்களின் கிரயத்தின் ஒரு பகுதியாக முதலீடாக்கப்படுகிறது. இதர கடன்படு கிரயங்கள் யாவும் அவை நிகழ்கின்ற காலத்திற்கேற்ப செலவாகக் காட்டப்படுகிறது. கடன்படு கிரயத்தில் நிதி கடன்படுதலில் சபைக்கு ஏற்படும் இதர செலவுகளில் கடன்படு கிரயமும் வட்டியும் அடங்கும்.

3.19.4 **தேசிய நிதி வருவாய் (செலவுகள்)**

நிதிச் சொத்துக்களின் சீர்மதிப்பு பெறுமதியில் இலாபம் அல்லது நட்டம் ஊடாக சீர்மதிப்புப் பெறுமதியின் மாற்றங்களும், முதலீட்டு நிதி மீதான வட்டி வருவாயும், பணியாளர் கடன்களும் நிதி வருவாயில் அடங்கும். விளைவு வட்டி முறையை உபயோகித்து வட்டி வருவாய் இலாபம் அல்லது நட்டம் ஊடாக படிப்படியாகப் பெருகும் போது ஏற்பிசைவு செய்யப்படுகிறது.

கடன்படு மீதான வட்டி செலவு, ஏற்பாடுகளின் மீதான கழிவுகளை கழற்றுதல், இலாபம் அல்லது நட்டம் ஊடாக சீர் மதிப்புப் பெறுமதியூடாக சீர் மதிப்பு பெறுமதியில் நிதிச் சொத்துக்களின் சீர் மதிப்பு பெறுமதியில் மாற்றங்கள், நிதிச் சொத்துக்களில் ஏற்பிசைவு செய்யப்பட்ட சேதமிழப்பு நட்டங்கள், தகைமை பெறும் சொத்தொன்றின் சுவீகரிப்பு, நிருமாண வேலை அல்லது உற்பத்தி ஆகியவற்றுடன் நேரடியாக தொடர்பற்ற கடன்படு கிரயங்கள் ஆகிய நிதிச் செலவில் அடங்கும் விடயங்கள் இலாபம் அல்லது நட்டத்தில் விளைவு வட்டி முறையை உபயோகித்து ஏற்பிசைவு செய்யப்படுகிறது.

3.20 **உறவு முறை சார்ந்தோர் கொடுக்கல் வாங்கல்கள்**

உறவு முறை சார்ந்தோரிடையே ஒரு விலை விதிக்கப்பட்டதா இல்லையா என்பதைக் கருத்திற் கொள்ளாமல் ஒரு பகுதியினரின் மறு பகுதியினர்கள் நிதி, செயற்பாட்டு கொள்கைகள் தீர்மானங்களை கட்டுப்படுத்தி அல்லது குறிப்பிட்ட அளவில் செலவாக செலுத்திய கொடுக்கல் வாங்கல்கள் தொடரில் வெளிப்படுத்தல் செய்யப்பட்டுள்ளது.

3.21 **காசுப் பாய்ச்சல்**

நேரில் முறையை உபயோகித்து தயாரித்த காசுப்பாய்ச்சல்களின் கூற்று சமர்ப்பிக்கும் நோக்கத்திற்காக செலுத்திய பங்கிலாபமும் வட்டியும், நிதியளிக்கும் காசுப் பாய்ச்சலாக வகைப்படுத்தப்படுவதுடன் பெற்றுக் கொண்ட வட்டியும், பங்கிலாபமும் நிதியளிக்கும் காசுப் பாய்ச்சலாக வகைப்படுத்தப்படும்.

3.22 **அறிக்கையிடும் காலத்திற்குப் பின் ஏற்படும் நிகழ்வுகள்**

அறிக்கையிடும் காலத்தின் முடிவிற்கும் நிதிக் கூற்றுகள் வெளியிடப்படுவதற்கு அதிகார மளிக்கப்படும் உரிய திகதிக்குமிடையே ஏற்படும் சாதகமானவைகளும் பாதகமானவைகளுமான நிகழ்வுகளாகும்.

அறிக்கையிடும் காலத்தின் பின்னர், ஏற்படும் நிகழ்வுகளின் பொருண்மைத்தன்மை ஆராயப்பட்டு, தேவையான விடத்து, நிதிக் கூற்றுக்களில் தேவையான சீராக்கல்கள் அல்லது வெளிப்படுத்தல்கள் செய்யப்படுகின்றன.

இலங்கை போக்குவரத்து சபை

31.12.2017 இல் உள்ளவாறு நிதி நிலை அறிக்கை

சொத்துகள்	குறிப்பு		
நடைமுறையல்லா சொத்துகள்		2017	2016
காணி,கட்டிடம்,பொறி, உபகரணம்	01	10,340,953,795.10	11,074,489,726.67
ஏனைய நிதி சொத்துகள்	02	34,715,625.00	33,187,500.00
நடைபெறும் மூலதனம்		1,979,981.66	49,230,113.33
செயற்படுத்தப்படாத கணக்குகள்	03	9,935,459,128.35	9,935,459,128.35
		20,313,108,530.11	**21,092,366,468.35**
நடைமுறை சொத்துகள்			
கையிருப்புகள்	04	1,152,423,351.51	966,282,963.41
ஏனைய பெறுவனவுகள்	05	2,578,805,886.07	2,604,212,422.26
வங்கி மீதிகள்	06	722,230,401.83	507,506,924.57
காசு மீதிகள்	07	3,629,870,322.71	3,129,581,014.93
மொத்த நடைமுறை சொத்துகள்		**8,083,329,962.12**	**7,207,583,325.18**
மொத்த சொத்துகள்		**28,396,438,492.23**	**28,299,949,793.53**
உரிமையாண்மையும் பொறுப்புகளும்			
மூலதனமும் ஒதுக்கங்களும்			
உரிமை மூலதனம்		350,000,000.00	350,000,000.00
திரண்ட நட்டம்	08	(43,540,320,699.21)	(45,122,503,972.91)
திறைசேரி பங்கு மூலதனம்		3,944,890,550.00	3,944,890,550.00
ஊழியர்களின் பங்கு		411,144,470.00	411,144,470.00
அரச மாணியங்கள்	09	2,981,392,312.95	2,981,392,312.95
ஒதுக்கங்கள்	10	5,470,757,941.09	5,470,757,941.09
விற்பனை ஒதுக்கங்கள்		34,465,625.00	32,937,500.00
மொத்த உரிமையாண்மை		**(30,347,669,800.17)**	**(31,931,381,198.86)**
நடைமுறையல்லா பொறுப்புகள்			
பணிக்கொடைக்கான ஏற்பாடு	11	14,507,027,675.50	13,600,701,184.62
ஏனைய நடைமுறையல்லா பொறுப்புகள்	12	3,965,136,292.55	6,242,426,105.76
செயற்படுத்தப்படாத கணக்குகள்	13	26,054,954,882.06	26,054,954,882.06
		44,527,118,850.11	**45,898,082,172.44**
நடைமுறை பொறுப்புகள்			
ஏனைய கொடுபடவேண்டியவை	14	13,521,208,530.62	13,443,997,348.07
வங்கி மேலதிகப்பற்று	07	695,780,911.67	889,251,471.89
மொத்த நடைமுறை பொறுப்புகள்		**14,216,989,442.29**	**14,333,248,819.96**
மொத்த உரிமையாண்மை, பொறுப்புகள்		**28,396,438,492.23**	**28,299,949,793.53**

.....	.....	.....
தலைவர்	பிரதம நிதி முகாமையாளர்	இயக்குனர் சபை உறுப்பினர்
இலங்கை போக்குவரத்து சபை	இலங்கை போக்குவரத்து சபை	இலங்கை போக்குவரத்து சபை

இலங்கை போக்குவரத்து சபை

31.12.2017 ல் முடிவடைந்த வருடத்திற்கான வருமானக் கூற்று

	குறிப்பு	2017	2016
வருமானம்	15	33,928,662,066.75	30,260,909,879.80
செயற்பாட்டு செலவினங்கள்	16	34,143,564,271.79	34,566,216,508.75
தேய்மானத்திற்கு முன் இலாபம்/ (நட்டம்)		**(214,902,205.04)**	**(4,305,306,628.95)**
ஏனைய வருமானங்கள்	17	12,315,919,738.55	13,149,498,370.04
ஏனைய வருமானத்திற்கு பின் இலாபம் / (நட்டம்)		**12,101,017,533.51**	**8,844,191,741.09**
நிர்வாகச் செலவுகள்	18	10,726,847,931.00	10,327,880,818.69
செயற்பாட்டு இலாபம்/(நட்டம்)		**1,374,169,602.51**	**(1,483,689,077.60)**
நிதி, ஏனைய செலவுகள்	19	735,401,293.11	720,243,563.50
நிதி வருமானம்		80,426,024.50	56,663,229.15
தேறிய நிதி செலவுகள்		**(654,975,268.61)**	**(663,580,334.35)**
உற்பத்தி நட்டத்திற்கு முன் இலாபம்/ (நட்டம்)		**719,194,333.90**	**(2,147,269,411.94)**
உற்பத்தி நட்டம்	20	67,225,998.59	129,115,453.55
இந்நிதிக்கூற்றுக்களை இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க தயாரித்து நியாயமாகச் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

අංක 306/72, පොල්දූව පාර, බත්තරමුල්ල, ශ්‍රී ලංකාව இல. 306/72, பொல்துவ வீதி, பத்தரமுல்லை, இலங்கை. No. 306/72, Polduwa Road, Battaramulla, Sri Lanka.
+94 11 2 88 70 28 - 34 +94 11 2 88 72 23 ag@auditorgeneral.gov.lk www.naosl.gov.lk

1.3 கணக்காய்வாளரின் பொறுப்பு

அதியுயர் கணக்காய்வு நிறுவனங்களின் சர்வதேச நியமங்களுக்கு ஒத்ததாக (ஐஎஸ்எஸ்ஏஐ 1000 - 1810) இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு இணங்க மேற்கொள்ளப்படும் கணக்காய்வின் அடிப்படையில் இந்நிதிக்கூற்றுக்கள் மீதான அபிப்பிராயத்தை வழங்குவது எனது பொறுப்பாகும்.

1.4 அபிப்பிராய மறுப்பிற்கான அடிப்படை

இவ்றிக்கையின் 2.2 ஆம் பந்தியில் சுட்டிக்காட்டப்பட்ட விடயங்களின் பெறுபேறாக நிதி நிலமைக்கூற்றிலும் விரிவான வருமானக் கூற்றிலும் உரிமை மூலதன மாற்றக் கூற்றிலும் காசுப் பாய்ச்சல் கூற்றிலும் அறிக்கையிடப்பட்ட அல்லது அறிக்கையிடப்படாத விடயங்களும் மூலாதாரங்களுக்குரிய எந்தவொரு சீராக்கல்களுக்குமான அவசியம் இருந்ததா என்பதை என்னால் தீர்மானிக்க முடியாது போனது.

2. நிதிக்கூற்றுக்கள்

2.1 அபிப்பிராய மறுப்பு

இவ்வறிக்கையின் 2.2 ஆம் பந்தியில் சுட்டிக்காட்டப்பட்ட விடயங்களின் காரணமாக கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படையை வழங்குவதற்கு போதுமான மற்றும் உசிதமான கணக்காய்வுச் சான்றை என்னால் பெற முடியாதுள்ளது. அதன் காரணமாக, இந்நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக நான் அபிப்பிராயத்தைத் தெரிவிக்கவில்லை.

2.2 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

2.2.1 இலங்கை கணக்கீட்டு நியமங்கள்

பின்வரும் இணங்காமை அவதானிக்கப்பட்டன.

(அ) இலங்கை கணக்கீட்டு நியமம் 16

(i) சொத்துக்களது நியாயபூர்வமான பெறுமதி அதன் கொண்டு செல்லும் பெறுமதியுடன் குறிப்பிடத்தக்க வேறுபாடு அடையுமிடத்து அறிவித்தல் வெளியிடப்பட வேண்டுமாயினும், நியமத்தின் 34 ஆம் பந்தியின்

பிரகாரம் சொத்துக்களை மீளப் பெறுமதியிடுவதற்கான நடவடிக்கை மேற்கொள்ளப்படவில்லை.

(ii) நியமத்தின் 58 ஆம் பந்தியின் பிரகாரம் காணி மற்றும் கட்டிடங்களது பெறுமதி வெவ்வேறாக இனங்காணப்பட வேண்டுமாயினும், கணக்கீட்டு நியமத்திற்கு முரணாக காணி மற்றும் கட்டிடங்களது மொத்தப் பெறுமதியையும் வெவ்வேறாக இனங்கண்டு கணக்கிலிடுவதற்கான நடவடிக்கை எடுக்கப்படவில்லை.

(iii) சபையானது பயன்படுத்த முடியாத பஸ் வண்டிகளது ரூபா 1,367,754,792 பெறுமதியையும் சொத்துக்கள், பொறித் தொகுதி, உபகரணங்கள் என்பவற்றின் கீழ் நிதிக்கூற்றுக்களில் காட்டியிருந்தது.

(ஆ) இலங்கை கணக்கீட்டு நியமம் 19

நியமத்தின் 57 ஆம் பந்தியின் பிரகாரம் அர்த்தத்தை தெளிவுபடுத்தும் நலன்களுக்கான பொறுப்புகளை முன் கூட்டியே உணர்ந்து, அவற்றை அலகு விதி அடிப்படையில் கணிப்பிட வேண்டுமாயினும், அவ்வாறல்லாது ஊழியர்களது மாதாந்தச் சம்பளம் அல்லது அரை மாதச் சம்பளத்தை சேவைக் காலத்தால் பெருக்கி பணிக்கொடைக்கான நிதியேற்பாடு கணிப்பிடப்பட்டிருந்தது.

2.2.2 கணக்கீட்டுக் கொள்கைகள்

நிறுவனமானது கணனி மென் அணிகளை அருவச் சொத்துக்களாக இனங்காண்பதற்கான கணக்கீட்டுக் கொள்கை ஒன்றை இனங்கண்டிராததுடன், 2015 ஆம் ஆண்டில் கொள்வனவு செய்யப்பட்ட ரூபா 9,510,486 பெறுமதியான மென் அணிகளுக்கு மீளாய்வாண்டிற்கென ரூபா 2,377,621 காலக்கழிவு நிதியேற்பாட்டைச் செய்திருக்கவில்லை.

2.2.3 தொங்கல் கணக்கு

சபரகமுவ பிரதேசத்தினதும் கொழும்பு பிரதேசத்தினதும் தொங்கற் கணக்கு மீதிகளான முறையே ரூபா 43,954 வரவு மற்றும் ரூபா 434,864 செலவு மீதி என்பவற்றை தீர்வு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படவில்லை.

2.2.4 கணக்காய்விற்கான சான்றுகளின்மை

பின்வரும் கொடுக்கல் வாங்கல்கள் தொடர்பாக அவற்றுக்கெதிரே சுட்டிக் காட்டப்பட்டுள்ள சான்றுகள் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்படாமையால் அவற்றைக் கணக்காய்வில் சான்றுறுதிப்படுத்தவோ ஏற்றுக்கொள்ளவோ முடியாதிருந்தது.

	விடயம்	பெறுமதி	சமர்ப்பிக்கப்படாத சான்று
		ரூபா	
(i)	செயற்பாடற்ற கணக்குகள் -		
	- வரவு	9,935,459,128	விரிவான பட்டோலைகள், காலப்பகுப்பாய்வு, மீதிகளை உறுதிப்படுத்துவதற்கான கடிதங்கள் என்பன
	- செலவு	26,054,954,882	
(ii)	வர்த்தகக் கடன் கொடுத்தோர்	3,042,220,390	
(iii)	ஏனைய கடன் கொடுத்தோர்	127,397,176	
(iv)	காசாளர் நிலுவை மீதி	34,388,213	
(v)	நடத்துனர் மோசடி மீதி	7,687,289	
(vi)	நானாவித கடன் பட்டோர்	111,795,741	
(vii)	பெற வேண்டிய வருமானம்	243,166,958	
(viii)	வர்த்தகக் கடன் பட்டோர் மீதி	7,972,076	
(ix)	கொடுப்பனவு செய்ய வேண்டிய ஊழியர் சேமலாப நிதியம் (SLTB)	607,284,153	
(x)	கொடுப்பனவு செய்ய வேண்டிய ஊழியர் சேமலாப நிதியம் (மத்திய வங்கி) 2017 ஆம் ஆண்டிற்கு முற்பட்டவை	1,680,688,187	பட்டோலை, காலப்பகுப்பாய்வு,மீதிகளை உறுதிப்படுத்தும் கடிதங்கள் என்பன
(xi)	கொடுப்பனவு செய்ய வேண்டிய ஊழியர் சேமலாப நிதியம் (மத்திய வங்கி) 2017	171,828,031	
(xii)	கொடுப்பனவு செய்ய வேண்டிய ஊழியர் நம்பிக்கைப் பொறுப்பு நிதியம் (மத்திய வங்கி)	40,459,519	
(xiii)	கொள்வனவுக்கான முற்பணம் (சோகம)	101,641,771	
(xiv)	காணி விற்பனையால் பெற்ற முற்பணம்	1,000,000,000	விற்பனை செய்த காணி மற்றும் பெறுமதி தொடர்பான பட்டோலை

2.3 பெற வேண்டிய மற்றும் கொடுப்பனவு செய்ய வேண்டிய கணக்குகள்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) மத்திய பஸ் தரிப்பு அலுவலகக் கடை வாடகை வருமான நிலுவையாக ரூபா 1,863,414 தொகையானது 2009 ஆம் ஆண்டு தொடக்கம் இருந்து வருவதுடன், அதனை அறவிடுவதற்கு மீளாய்வாண்டின் இறுதியளவிலும் நடவடிக்கை எடுக்கப்படவில்லை.

(ஆ) வட மேல் பிரதேச அலவ்வை டிப்போவில் 2015 ஆம் ஆண்டிற்கு முன்னர் தீவிரவாதத் தாக்குதல்களினால் மரணமடைந்த ஊழியர்களுக்குக் கொடுப்பனவு செய்யப்பட்ட சம்பளத்திற்கு இலங்கை போக்குவரத்துச் சபையின் தலைமை அலுவலகத்திலிருந்து பெற வேண்டிய ரூபா 2,174,752 மீதி நானாவித கடன்பட்டோர் மீதியில் உள்ளடக்கப்பட்டிருந்ததுடன், அம்மீதி தீர்வு செய்யப்படாமலுமிருந்தது.

(இ) பெற வேண்டிய வருமான மீதியில் சபரகமுவ பிரதேசத்தின் இராணுவப் போக்குவரத்து, பொலிஸ் அனுமதிப்பத்திரம் மற்றும் இராணுவ அனுமதிப்பத்திரம் என்பவற்றின் பொருட்டு 5 ஆண்டுகளுக்கும் மேலாக ரூபா 15,110,583 கூட்டுத் தொகையை அறவிடுவதற்கான நடவடிக்கை எடுக்கப்படாதிருந்தது.

(ஈ) 2017 ஆம் ஆண்டிறகு முன்பிருந்தே ஊழியர் சேமலாப நிதியத்திற்கு முறையாக பங்களிப்புத் தொகையை வழங்காததன் காரணமாக 2017 டிசெம்பர் 31 இல் உள்ளவாறு ரூபா 1,680,688,187 கொடுப்பனவு செய்ய வேண்டிய மீதியாக இருந்ததுடன், அத்தொகையைத் தீர்வு செய்வதற்கான நடவடிக்கை எடுக்கப்படவுமில்லை.

(உ) களுத்துறை சாரதிகள் பயிற்சிப் பாடசாலையிலிருந்து பெற வேண்டிய மீதி ரூபா 12,305,959 ஆகும். இது 3 ஆண்டுகளைக் கடந்திருந்தபோதும், தீர்வு செய்யப்படுவதற்கான நடவடிக்கை எடுக்கப்படாதிருந்தது.

(ஊ) கண்டி தெற்கு டிப்போவில் ரூபா 4,737,950, பாணந்துறை டிப்போவில் ரூபா 23,546,483, மத்துகம டிப்போவில் ரூபா 26,952,578, அலுத்கம டிப்போவில் ரூபா 6,179,118 எனக் கடன் கொடுத்தோர் மீதிகள் 05 ஆண்டுகளுக்கு மேற்படத் தீர்வு செய்யப்படுவதற்கான நடவடிக்கை இன்றியிருந்தன.

(எ) 2014, 2015 ஆம் ஆண்டுகளில் வாடகைக் கொள்வனவு அடிப்படையின் கீழ் கொள்வனவு செய்யப்பட்ட 2200 பஸ் வண்டிகளின் பொருட்டு கொடுப்பனவுத் தவணைப் பணமாக 2017 டிசெம்பர் 31 இல் உள்ளவாறு ரூபா 6,726,713,973 கொடுப்பனவு செய்ய வேண்டியிருந்தது. இதன் பொருட்டு ரூபா 6,692,000,000 டிப்போக்களிலிருந்து வந்தடைய வேண்டுமாயினும், அதனைப் பெற்று, வாடகைக் கொடுப்பனவுத் தவணைப் பணத்தைத் தீர்வு செய்வதற்கான நடவடிக்கை எடுக்கப்படவில்லை.

(ஏ) தீர்வு செய்யப்படாத ரூபா 1,565,050,215 கூட்டுத் தொகையுடைய கொள்வனவு முற்பண மீதியில், 58 சதவீதத்தைக் குறிக்கும் ரூபா 914,763,169 ஒன்று முதல் 03 ஆண்டுகளாகவும் 30 சதவீதமான ரூபா 479,811,048 மூன்று ஆண்டுகளுக்கு மேலாகவும் தீர்வு செய்யப்படாதிருந்தன.

2.4 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள், முகாமைத்துவத் தீர்மானங்கள் என்பவற்றுடன் இணங்காமை

பின்வரும் இணங்காத சந்தர்ப்பங்கள் அவதானிக்கப்பட்டன.

சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள், முகாமைத்துவத் தீர்மானங்கள் என்பவற்றுடனான தொடர்பு	இணங்காமை
(அ) இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதிப்பிரமாணங்கள்	
நிதிப்பிரமாணம் 177	பதுளை டிப்போவில் காசு குறைவாக வங்கியிலிடப்பட்டமையால் 2012 தொடக்கம் அதிகரித்தவாறிருக்கும் ரூபா 34,249,522 மீதியிருந்ததுடன், அது தொடர்பாக குறித்த நிதிப் பிரமாணத்தின் பிரகாரம் டிப்போ நடவடிக்கை எடுத்திருக்கவுமில்லை.

(ஆ)	1999 ஒக்டோபர் 08 ஆந் திகதிய 22/99 ஆம் இலக்க பொது நிர்வாகச் சுற்றறிக்கை --- 1.16 ஆம் பிரிவு	உத்தியோகத்தர்களுக்கு உத்தியோகபூர்வ வாகனங்களை வழங்குகையில் அமைச்சினது செயலாளரின் அங்கீகாரம் பெறப்பட வேண்டுமாயினும், சபையானது இச்சுற்றறிக்கைக்கு முரணாக உத்தியோகத்தர்களுக்கு உத்தியோகபூர்வ வாகனங்களை வழங்கியிருந்தது.
(இ)	2009 யூன் 02 ஆந் திகதிய பீஈடீ 12 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கை --- 8.3.9 ஆம் பிரிவு	சுற்றறிக்கைக்கு முரணாக சபைக்குச் சொந்தமான 02 வாகனங்கள் போக்குவரத்து மற்றும் சிவில் வான் சேவைகள் பிரதி அமைச்சினது அலுவலகத்திற்கும் ஜாதிக சேவக சங்கத்திற்கும் வழங்கப்பட்டிருந்ததுடன், அதன் பொருட்டு 2017 ஆம் ஆண்டிற்கென முறையே 390 லீட்டர் மற்றும் 1667 லீட்டர் எரிபொருளும் வழங்கப்பட்டிருந்தது. மேலும், இச்சுற்றறிக்கைக்கு முரணாக இரு நடத்துனர்களும் ஒரு சாரதியும் ஒரு பாதுகாப்புக் காவலரும் சம்பளம் மீளளிக்கப்படும் அடிப்படையில் வெளி நிறுவனங்களுக்கு விடுவிக்கப்பட்டிருந்தனர்.
(ஈ)	2003 யூன் 02 ஆந் திகதிய பீஈடீ 12 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கையின் 9.7	(i) சுற்றறிக்கையின் பிரகாரம் பொதுத் திறைசேரியின் அங்கீகாரமின்றி உத்தியோகத்தர்களுக்கு படி

ஆம் பிரிவு மற்றும் 2000 சனவரி 11 ஆந் திகதிய பீஎப்பீ 5 ஆம் இலக்க அரச நிதிச் சுற்றறிக்கை என்பன	வழங்கப்படலாகாது. எவ்வாறாயினும், சபையின் தலைமை அலுவலகத்தில் மாத்திரம் 19 உத்தியோகத்தர்களுக்கு 2017 ஆம் ஆண்டில் விசேட படியாக ரூபா 1,900,000 கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தது.
	(ii) சுற்றறிக்கைப் பிரகாரம் திறைசேரியின் அனுமதியின்றி, டிப்போக்களது செயலாற்றலை அடிப்படையாகக் கொண்டு டிப்போ முகாமையாளர், உதவி முகாமையாளர், போக்குவரத்து மற்றும் பொறியியில் உத்தியோகத்தர் ஆகியோருக்கு மாதாந்தம் ஆகக்கூடிய தொகையாக ரூபா 100,000 ஊக்குவிப்புப் படி வழங்கப்பட்டிருந்தது.

3. நிதிசார் மீளாய்வு

3.1 நிதிப் பெறுபேறுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம், 2017 டிசெம்பர் 31 இல் முடிவுற்ற ஆண்டிற்கான நிதிப் பெறுபேறு ரூபா 1,616,709,589 மிகை ஆகும். இதற்கெதிரான முன்னைய ஆண்டின் பற்றாக்குறை ரூபா 632,619,173 ஆகும். முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில், மீளாய்வாண்டின்போது மிகையானது ரூபா 2,249,328,762 அதிகரித்திருந்தது. சபையின் வருமானம் ரூபா 3,667,752,180 அதிகரித்தமையும் நிதிசார் வருமானம் ரூபா 23,762,795 அதிகரித்தமையும் உற்பத்தி நட்டம் ரூபா 61,889,455 குறைவடைந்தமையும் மேற்படி அதிகரிப்புக்கான முக்கிய காரணிகளாகும்.

மீளாய்வாண்டினதும் முன்னைய 04 ஆண்டுகளினதும் நிதிப் பெறுபேறுகளைப் பகுப்பாய்வு செய்யின், 2013 முதல் 2016 வரை சபையின் பற்றாக்குறை கிரமமாகக் குறைவடைந்திருந்ததுடன், 2017 ஆம் ஆண்டில் மிகை அவதானிக்கப்பட்டது.

ஊழியர்களது ஊதியம் மற்றும் நடைமுறை அல்லாத சொத்துக்களுக்கான தேய்மானம் என்பவற்றைக் கருத்திற் கொள்ளுமதிடத்து சபையின் 2013 ஆம் ஆண்டிற்கான ரூபா 12,709,377,743 பங்களிப்பானது 2017 ஆம் ஆண்டில் ரூபா 20,231,073,915 வரை தொடர் அதிகரிப்புக்குள்ளாகியிருந்தது.

4. செயற்பாட்டு மீளாய்வு

4.1 செயலாற்றல்

4.1.1 திட்டமிடல்

2003 யூன் 02 ஆந் திகதிய பீஈடீ.:.12 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கையின் 5.1.2 ஆம் பந்தியின் பிரகாரம் திட்டமிடப்பட்ட காலத்தின்போது நோக்கங்களையும் இலக்குகளையும் அடையக்கூடியவாறு முகாமைத்துவத்தின் பொறுப்பு தெளிவாக இனங்காணப்பட்டு செயல் நடவடிக்கைத் திட்டத்தை தயாரிக்க வேண்டும். எவ்வாறாயினும், சமர்ப்பிக்கப்பட்ட செயல் நடவடிக்கைத் திட்டம் சபையின் நிதி நிலைமையைக் கருத்திற் கொள்ளாது அடைய முடியாத நோக்கங்களையும் இலக்குகளையும் உள்ளடக்கியிருந்தது.

4.2 முகாமைத்துவச் செயற்பாடுகள்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) சபையின் நிதி நெருக்கடிக்களுக்குத் தீர்வாக 2015 ஆம் ஆண்டின் போது சிவில் விமான சேவைகள் அமைச்சினதும் பொதுத் திறைசேரியினதும் வழிகாட்டலின் கீழ் மீள வியூகப்படுத்தல் திட்டமொன்று உருவாக்கப்பட்டிருந்தது. இதன் மூலம் சபையை ஓரளவு நிலையான நிலைமைக்குக் கொண்டு வந்து வினைத்திறனுடனும் பயனுள்ளதுமான சேவையாக அதனை மாற்றமடையச் செய்து பொதுமக்களுக்கும் பணிபுரியும் ஊழியர்களுக்கும் சிறந்த எதிர்காலம் மற்றும் தரமான சேவையை வழங்கலாம் என எதிர்பார்க்கப்பட்டது. இதற்கமைய, சபையில் பல்வேறு முன்மொழிதல்களை அமுலாக்குவதற்கு எதிர்பார்த்தபோதும், 3747 ஊழியர்கள் தமது விருப்பின் பேரில் ஓய்வு பெற்றது மாத்திரமே நடைபெற்று இழப்பீடாக ரூபா 7,580,000 கொடுப்பனவு செய்யப்பட்டுமிருந்தது.

2016 ஆம் ஆண்டின் 1 ஆம் இலக்க மனிதவள முகாமைத்துவப் பிரிவு சுற்றறிக்கையின் பிரகாரம் பொருத்தமற்ற பணிகளில் ஈடுபட்டுள்ள சாரதிகள், நடத்துனர்கள் என்போர் தமது விருப்பின் பேரில் ஓய்வு பெறுவார்களாயின் அவர்கள் முன்னர் வகித்த பதவிகளுக்கு மீண்டும் விடுவிக்கப்படலாமாயினும், அதற்கு முரணாக 2017 டிசெம்பர் 31 இல் உள்ளவாறு பொருத்தமற்ற பணிகளில் ஈடுபட்டிருந்த 328 சாரதிகளும் 674 நடத்துனர்களும் என 1002 பேர பணியிலமர்த்தப்பட்டிருந்ததுடன், 1489 சாரதிகளும் நடத்துனர்களுஞ் ஒப்பந்த அடிப்படையில் ஆட்சேர்க்கப்பட்டுமிருந்தனர்.

(ஆ) சபையின் டிப்போக்களுக்கும் பிரதேச வேலைத்தளங்களுக்கும் தேவையான உதிரிப்பாகங்கள் தனியார் கம்பனிகளிலிருந்து கொள்வனவு செய்யப்பட்டிருந்ததுடன், 2017 ஆம் ஆண்டின் இறுதி அரை ஆண்டின்போது தனியார் கம்பனிகளிலிருந்து கொள்வனவு செய்யப்பட்டு களஞ்சியத்திற்கு கொண்டு வரப்பட்ட ரூபா 6,115,908 பெறுமதியான உதிரிப்பாகங்கள் மாதிரி வடிவங்களுக்கமைய அமையாததால் நிராகரிக்கப்பட்டு பிரதான களஞ்சியத்தில் களஞ்சியப்படுத்தப்பட்டிருந்தன.

(இ) மீளாய்வுக்குள்ளான கட்டணம் அமுலாகும்போது, குறித்த வரியுடன் தொடர்புடையவர்கள் சகல வரி நிலுவைகளையும் உடன்படிக்கைப் பிரகாரம் சபைக்குச் செலுத்த வேண்டுமாயினும், அவ்வாறு அறவிடாது 2018 மே 28 ஆந் திகதியளவில் 45 நாட்களுக்கான குத்தகை வாடகை, மின்சாரம் மற்றும் நீர்க் கட்டணம் என முறையே ரூபா 1,035,000, ரூபா 85,858 மற்றும் ரூபா 235,666 என நிலுவைகள் நிலவியதுடன், அதற்கமைய குறித்த மீளாய்வுக் கட்டணம் அமுலாகியபோதும், நிலுவைத் தொகையைப் பெறுவதற்கு முகாமைத்துவம் நடவடிக்கை மேற்கொள்ளவில்லை.

(ஈ) 2017 ஆகஸ்ட் 30 ஆந் திகதியன்று தனியார் கம்பனி ஒன்றிலிருந்து தலைமை அலுவலகம் கொள்வனவு செய்த ரூபா 700,350 பெறுமதியான உதிரிப்பாகங்களைப் பிரதான களஞ்சியத்தில் பெறும்போது அவை பாவனைக்குத் தகுந்ததென தலைமை அலுவலகத்தின் பரிசீலனைப் பொறியியலாளர் சான்றுறுதிப்படுத்தியதையடுத்து கம்பஹா பிரதேச வேலைத்தளத்தில் அவை ஒப்படைக்கப்பட்டிருந்தன. எவ்வாறாயினும், 2018 சனவரி 11 ஆந் திகதியன்று பிரதேச வேலைத்தளப் பொறியியலாளர் உதிரிப்பாகங்கள் மிகவும் தரமற்றவை எனச் சான்றுறுதிப்படுத்தி ரூபா 408,950

பெறுமதியான உதிரிப்பாகங்களை மீண்டும் பிரதான களஞ்சியத்திற்கு அனுப்பியமை கணக்காய்வில கேள்விக்குரியதாகியது.

(உ) மத்திய பஸ் தரிப்பிட அலுவலகப் பாதுகாப்பு பிரிவில் 06 சுடுகலன்களும் 12 ஆம் இலக்கத்தையுடைய 63 பயன்படுத்தக் கூடிய தோட்டாக்களும் 16 ஆம் இலக்கத்தையுடைய 08 பயன்படுத்தக் கூடிய தோட்டாக்களும் நேரடியாகப் பரிசீலிப்பதற்கிருந்தன. அவற்றினது விபரம் பதிவு செய்யப்பட்டிராததுடன், 2018 ஒப்டோபர் 18 ஆந் திகதிய கடிதத்தின் மூலம், முன்னாள் பாதுகாப்புப் பரிசோதனை உத்தியோகத்தரால் பொருட்களும் ஆவணங்களும் தற்போதைய பாதுகாப்புப் பரிசோதனை உத்தியோகத்தரிடம் ஒப்படைக்கப்பட்டிருந்தபோதும் 06 சுடுகலன்கள் அவற்றில் உள்ளடங்கவில்லை. மேலும், அக்கடிதத்தில் 70 பயன்படுத்தக் கூடிய தோட்டாக்கள் ஒப்படைக்கப்பட்டுள்ளதாகக் குறிப்பிடப்பட்டிருந்ததுடன், நேரடியாகவே பரிசீலிப்பதற்கிருந்த பயன்படுத்தக்கூடிய தோட்டாக்களது எண்ணிக்கை 71 ஆகும். அதில் 16 ஆம் இலக்க, பயன்படுத்தக் கூடிய தோட்டாக்கள் 08 இருந்ததுடன், ஒன்றில் கெப் இல்லாதுமிருந்தது. மேலும், முப்பது 12 ஆம் இலக்க வெற்று மூடிகளும் ஒப்படைக்கப்பட்டதாகக் கடிதத்தில் குறிப்பிடப்பட்டிருந்தபோதும் அவை பதிவு செய்யப்பட்டிருக்கவில்லை.

(ஊ) பல்வேறு நோக்கங்களுக்காக 2017 ஆம் ஆண்டின்போது முறையான அங்கீகாரமின்றி தலைமை அலுவலகம் ஆண்டின் இறுதியில் ரூபா 1,058,596,564 கூட்டுத் தொகையுடைய 21 நடைமுறைக் கணக்குகளைப் பேணியிருந்ததுடன், அந்நோக்கங்களைக் கருத்திற் கொள்ளாது கணக்குகளுக்கிடையே காசு மாற்றங்கள் செய்யப்பட்டிருந்தபோதும், அவ்வாறு மாற்றத்திற்குள்ளான காசு மீண்டும் குறித்த கணக்குகளை வந்தடையவில்லை. இவ்வாறாக பெருமளவு எண்ணிக்கையிலான கணக்குகளைப் பேணுவதன் மூலம் சபையின் நிதி நடவடிக்கைகள் சிக்கலுக்குள்ளாகியிருந்ததுடன் அதன் காரணமாக நிதிக் கட்டுப்பாடு நலிவடைந்த மட்டத்தில் காணப்பட்டது.

(எ) சபையிடம் 21 வாகனங்கள் இருந்ததுடன், கணக்காய்வுத் தினத்திலும் சகல வாகனங்களது மைலோ மீட்டர்கள் செயலற்றிருந்தன.

(ஏ) ஒரு பக்கத்தில் 10 டிக்கட்டுக்கள் வீதம் 100 டிக்கட்டுக்களைக் கொண்ட 19950 புத்தகங்கள் தொடர் இலக்கங்கள் இன்றி அச்சிடப்பட்டு 9750 புத்தகங்கள் பிரதேச அலுவலகங்களுக்கு வழங்கப்பட்டிருந்தன. அதில் 6,333 புத்தகங்கள்

மாத்திரம் களஞ்சியத்தில் திருப்பி ஒப்படைக்கப்பட்டிருந்தன. இவ்வாறு இலக்கமின்றி புத்தகங்களை அச்சிடுவது சம்பந்தமாக சபை விசாரணைகளை மேற்கொண்டு அந்த அறிக்கையை 2017 செப்டெம்பர் 14 ஆந் திகதியன்று ஸ்ரீலங்கம்/ஆ/12/2017 பிரதான பாதுகாப்பு உத்தியோகத்தரின் மூலமாக சபையின் தலைவருக்குச் சமர்ப்பித்திருந்தது. 2017 நவம்பர் 15 ஆந் திகதியன்று இது சம்பந்தமாக பிரதான தயாரிப்பு உத்தியோகத்தருக்கு குற்றப் பத்திரிகை வழங்கப்பட்டபோதும், 2018 ஆகஸ்ட் 31 ஆந் திகதிய கணக்காய்வுத் தினத்தன்றும் குறித்த பரிசீலனை மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

(ஐ) மத்திய பஸ் தரிப்பு அலுவலகத்தில உள்ள கடைகளின் பொருட்டு ஏ1167/67 ஆம் இலக்கத்தின் கீழ் பதிவு செய்யப்பட்ட 05 ஆம், 14 ஆம் இலக்க குத்தகை உடன்படிக்கைகளின் பிரகாரம், எல்எச் 32 மற்றும் எல்எச் 34 எனும் கடைகளுக்கும் கழிவறைகளுக்கும் வாடகை மற்றும் நீர் மின்சாரக் கட்டணம் என்பன குத்தகையாளர்களால் செலுத்தப்படாததால் குத்தகை உடன்படிக்கை மீறப்பட்டுள்ளபோதும், குத்தகை உடன்படிக்கையை இரத்துச் செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படவில்லை. அவ்வாறே, இதனை குறித்த நேரத்தில் குறித்தவாறு அறவிடுவதற்குத் தேவையான நடவடிக்கைகளும் எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஒ) மத்திய பஸ் தரிப்பிடத்தில் நிறுவப்பட்டுள்ள பாதுகாப்பு கெமரா முறைமை 16 கெமராக்களைக் கொண்டது. எனினும், கெமரா மூலம் பெறப்படும் காட்சிகள் தெளிவற்று இருந்ததாலும், அவற்றைப் பின்னர் விசாரணைகளின் பொருட்டுப் பெற முடியாதிருந்தமையும், சகல முக்கிய இடங்களையும் உள்ளடக்காதும் இருந்தமையால் கெமரா முறைமையைப் பொருத்தியமையால் ஏற்பட்ட நோக்கத்தை நிறைவேற்ற முடியாதிருந்தது.

4.3 செயற்பாட்டு நடவடிக்கைகள்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) பதுளை டிப்போவில் நாளாந்தம் ஏறக்குறைய 115 பஸ் வண்டிகள் பாவனையில் ஈடுபடுத்தப்படுகின்றன. எவ்வாறாயினும், குறித்த நேரத்தில் தடாக சேவையும் கீறிஸ் சேவையும் மேற்கொள்ளப்படாமையும் கிறீஸ் செலுத்தும் இயந்திரம் தொடர்ந்து பழுதடைதல் கிறீஸ் தேவைத் தாமதத்துக்கு காரணமாக அமைந்தது. கிறீஸ் சேவை முறையாக குறித்த நேரத்தில் நடைபெறாமையால்

பஸ் வண்டிகளது என்ஜின் மற்றும் ஏனைய துணைப்பாகங்கள் பெருமளவு பாதிப்புக்குள்ளாவதுடன், மீண்டும் உதிரிப் பாகங்களைப் பொருத்தி பழுதுபார்க்கப்பட வேண்டியுள்ளது. குறித்த நேரத்தில் தேவையான கிறீஸ் சேவை மற்றும் தடாக வேலை என்பன நடாத்தப்படுவதன் மூலம் பஸ் வண்டிகளை குறைந்த கிரயத்தில் வினைத்திறனுடன் நெடுங்காலம் பராமரிப்பதற்குத் தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்படவில்லை.

(ஆ) பதுளை டிப்போவில் 03 நிலத்தடி எரிபொருள் தாங்கிகள் இருப்பதுடன், அம்மூன்று தாங்கிகளையும் நேரடியாக பரிசோதித்தபோது அதில் ஒரு தாங்கியில் எரிபொருள் முற்றாக நிரம்பியிருந்தமையும் ஏனைய 02 தாங்கிகளும் பகுதியளவிலேயே நிரம்பியிருந்தமையும் தெரிய வந்தது. நிறைந்திருந்த தாங்கியில் இருந்த எண்ணெயை அறவிடுவதற்கான அளவுகோல் போதுமானதாக இல்லாதிருந்தமையால் உள்ளவாறு உள்ள அளவை கணிப்பிட முடியவில்லை. அதன் காரணமாக, 03 தாங்கிகளிலும் உள்ளவாறிந்த எண்ணெயின் அளவைக் கணிப்பிட முடியவில்லை. அவ்வாறே, தாங்கிகளில் எண்ணெய் நிரம்பி இருக்கையில் அளவிடுவதற்கு இயலுமானவாறு விதிமுறைகள் தயாரிக்கப்பட வேண்டியிருந்தது. மேலும், எரிபொருளுக்கான கட்டளையை வழங்குகையில் மீண்டும் கட்டளையை சமர்ப்பிக்கும் மட்டம், குறைந்த கையிருப்பு மட்டம், பாதுகாப்புக் கையிருப்பு மட்டம் என்பவற்றின் பொருட்டு கவனம் செலுத்தப்பட்டிருக்கவில்லை. எரிபொருள் குறைவும் மிகையும் பெருமளவு காணப்பட்டதுடன், மிகைக் கணக்கின் மீதியாகிய ரூபா 33,962,408 ஏனைய வருமானமாக இலாபத்தில் சீராக்கல் செய்யப்பட்டமை போலியான இலாபத்தைக் காட்டியமையும் அவதானிக்கப்பட்டது.

4.4 பயன்படுத்தப்படாததும் குறைவாகப் பயன்படுத்தப்படுவதுமான சொத்துக்கள்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) மத்திய பஸ் தரிப்பிட அலுவலகத்தில் இலங்கை வங்கி இயங்கும் இடத்திற்கு முன்பாக 2500 சதுர அடிக்கு மேற்பட்ட இடத்தை 2016 ஆம் ஆண்டு தொடக்கம் எழுதுகருவி வகைப் பொருட்களை களஞ்சியப்படுத்துவதற்குப் பயன்படுத்தப்படுவதுடன், அவ்விடத்தை வேறு அலுவலகங்களுக்குப் பயன்படுத்தக் கூடிய நலனை சபை இழந்திருந்ததுடன், ஏறக்குறைய 3 ஆண்டுகளாகப் பயன்படுத்தப்படாதுமிருந்தது.

(ஆ) டாட்டா பஸ்களைப் பயன்படுத்துவது நீக்கப்பட்டு ஹினோ டர்போ பஸ் வண்டிகளைப் பயன்படுத்துவதன் காரணமாக மத்திய பஸ் தரிப்பிட அலுவலகத்தில் 2011 ஆம் ஆண்டு தொடக்கம் ரூபா 117,978 பெறுமதியான 27 பொருட்கள் பயன்படுத்தப்படாதிருந்தன.

4.5 இனங்காணப்பட்ட இழப்புகள்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) 2017 யூலை 03 ஆந் திகதியன்று சபையின் பிரதான களஞ்சியம் பரிசோதனை செய்யப்பட்டபோது, களஞ்சியத்திற்குக் கொண்டுவரப்பட்ட டிக்கட் இயந்திரங்களுக்குப் பயன்படுத்தப்படும் 30,000 தர்மல் கடுதாதி சுருள்கள் தெரிவுச் செவ்வைக்குள்ளாகின. அப்போது அவை மாதிரி வடிவமைக்கேற்ப இல்லாதிருப்பது அவதானிக்கப்பட்டது. மேலும், அத்தினத்திற்கு முன்பு களஞ்சியத்திற்குக் கொண்டுவரப்பட்டு களஞ்சியத்தில் இருந்த டிக்கட் சுருள்களும் தெரிவுச் செவ்வைக்குள்ளாகின. அவையும் மாதிரி வடிவமைப்புக்கேற்ப இல்லாதிருந்தமை அவதானிக்கப்பட்டது. அதற்கமைய, 2017 யூலை 12 ஆந் திகதி வரை களஞ்சியத்தில் பெறப்பட்ட 1,623,800 டிக்கட் சுருள்கள் நீளத்தில் குறைந்தவையா என்பதைக் கணக்காய்வில் உணர முடியாதிருந்ததுடன், அதற்கமைய சபைக்கு ஏற்பட்ட இழப்பு ஏறக்குறைய ரூபா 9,711,268 ஆகும். ரூபா 7,888,000 க்கான செயலாற்றல் பிணை முறி 2017 யூலை 14 ஆந் திகதியளவில் காலாவதியாகியிருந்தபோதும், சபையானது அச்செயலாற்றல் பிணை முறியை நீடிக்காது டிக்கட் சுருள்களைக் கொள்வனவு செய்வதற்கு நடவடிக்கை மேற்கொண்டிருந்தது. இது தொடர்பாக 2017 யூலை 13 ஆந் திகதியன்றும் ஆகஸ்ட் 25 ஆந் திகதியன்றும் கணக்காய்வு ஐயவினாக்கள் வழங்கப்பட்டபோதும், கணக்காய்வு ஐயவினாக்களின் மூலம் சுட்டிக்காட்டப்பட்டவாறு அச்சந்தர்ப்பத்தில் மாதிரி வடிவத்திற்கு ஒவ்வாத டிக்கட் சுருள்கள் வழங்கப்பட்டிருந்தமையை சபையும் வழங்குநருடன் ஏற்றுக்கொண்டிருந்ததுடன் சபையின் தலைவரது ஸ்ரீலங்கம/பிர.ச.க/பொது/01/2017 ஆம் இலக்கமுடைய 2017 செப்டெம்பர் 07 ஆந் திகதிய கடிதத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுப்பதாக குறிப்பிடப்பட்டிருந்தபோதும், அதற்கமைய நடவடிக்கை எடுக்கப்படவில்லை.

(i) சபைக்கு ஏற்பட்ட இழப்பு சம்பந்தமாக பூரணமானதும் முறைமையானதுமான பரிசீலனை மேற்கொள்வதாகக் குறிப்பிடப்பட்டிருந்தபோதும், 2018 ஆகஸ்ட் 31 ஆந் திகதியளவிலும் அப்பரிசீலனை மேற்கொள்ளப்பட்டு அறிக்கை சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

(ii) பரிசீலனை நடவடிக்கைகள் முடியும் வரை கொடுப்பனவு மேற்கொள்ளப்படாது எனக் குறிப்பிடப்பட்டிருந்தபோதும், 2017 ஒக்தோபர் 23 ஆந் திகதி ரூபா 1,021,050, 2018 சனவரி 08 ஆந் திகதி ரூபா 2,382,450 என கொடுப்பனவுகள் மேற்கொள்ளப்பட்டிருந்தன.

(iii) செயலாற்றல் பிணை முறியின் காலம் 2017 யூன் 14 ஆந் திகதி முடிவடைந்தமையால், 2017 ஆம் ஆண்டில் வழங்குனர் சமர்ப்பித்த கேள்வி வைப்பாகிய ரூபா 1,000,000 வருமானத்திற்குக் கொண்டுவரப்படுவதற்கான நடவடிக்கை எடுக்கப்படும் எனக் குறிப்பிடப்பட்டிருந்தபோதும், அது 2017 ஒக்டோபர் 10 ஆந் திகதியன்று வழங்குநருக்கு விடுவிக்கப்பட்டிருந்தது. அதற்குச் சபையின் தலைவரது அங்கீகாரம் பெறப்பட்டமைக்கான தகவல் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்படவில்லை. மேலும், 2017 ஆகஸ்ட் 29 ஆந் திகதியன்று சட்டத்துறை உத்தியோகத்தரினூடாக அக்கேள்வி வைப்பை சபை அறவிடுவதற்கான வாய்ப்புண்டு எனக் குறிப்பிடப்பட்டிருந்தபோதும், சபை அதற்கமைய நடவடிக்கை எடுக்கவில்லை.

(ஆ) 1958 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க ஊழியர் சேமலாப நிதிய அதிகாரச்சட்டம் மற்றும் 1980 ஆம் ஆண்டின் 46 ஆம் இலக்க ஊழியர் நம்பிக்கைப் பொறுப்பு அதிகாரச் சட்டம் என்பவற்றின் பிரகாரம் குறித்தவாறு பங்களிப்புத் தொகையைச் செலுத்தாமையால் மீளாய்வாண்டின்போது 4 பிரதேச அலுவலகங்களுடன் தொடர்புடையதாக ரூபா 712,069,120 தண்டப் பணமாகக் கொடுப்பனவு செய்யப்பட்டிருந்ததுடன், டிசெம்பர் 31 இல் உள்ளவாறு ரூபா 96,348,905 மீதியானது கொடுப்பனவு செய்யப்பட வேண்டியுமிருந்தது.

4.6 பதவியணி நிர்வாகம்

2003 யூன் 02 ஆந் திகதிய பீஈ/12 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கையின் 9.2 ஆம் பந்திக்கு அனுசரணையாக சபைக்கான அமைப்பு அட்டவணை, ஆட்சேர்ப்பு நடைமுறை, பதவி உயர்வு நடைமுறைகள் தயாரிக்கப்பட்டு முகாமைத்துவச் சேவைகள் திணைக்களத்தின் அங்கீகாரம் பெறப்பட்டிருக்கவில்லை.

5. நிலைத்து நிற்கவல்ல அபிவிருத்தி

5.1 நிலைத்து நிற்கவல்ல அபிவிருத்தி நோக்கங்களை அடைதல்

நிலைத்து நிற்கவல்ல அபிவிருத்தி தொடர்பான ஐக்கிய நாடுகளின் 2030 ஆம் ஆண்டின் "நிகழ்ச்சி நிரலின்" பிரகாரம் சகல அரச நிறுவனங்களும் நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டுமாயினும், மீளாய்வாண்டின் பொருட்டு இலங்கை போக்குவரத்துச் சபை தனது பரப்பெல்லைக்குள் வரும் பணிகள் சம்பந்தமாக எவ்வாறு செயலாற்றுவது என்பதை அறிந்திருக்கவில்லை.

6. கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்

6.1 பொருட் கொள்வனவு மற்றும் ஒப்பந்த நடைமுறை

6.1.1 பொருட் கொள்வனவு

(அ) பொருட் கொள்வனவு வழிகாட்டிக் கோவையின் 4.2 ஆம் பிரிவின் பிரகாரம் சபை பிரதான பொருட் கொள்வனவுத் திட்டத்தைத் தயாரித்திருந்தபோதும், 4.2.1(ஆ) க்கமைய குறைந்தளவு 3 ஆண்டுகளில் எதிர்பார்க்கப்படும் பொருட் கொள்வனவு நடவடிக்கைகளைப் பிரதான பொருட் கொள்வனவுத் திட்டத்தில் நிரல்படுத்த வேண்டுமாயினும், சமர்ப்பிக்கப்பட்ட பிரதான பொருட் கொள்வனவுத் திட்டம் அவ்வாறாகத் தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) சிறு கருவிகள் மற்றும் இயந்திர சாதன பொருட் கொள்வனவு

2016 ஆம் ஆண்டின்போது ஊழியர்கள் சுய விருப்பத்தின் அடிப்படையில் ஓய்வு பெறும் நிகழ்ச்சித் திட்டத்தின் பின்னர் சபையை மீள வியூகப்படுத்துவதற்குத் தீர்மானிக்கப்பட்டிருந்ததுடன், அதன் ஒரு கட்டமாக 21 மாவட்ட அலுவலகங்கள்

மற்றும் 11 பிரதேச வேலைத்தளங்கள் என்பவற்றை அமைப்பதற்கும் உத்தேசிக்கப்பட்டிருந்தது. அவ்வாறே, ஊழியர்கள் ஓய்வு பெறுவதால் இயந்திர சாதனங்களை அதிகரிப்பதும் வினைத்திறனை அதிகரிப்பதுமான நோக்குடன் மற்றும் பழுதுபார்த்தல்களை வினைத்திறன் மிக்கதாக்குவதற்கும் இந்த இயந்திர சாதனங்களையும் சிறு கருவிகளையும் கொள்வனவு செய்வதற்கான முன்மொழிதலும் செயற்திட்டத்தின் பொருட்டு ரூபா 320,548,000 கிரயத்தில் மதிப்பீடு ஒன்று தயாரிக்கப்பட்டிருந்ததுடன், அதற்கான பணிப்பாளர் சபையினது அங்கீகாரம் பெறப்படாதிருந்தது. இது தொடர்பாகப் பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(i) பஸ் வண்டிகளது இயந்திரங்களைப் பழுதுபார்ப்பதற்குத் தேவையான சிறு கருவிகளையும் இயந்திர சாதனங்களையும் கொள்வனவு செய்வதற்குச் சபை தீர்மானித்திருந்தது. எனினும், 2017 ஆம் ஆண்டிற்கான பொருட் கொள்வனவுத் திட்டத்திலும் செயல் நடவடிக்கைத் திட்டத்திலும் குறித்த பொருட் கொள்வனவு உள்ளடக்கப்பட்டிராததுடன், வருடாந்த வரவு, செலவுத் திட்டத்திலும் நிதியேற்பாடு மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

(ii) செயற்திட்டத்திற்கான முன்மொழிவுகளில், செயற்திட்டத்தின் நோக்கம், செயற்திட்டக் காலவரை செயற்திட்டத்திற்கான திட்டம், நிதியைப் பெறும் விதம், வழங்கு பொருட்களைப் பெறும் ஆற்றல் என்னும் விடயங்கள் விபரிக்கப்படவில்லை.

(iii) 2017 சனவரி 02 ஆந் திகதிய செயற்திட்ட முன்மொழிவுடன் அதற்கான கிரய மதிப்பீடும் சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன், அக்கிரய மதிப்பீட்டில் உள்ளடங்காத ரூபா 33,434,426 பெறுமதியான 12 இயந்திர சாதனங்களுக்கான பொருட் கொள்வனவு நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்பட்டிருந்தன.

(iv) சிறு கருவிளையும் இயந்திர சாதனங்களையும் கொள்வனவு செய்தல் தொடர்பாக பொருட் கொள்வனவு வழிகாட்டிக் கைநூலின் 5.3.2 ஆம் பந்தியின் பிரகாரம் பிரசுரிக்கப்பட்ட புதினப் பத்திரிகை விளம்பரத்தில் கடனுக்குப் பொருட்கள் வழங்கப்பட வேண்டுமெனவும் கொள்வனவு செய்வதற்கு எதிர்பார்க்கப்படும் பொருட்களது விபரம் மற்றும் கேள்வி

ஆவணங்களைப் பெறுவதற்கு மீளப் பெறமுடியாத ரூபா 12,500 சபைக்குச் செலுத்தப்பட வேண்டும் எனும் தகவல்களும் உள்ளடக்கப்படாமையால் சபை எதிர்பார்த்தவாறு போட்டியின் மூலம் சிறந்த வழங்குநரைத் தெரிவு செய்யும் நோக்கம் நிறைவேறாமை அவதானிக்கப்பட்டது.

(v) சபையானது 5 தொன் எடையுள்ள 2 போர்க் லிப்ட்களை கொள்வனவு செய்வதற்குத் தீர்மானித்திருந்ததுடன், அதற்கான பெருமளவு வழங்குனர்கள் இன்மையால் கூறுவிலைக் கோரல் அடிப்படையில் பதிவு செய்யப்பட்ட வழங்குனர்கள் அல்லது தொலைபேசி பெயர்ப்பட்டியலின் மஞ்சள் பக்கங்களில் குறிப்பிடப்படும் வழங்குனர்களைத் தெரிவு செய்து கூறு விலைகளைப் பெறும் வாய்ப்பு இருந்தபோதும், இக்கொள்வனவிற்கு மேலே குறிப்பிடப்பட்ட சிறு கருவிகள் மற்றும் இயந்திர சாதனக் கொள்வனவு புதினப் பத்திரிகை விளம்பரத்தின் கீழ் கூறு விலைகளைக் கோரியமையால் ஒரு நிறுவனத்திடமிருந்து மாத்திரமே கூறு விலை பெறப்பட்டிருந்தது.

(vi) சிறு கருவிகள் மற்றும் இயந்திர சாதன பொருட் கொள்வனவு நிரலில் 5 தொன் எடையுள்ள ஒரு போர்க் லிப்டினது கிரயம் ரூபா 1,500,000 ஆக மதிப்பீடு செய்யப்பட்டிருந்ததுடன், வழங்குனர் நிறுவனம் சமர்ப்பித்தது ரூபா 7,200,000 (பெறுமதிசேர் வரி நீங்கலாக) ஆகையால் 38 சதவீதமான ரூபா 5,700,000 வேறுபாடு இருக்கையில், தொழில்நுட்ப மதிப்பாய்வுக்கு அது தொடர்பாகவோ சந்தைப் பெறுமதியையோ கருத்திற் கொள்ளாது கொள்வனவுக்கான பரிந்துரையை வழங்கியிருந்தது.

(vii) சபைக்குத் தேவையாக இருந்தது 5 தொன் எடையுள்ள 2 போர்க் லிப்ட் கொள்வனவே ஆயினும், ரூபா 7,200,000 பெறுமதியில் (பெறுமதி சேர் வரி நீங்கலாக) 5 தொன் எடையுள்ள ஒரு இயந்திரமும் 2.5 டொன் எடையுள்ள 2 போர்க் லிப்ட் இயந்திரங்களும் ஏற்பாடு செய்யப்பட்ட பெறுமதியில் கொள்வனவு செய்யப்பட்டிருந்தன. இவ்வியந்திரங்கள் கணக்காய்வுத் தினமான 2018 ஆகஸ்ட் 28 ஆந்திகதியளவிலும் பயன்படுத்தப்படாதிருந்தன.

(viii) பொருட் கொள்வனவு வழிகாட்டிக் கோவையின் 3.4 ஆம் பந்தி மற்றும் மேலதிகம் 33 என்பவற்றிலுள்ள திருத்தம் செய்யப்பட்ட வரம்புகளின் பிரகாரம் கூறுவிலைக் கோரல் அடிப்படையில் குறைந்தது முத்திரை பொறிக்கப்பட்ட மூன்று கூறுவிலைகளையேனும் பெற்று அதில் ஒரு வழங்குனரைத் தெரிவு செய்ய வேண்டுமாயினும், அதற்கு முரணாக கொள்வனவு செய்கையில் ஒரு தனியார் நிறுவனத்திடமிருந்து இயந்திரம் ரூபா 419,750 பெறுமதியான Air Compressor ஒன்றைக் கொள்வனவு செய்கையில் ஒரு தனியார் நிறுவனத்திடமிருந்து பொருட் கட்டளை எதுவுமின்றி பொருட் கொள்வனவு மேற்கொள்ளப்பட்டுள்ளதாகவும் பொருளானது களஞ்சியத்தை வந்தடைந்து 14 நாட்களின் பின்னர் பொருள் பெறப்பட்டதற்கான சான்றிதழும் வழங்கப்பட்டிருந்தது.

(ix) பிரத்தியேக கம்பனி ஒன்றினால் வழங்கப்பட்ட ரூபா 850,815 பெறுமதியான Feeler Gauge, Torque Wrench and Horning Heads எனும் 03 பொருட்களின் 13 கூறுகள் பழுதுபட்டனவாதலால் அவை நிராகரிக்கப்பட்டிருந்தபோதும், கணக்காய்வுத் தினமான 2018 ஆகஸ்ட் 08 ஆந் திகதியளவிலும் அவை களஞ்சியத்தில் இருந்ததுடன் நடவடிக்கை எதுவும் எடுக்கப்படாமலுமிருந்தது.

(x) 2018 பெப்ரவரி 06 ஆந் திகதியளவில் மால்போ டிரேடிங் பிறைவேட் நிறுவனத்திடமிருந்து கொள்வனவு செய்யப்பட்ட ரூபா 7,190,662 பெறுமதியான 3 பொருட்கள் சபையின் மாதிரி வடிவத்திற்கு ஒத்ததாக உள்ளதா என்பதைப் பரிசீலித்திருக்கவில்லை.

(இ) பஸ் வண்டிகளது என்ஜின்களைக் கொள்வனவு செய்தல் மற்றும் பொருத்துதல் தொடர்பான பொருட் கொள்வனவுக் கணக்காய்வு

(i) ஒவ்வொன்றும் ரூபா 2,383,089 வீதம் 326 பஸ் வண்டி என்ஜின்களும் ஒவ்வொன்றும் ரூபா 2,381,044 வீதம் 163 பஸ் வண்டி என்ஜின்களும் என ரூபா 1,164,997,186 பெறுமதியான 489 என்ஜின்களைச் சபை அமைச்சிடமிருந்து பெற்றிருந்தது. குறித்த பிரதேசங்களில் புதிய என்ஜின்களைப் பொருத்த வேண்டியதாக உள்ள பஸ் வண்டிகளது தகவல்களைச் சபை கோரியிருந்ததுடன், குறித்த பிரதேச பொறியியலாளர்களினால் என்ஜின் பொருத்தப்பட வெண்டிய நிரல் ஒன்று

சமர்ப்பிக்கப்பட்டுமிருந்தது. அவ்வாறாக 01 ஆம் கட்டத்தில் பரிந்துரைக்கப்பட்டவாறு பஸ் வண்டிகளில் என்ஜின் பொருத்தப்பட்டிராத 172சந்தர்ப்பங்கள் நிலவின.

(ii) புதிய என்ஜின்களைப் பொருத்துவதற்கென கழற்றப்பட்ட 124 என்ஜின்கள் பழுதுபார்த்தலின்றி பஸ் வண்டிகளில் பொருத்தப்படக் கூடிய நல்ல நிலைமையில் இருந்தன. 83 என்ஜின்கள் டிப்போ மட்டத்தில் பழுதுபார்க்கப்பட்டு களஞ்சியத்தில் வைக்கப்பட்டிருந்ததுடன், பிரதேச வேலைத் தளங்களுக்கும் ஜெர்மன் தொழில்நுட்ப பாடசாலையில் பழுதுபார்க்கப்பட்டும் 86 என்ஜின்கள் கணக்காய்வுத் தினம் வரை டிப்போக்களை சென்றடையாதிருந்தன.

(ஈ) அச்சிடல் இயந்திரத்தைக் கொள்வனவு செய்தல்

(i) சபையின் தலைமை அலுவலகத்தில் போக்குவரத்துப் பிரிவுக்கென ரூபா 397,000 பெறுமதியான பயண அனுமதிச்சீட்டுக்களை அச்சிடும் இயந்திரம் ஒன்று 2017 பெப்ரவரி 24 ஆந் திகதி தனியார் கம்பனி ஒன்றிலிருந்து கொள்வனவு செய்யப்பட்டிருந்தது. பொருட் கொள்வனவு வழிகாட்டிக் கோவையின் 8.9.1 (அ) பிரிவின் பிரகாரம் உடன்படிக்கையில் ஈடுபட்டிராததுடன், அப்பொருட்கள் களஞ்சியத்தை வந்தடைந்ததன் பின்னர் அவற்றின் மாதிரி வடிவங்களும் செயற்பாடும் தொடர்பாக பரிசீலிக்காது அவை பொறுப்பேற்கப்பட்டிருந்தன. எனினும், அவற்றைச் செயற்படுத்துகையில் குறைபாடுகள் தென்பட்டதால் குறித்த நிறுவனத்திடம் திருப்பி ஒப்படைக்கப்பட்டிருந்தபோதும், முறையான உடன்படிக்கை இன்மையால் குறித்த இழப்பை சபை பெற முடியாது போனது

(ii) 2017 ஒக்டோபர் 24 ஆந்திகதியன்று மீண்டும் 02 அச்சிடல் இயந்திரங்களுக்கான கூறு விலைகளைச் சபை கோரியிருந்தது. பொருட் கொள்வனவுத் தீர்மானமின்றி நிராகரிக்கப்பட்ட மேற்படி நிறுவனத்திடமிருந்தே 02 அடையாள அட்டைகளை அச்சிடும் இயந்திரம் ரூபா 2,550,000 க்குக் கொள்வனவு செய்யப்பட்டிருந்தது.

(உ) மத்திய பஸ் வண்டி அலுவலகத்தில் பொருட் கொள்வனவுத் திட்டமொன்று செயற்படாமை காரணமாக பஸ் வண்டிகளைப் பழுதுபார்ப்பதற்கான உதிரிப் பாகங்கள் பஞ்சிகாவத்தையில் உள்ள விற்பனை நிலையங்களிலிருந்து கொள்வனவு செய்யப்பட்டிருந்தன. இதன் காரணமாக, குறித்த நேரத்தில் குறித்த நியமப்படியும் தரத்துடனும் உதிரிப் பாகங்களை நியாயமான விலையில் பெற முடியாதிருந்தது.

(ஊ) பரிசீலனைக் குழுவால் ரூபா 7,890,664 பெறுமதியான உதிர்ப் பாகங்கள் பரிசீலிக்கப்பட்டதன் பின்னர் குறித்த மாதிரி வடிவங்களுக்கேற்ப பொருந்தி வராதுள்ளதாக இன்வொய்சு பத்திரங்களில் பரிந்துரைக்கப்பட்டிருந்தபோதும், அவ்வாறு நிராகரிக்கப்பட்ட உதிரிப் பாகங்கள் 2017 ஒக்டோபர் 17 ஆந் திகதிய அமைச்சரவைப் பொருட் கொள்வனவுக் குழுவால் கொள்வனவு செய்யப்படுவதற்குத் தீர்மானிக்கப்பட்டிருந்தது. அதற்கமைய, அந்த உதிரிப்பாகங்கள் டிப்போக்களுக்கும் பிரதேச வேலைத் தளங்களுக்கும் வழங்கப்பட்டிருந்தன.

6.2 சுற்றாடல் மற்றும் சமூகப் பொறுப்பு ஒப்படைப்பு

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) மத்திய பஸ் தரிப்பிட அலுவலகத்தின் பொறியியல் பிரிவில் போதியளவு களஞ்சிய வசதிகள் இருக்காததுடன், களஞ்சியப் பொறுப்பாளர் மிகவும் குறுகிய இடத்தில் தனது கடமைகளில் ஈடுபட்டவாறுமிருந்தார். கடமையில் ஈடுபடுவதற்குப் போதுமான வசதிகள் இருக்கவில்லை.

(ஆ) சகல வாகனங்களுக்குமான சேவை டிப்போக்களில் மேற்கொள்ளப்படுவதுடன், அதன் பொருட்டு அனுமதிப்பத்திரத்தைப் பெற்றுக் கொள்ள வேண்டுமெனவும் 2008 சனவரி 25 ஆந் திகதிய 1533/16 ஆம் இலக்க அதி விசேட வர்த்தமானியின் மூலமும் 1980 ஆம் ஆண்டின் 47 ஆம் இலக்க தேசிய சுற்றாடல் அதிகாரச்சட்டத்தின் பிரகாரமும் குறிப்பிடப்பட்டிருந்தும், சபையின் 107 டிப்போக்களில் 09 டிப்போக்கள் மாத்திரமே இவ்வனுமதிப்பத்திரத்தைப் பெற்றிருந்தன.

(இ) மத்திய பஸ் வண்டி அலுவலகம் நிலத்தடி நீர்த் தாங்கியைக் கொண்டிருந்ததுடன், அத்தாங்கி திறக்கப்பட்டவுடன் கரப்பான் பூச்சிகளும் வேறு பூச்சிகளும் 2018 யூன் 05 ஆந் திகதிய நேரடிப் பரிசோதனையின்போது காணப்பட்டதுடன், நீர்த்தாங்கியின் அருகே குளவிக் கூடுகளும் தென்பட்டன. அதற்கமைய, மத்திய பஸ் வண்டிச் சுற்றாடலில் பயன்படுத்தப்படும் நீரின் சுத்தம் பிரச்சினைக்குரியதாக விளங்கியது. அவ்வாறே, நீர்த்தாங்கியின் அருகே உள்ள கடைக்குச் சொந்தமான நீர்ப் போத்தல்களும் குடிபானப் போத்தல்களும் தாங்கிகளில் வைக்கப்பட்டிருந்தமையும் அவதானிக்கப்பட்டது.

6.3 பாதீட்டுக் கட்டுப்பாடு

2003 யூன் 02 ஆந் திகதிய பீஈடீ/12 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கையின் 5.2 ஆம் பந்தியின் பிரகாரம், பாதீடு செய்யப்பட்ட வருமான, செலவினக் கூற்று, பாதீடு செய்யப்பட்ட ஐந்தொகை, பாதீடு செய்யப்பட்ட காசுப் பாய்ச்சல் கூற்று மற்றும் செயல்நடவடிக்கைத் திட்டம் என்பவற்றிற்கு அனுசரணையாக பாதீடு செய்யப்பட்ட மூலதனச் செலவின அறிக்கை ஒன்று தயாரிக்கப்படவில்லை.

7. முறைமைகளும் கட்டுப்பாடுகளும்

கணக்காய்வின்போது அவதானிக்கப்பட்ட முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டுக் குறைபாடுகள் அவ்வவ்போது தலைவரது கவனத்திற்குக் கொண்டுவரப்பட்டன. பின்வரும் கட்டுப்பாட்டுத் துறைகளில் விசேட கவனம் தேவைப்படுகின்றது.

முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டுத் துறை		அவதானிப்புகள்
(அ) நிலையான சொத்துக் கட்டுப்பாடு	(i)	சபையினது பஸ் வண்டிகளின் விபரம் அடங்கிய பதிவேடொன்று பேணப்படாமை.
	(ii)	சபைக்குரிய காணிகள் தொடர்பான பதிவேடு பேணப்படாமை.
	(iii)	சொத்துக்கள் பாதுகாக்கப்படும் விதத்தில் பொறுப்பு ஒப்படைக்கப்படாமை

		(iv)	சொத்துக் கொள்வனவு மற்றும் கணக்கீடு என்பவற்றினது உள்ளகக் கட்டுப்பாட்டில் நலிவு உள்ளமை
		(v)	சொத்துக்கள் வருடாந்தம் சரி, பிழை பார்க்கப்படாமை.
(ஆ)	பெற வேண்டிய மற்றும் கொடுப்பனவு செய்ய வேண்டிய தொகை		பெற வேண்டிய தொகையைத் துரிதமாக அறவிடவும் கொடுப்பனவு செய்ய வேண்டியவற்றைக் கொடுப்பனவு செய்வதற்கும் நடவடிக்கை எடுக்கப்படவில்லை.
(இ)	முற்பணத் தீர்வு	(i)	முற்பணப் பதிவேடு பேணப்படாமை.
		(ii)	பெறப்பட்ட முற்பணம் பணி நிறைந்தவுடனேயே தீர்வு செய்யப்படுவதற்கான நடவடிக்கை எடுக்கப்படாமை
		(iii)	பொறுப்பான உத்தியோகத்தர் ஒருவரால் மேற்பார்வை செய்யப்படாமை.
		(iv)	காலத்துக்குக் காலம் இணக்கம் செய்யப்பட்டு தீர்வு செய்யப்படாமை.
(ஈ)	ஊழியர் பிணை வைப்புகள்		ஊழியர் பிணை வைப்புக்களுக்கான பதிவேடு பேணப்படாமை மற்றும் ஊழியரின் பிணை வைப்பு சபையின் செலவுக்குப் பயன்படுத்தப்படுதல்.

(உ)	வங்கிக் கணக்கு		நிதிப் பிரிவு அவசியமின்றி வங்கிக் கணக்குகளைப் பேணுதல், கணக்கிணக்கம் செய்யாமை, சீராக்கல் செய்யாமை என்பன
(ஊ)	பயண அனுமதிச் சீட்டு வருமானம்		பயண அனுமதிச் சீட்டு வருமானத்தைச் சேகரிப்பதற்கு தொடர் இலக்கத்துடன் கூடிய அச்சிட்ட இன்வொய்சுகளைப் பயன்படுத்தாமை
(எ)	களஞ்சியக் கட்டுப்பாடு	(i)	களஞ்சியத்தில் பெறப்படும் பொருள் பொறுப்பான உத்தியோகத்தர் ஒருவரால் மேற்பார்வையிடப்படாமை.
		(ii)	நெடுங்காலமாகப் பயன்படுத்த முடியாதுள்ள பொருட்களை அகற்றுவதற்கு நடவடிக்கை எடுக்காமை.
		(iii)	உதிரிப் பாகங்கள் மத்திய களஞ்சியத்தினூடாக டிப்போக்களுக்கு வழங்கப்படாமை
		(iv)	களஞ்சியத் தரவுகளும் டிப்போவின் தரவுகளும் கணக்கிணக்கம் செய்யப்படாமை.
(ஏ)	வாகனக் கட்டுப்பாடு	(i)	சகல வாகனங்களுக்கும் சம்பவப் பதிவேடு பேணப்படாமை.
		(ii)	வாகனத்தைப் பயன்படுத்துகையில் ஓட்ட அட்டவணைகளைத் தவறின்றி நிரப்பிப் பேணாமையும் எரிபொருளை இணக்கம் செய்யாமையும்

(iii) ஒவ்வொரு வாகனமும் கொள்வனவு செய்யப்பட்ட திகதி, பெறுமதி, பழுதுபார்த்தல் போன்ற அறிக்கைகள் தயாரிக்கப்படாமை.

(iv) வாகனங்களது மைலோமீட்டர்களைச் செயற்படுமாறு பேணாமை

(v) வாகனம் பயணஞ் செய்த தூரம், பயன்படுத்திய எரிபொருளின் அளவு, பயணத்திற்கான அங்கீகாரம் போன்றன தவறின்றிக் குறிப்பிடப்படாமை.

(vi) வாகனம் வழங்கப்படுகையில் முறையான அங்கீகாரம் வழங்கப்பட்டிராமை.

(vii) எரிபொருள் தாங்கிச் சுற்றோட்டம் முறையாக சான்றுறுதிப்படுத்தப்படாமை

(viii) எரிபொருளை அறவிடுவதற்குத் தவறற்ற அளவு கோல்களைப் பயன்படுத்தாமை.

(ix) எரிபொருள் குறைவு மற்றும் மிகை தொடர்பான கட்டுப்பாடு நலிவடைந்தமை.

எச்.எம்.காமினி விஜேசிங்ஹ
கணக்காய்வாளர் தலைமை அதிபதி